வெளியீடு : 3-7-2008

Issued : 3-7-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 31, 2008—தொகுதி 43—எண் 3

Monday the 31st March, 2008—Volume 43—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 31-3-2008

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 357-402

**2. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 402

**3. வரவு-செலவுத் திட்டம், 2008-2009,**
**பொது விவாதம்**—தொடர்ச்சி 403-491

திரு. கே.ஏ. செங்கோட்டையன் 403-424

திரு. எஸ்.கே. வேதரத்தினம் 424-436

திரு. சு. சிவராஜ் 436-445

திரு. தி. வேல்முருகன் 445-460

* திரு. ப. டில்லி பாபு 461-467

திரு. சு. குணசேகரன் 467-473

திரு. ரா. வரதராஜன் 473-476

* திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன் 476-484

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் 484-491

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 491-493

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 18

## 2008 மார்ச் 31, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு."

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**21—**

### துணை மின் நிலையம்

***38715—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாப்பாடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மார்ச் 31

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாங்குநேரி தொகுதி, பரப்பாடி பகுதியில் ஒரு புதிய 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் பரிசிலனையில் உள்ளது. தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைச் சொல்லி, எங்கள் நாங்குநேரி தொகுதியில் நமது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 145 கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதியை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அதற்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில், அதற்குரிய மின்சாரம் பல மின் நிலையங்களில் இருந்து வருவதால், பிரச்சினைகள் ஏற்பட்டு, சில கடைநிலைக் கிராமங்களுக்கு மின்சாரத் தடை ஏற்பட்டு தண்ணீர் செல்வதிலும் தடை ஏற்படுகிறது. எனவே, தயவுசெய்து ஒரே மின் நிலையத்தில் அதை அமைத்துத் தருவார்களா என்பதை உங்கள்மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியிலே, பரப்பாடி பகுதியிலே, 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மின்சார வாரியம் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டது. அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அங்கே நிலம் கிடைக்கவில்லை. ஐந்து ஏக்கர் நிலம் இருந்தால், ஒரு துணை மின் நிலையம் ஆரம்பித்துவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள் செல்வாக்குப் படைத்தவர்கள். விலையைப் பற்றிக்கூட கவலையில்லை, மார்க்கெட் விலை எவ்வளவாக இருந்தாலும், அதைக் கொடுப்பதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. அவருடைய செல்வாக்கைப்

228104
சென்னை-600 008



2008 மார்ச் 31]

பயன்படுத்தி, 5 ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுத்தால், அடுத்த மாதமே உங்களுடைய ஊரில் அடிக்கல் நாட்டு விழாவிற்கு நானே வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களது கோரிக்கையை ஏற்று, இன்னும் 30 நாட்களுக்குள் உங்களுக்கு நிலம் ஏற்பாடு செய்து தருகிறேன் என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த நேரத்தில், சிவகங்கை ஒன்றியம், அரசனூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்ற வகையில், நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தத் திட்டமும் அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தினால், சிறு, சிறு தொழில்களும் வருகிற ஒரு சூழ்நிலையில் இன்னும் அந்த இடத்திலே துணை மின் நிலையம் தொடங்கப்படவில்லை. ஆகவே, விரைந்து துணை மின் நிலையம் அங்கு அமைத்துத் தரப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குப் பிறகு அந்தத் துணை மின் நிலையத்திற்கான பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் பாதுகாப்போடு தொடர்புடைய ஒரு கேள்விக்கு நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு நல்ல விடையைத் தந்தார்கள். மதுரை மாநகராட்சியிலும் மற்றைய

மாநகராட்சிகளிலும் பூமிக்கு அடியில் மின் ஒயர்கள் பதிப்பதை இந்த அரசு விரைவில் செய்யும் என்று தெரிவித்தார்கள். இந்த அறிவிப்பு அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சிகளுக்கும் பொருந்துமா என்பதையும், அது எப்போது நிறைவேற்றப்படும்; அந்தப் பணிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, அது மதுரை மாநகருக்கும் பொருந்தும். அந்தப் பணிகள் தொடங்குவதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்து, விரைவில் அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு அரசு முயற்சிக்கும்.

*(முற்பகல் 9-35)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலேயே கடந்த ஒன்றரை ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கின்ற, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் அனுமதிக்கப்பட்ட துணை மின் நிலையத்தை கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதுகூட கேட்டபோது, பிப்ரவரி மாதமே தொடங்கப்படும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதேபோன்று, இந்த மன்றத்தில் மூன்று முறை அறிவிப்பு வெளியிட்டும், இதுவரையில், ஆர்.கே. நகர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து விரைவில் அந்தப் பணியைத் தொடங்குவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளத் தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கேள்வி கேட்டவுடனேயே, மின்சார வாரியத்தினுடைய தலைவரோடு கலந்துபேசி, அதற்கான நிதி ஒதுக்கீடு அனைத்தும் செய்து முடித்தாகிவிட்டது. ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு





நிதியமைச்சர் அவர்கள் துறைமுகம் பகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக கடந்த முறை இருந்தபோது, ஏறக்குறைய இரண்டு துணை மின் நிலையங்கள் சுமார் 90 கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டு வட சென்னையிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்ததாகவும், இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு சொன்ன அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு வாரியம் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு தலைமைப் பொறியாளரையும் குறிப்பிட்ட அந்தப் பகுதியினுடைய பொறியாளர்களையும் சந்தித்துப் பேசி, விரைவிலே அந்தப் பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. மு. பரஞ்ஜோதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

## குடிநீர்

***6893—திரு. மு. பரஞ்ஜோதி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியத்தில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை. ஆம். ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியத்திலுள்ள குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும்பொருட்டு ரூ.13 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திட்டம் தற்போது துவக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

[2008 மார்ச் 31

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிகண்டம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது 150 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கக்கூடிய ஒரு திட்டமாகும். அந்தத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதற்கு அந்தப் பணிகளை முடிப்பதற்காக 11 பிரிவுகளாக, அதாவது 11 ரீச்சுகளாகப் பிரித்து, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால், தற்போது அதிலே நான்கு ரீச்சுகளுக்கு இதுவரை டெண்டர் முடிவு செய்யப்படவில்லை. அதற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தாலே இந்த நிமிடம் வரை ஒப்புதல் வழங்கப்படவில்லை. அடுத்த இரண்டு ரீச்சுகளுக்கு, இதுவரை 9 அழைப்புகள் கொடுக்கப்பட்டும், இதுவரை யாரும் டெண்டரிலே கலந்துகொள்ளவில்லை. இப்படி 6 டெண்டர்கள் அங்கே முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன. மீதியிருக்கக்கூடிய 5 பாகங்களுக்கு மட்டும் பணிகள் அதாவது, பி.வி.சி. பைப் அமைக்கும் பணி மிக மெதுவாக, மெத்தனமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்த மணிகண்டம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த அரசு முடக்கிவிடாமல் அதிலும் விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துகள் அத்தனையும் உண்மை. இந்தத் திட்டப் பணிகளுக்கு உங்களுடைய அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற நேரத்தில் 7-10-2005-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 23-11-2005 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்குக் கடைசி நாளாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், 14-12-2005 வரை நீட்டிப்புச் செய்யப்பட்ட முதல் அழைப்புக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்பப்புள்ளிகளின் நிபந்தனைகளுக்குத் தகுதி பெறாமலேயும், ஒப்புந்தப்புள்ளிச் செல்லுபடி ஆகும் காலத்தை நீட்டிப்புச் செய்து தர வேண்டுமென்று ஒப்பந்தக்காரர்கள் ஒப்புக்கொள்ளாததாலும், அது நிராகரிக்கப்பட்டது. 12-7-2006 தேதியிட்ட இரண்டாவது அழைப்பிற்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப நிபந்தனைகளுக்குத் தகுதி பெறாமலேயும் ஒப்பந்தம்



2008 மார்ச் 31]

நிராகரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 14-9-2006 இறுதி தேதியிட்ட மூன்றாவது, 15-12-2006 இறுதி தேதியிட்ட நான்காவது அழைப்புகளில் ஒப்பந்தக்காரர் எவரும் பங்குபெறவில்லை. 15-2-2007 இறுதி தேதியிட்ட ஐந்தாவது அழைப்பிற்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விகிதம் அதிகமாக இருந்த காரணத்தினால் அது நிராகரிக்கப்பட்டது. எனவே, திட்டப் பணிகள் 11 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இதில் நீர் உறிஞ்சும் கிணறுகள் அமைக்கும் பணிகள் மற்றும் தலைமையிடப் பணிகள் உள்ளிட்ட 5 தொகுப்புகளுக்கு நவம்பர் 2007-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சிய 6 தொகுப்புகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு பணிகளைத் துவக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. திட்டப் பணிகளை டிசம்பர் 2008-க்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டம் முடிந்தவுடன் சுமார் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் மக்கள் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் காவிரி குடிநீர் பெற்றுப் பயனடைவர்.

(முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணிகண்டம் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து இதுபோன்ற தடைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, 150 கிராமங்கள் குடிநீர் வசதி பெறுவதற்குரிய இந்தத் திட்டத்தை விரைவாக இந்த அரசு முடிக்குமா என்பதைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சியில் விடுபட்டுப்போன எல்லாப் பணிகளையும் இந்த ஆட்சிதான் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## நெற்களம்

***31213—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், குருவிமலை, வெண்மணி, எடப்பிறை, துரிஞ்சிகுப்பம், கட்டிப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், குருவிமலை, வெண்மணி, எடப்பிறை, துரிஞ்சிகுப்பம், கட்டிப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் குருவிமலை ஊராட்சிக்குப் புதிய உலர்களம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்து, 2008-2009 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் உலர்களம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏனைய ஊராட்சிகளில் வரும் ஆண்டுகளில் படிப்படியாக உலர்களம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டிருந்த எங்கள் பகுதியினுடைய கோரிக்கையை முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்தியதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு மிகவும் சிறப்பாக எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே வேளாண்மைத் துறை





அமைச்சர் அவர்கள், எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய 300 ஏக்கர் காலி இடத்திலே விவசாயக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்ற பணிவான கோரிக்கையை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி என்றால் உயர் கல்வித் துறை அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். வேளாண்மைத் துறையால் தெரிவிக்க இயலாது. தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1997-98 ஆம் ஆண்டு முதல் உலர்களங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே போளூர் தாலுகாவில் உள்ள அவருடைய கோரிக்கையை ஏற்று முழுமையாக திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரை 61 உலர்களங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், அவருடைய கோரிக்கையை ஏற்று எல்லா உலர்களங்களும் நடப்பாண்டிலே கட்டித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

## மதகு

***5037—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், வெண்பாக்கம் பொதுப் பணித் துறை ஏரி மதகு இந்த ஆண்டு புதுப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், வெண்பாக்கம், பொதுப் பணித் துறை ஏரி மதகு-I-ஐப் புதுப்பிக்கும் பணி அடுத்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

[2008 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு இந்தப் பணி துவக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது 2008-2009 ஆம் ஆண்டிலா அல்லது 2009-2010 ஆம் ஆண்டிலா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதேபோன்று, இந்த ஏரி மட்டும் அல்லாமல் என்னுடைய தொகுதியிலே ஏறக்குறைய இன்னும் 10, 15 ஏரிகளின் மதகுகள் உடைந்திருக்கின்றன. குறிப்பாக, ஈச்சங்காணை ஏரி, வழுதூர் ஏரி, திம்மூர் ஏரி, சோகண்டி ஏரி, அடைவளாகம் ஏரி, தாழம்பேடு ஏரி, குன்னவாக்கம், பாண்டூர், பட்டிக்காடு ஏரிகளில் எல்லாம் மதகுகள் உடைந்திருக்கின்றன. அதேபோன்று, தமிழகத்தில் பெரும்பாலான ஏரிகள் நிரம்பாததற்குக் காரணம்--ஏரிகள் நிரம்புகின்றன--பக்கத்து ஏரிகளுக்குச் செல்கின்ற நீர்வரத்துக் கால்வாய்கள் சரியாக இல்லாததாலே தண்ணீர் சரியாகச் சென்று சேர்வதில்லை. எனவே, இந்தக் கால்வாய்களை ஒட்டுமொத்தமாக சீரமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாண்டு என்றால் எப்போது என்று கேட்கிறார், மாண்புமிகு உறுப்பினர். அவருக்கு வேண்டுமானால் தேதியை, என்றைக்கு ஆரம்பிக்கிறேன் என்றே சொல்லிவிடுகிறேன். மற்றபடி, குளங்கள், ஆறுகள், வாய்க்கால்கள் எல்லாம் இன்னும் தூர் வாரவில்லை என்றால், தூர் வாரப்படும் என்று பொதுவாகச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். அனைத்து ஏரிகளும், குளங்கள் தூர் வாரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



2008 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூரைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். ஆகவே, அவருடைய மேலான கவனத்திற்கு இந்தக் கேள்வியின்மூலம் கொண்டு வர விரும்புவது, திருப்பூர் மாநகரமாகவும், மாவட்டத் தலைநகரமாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களாலே அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், நகரத்தின் மையத்திலே பல ஓடைகள், 6 ஓடைகள் நகரத்தின் மையப் பகுதிகளிலே ஓடுகின்றன. நொய்யல் ஆறும் நகரத்தின் மையத்திலே ஓடுகிறது. ஆகவே, அவையெல்லாம் அதிகமாக மாசுபட்டு இருக்கிற காரணத்தினால், தடுப்புச் சுவர்கள் எழுப்பி அந்த ஓடைகளையும், நொய்யல் ஆற்றையும் தூய்மைப்படுத்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தங்கள் துறையின்மூலம் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியாக இருந்தாலும் சரி, சாதாரண நகராட்சியாக இருந்தாலும் சரி, பொதுப் பணித் துறைக்குச் சம்பந்தப்பட்ட கால்வாய்கள், ஓடைகளைச் சீரமைக்க வேண்டும் என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை; நிதிநிலைமைக்கேற்ப செய்யப்படும். ஆனால், திருப்பூரில் நாங்கள் கால்வாய்களைச் சுத்தப்படுத்த வேண்டும், சாயப் பட்டறை நீரை அதில் விட வேண்டும், அது நேராக வந்து ஒரத்துப்பாளையத்திலே நிற்க வேண்டும், தண்ணீரை நாங்கள் எடுக்க முடியாமல் போக வேண்டும். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிகாரம் காண வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு பொறுப்பேற்ற பிறகு, மிகப் பெரிய ஒரு சாதனையாக தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய கல்லணைக்

[2008 மார்ச் 31

கால்வாய்களை சீர் செய்யக்கூடிய திட்டத்தை, 150 கோடி ரூபாயில் மிகச் சிறப்புமிக்கத் திட்டத்தை இப்போது அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது, பட்டுக்கோட்டை, பேராவூரணி கடைமடைப் பகுதிகள் மிகுந்த அளவில் பயன்பெறும். அந்தத் திட்டத்தில் தம்பிக்கோட்டை வடகாடு வாய்க்கால் என்ற வாய்க்கால் மட்டும் விடுபட்டிருக்கின்றது. அதையும் நமது மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் அந்தப் பணியிலே சேர்க்க ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையைச் சேர்க்க அந்த D.P.R. தயார் செய்கிறவர்களிடத்தில் அரசின்மூலம் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் காமராஜர் ஆட்சியின் காலத்தில் ஜகன்நாதன்கோம்பை என்ற ஒரு சிறிய அணை கட்டப்பட்டு, கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தச் சிறிய அணையை பெரிதுபடுத்தி, அதனுடைய கால்வாய்களைச் செப்பனிட்டால், திப்பிலிசுகந்தி ஏரி, நாயக்கன் ஏரி, புது ஏரி, வெங்கடேசன் ஏரி, நாகதானம்பட்டி ஏரி, ஏலகிரி ஏரி ஆகிய ஏரிகளுக்கு நீர்ப் பாசனத்தைக் கொண்டுச் செல்ல முடியும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்; ஒரு நல்ல திட்டம் அது. நல்ல மனதில் அது பட்டிருக்கிறது. ஆனால், திரு. ஆறுமுகம் மாதிரி அவர் கேள்வியாகப் போட்டிருந்தால் விவரமாகப் பதில் சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 31]

**25—**

## விரைவுப் பேருந்து

***33685—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சென்னைக்கும் வத்திராயிருப்பிலிருந்து சென்னைக்கும் விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலமாக ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக சென்னைக்கு 13 பேருந்துகள் கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டு வருகின்றன:

தடம் எண் 184, செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக 10 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தடம் எண் 290, சுரண்டையிலிருந்து சென்னைக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக ஒரு வண்டியும், தடம் எண் 789, பத்தினம்திட்டாவிலிருந்து சென்னைக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக இரண்டு வண்டிகளும், ஆக 13 வண்டிகள் அந்த வழியாக இயக்கப்படுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சென்னைக்குச் செல்ல விரும்பும் பயணிகள் மேற்படி பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளப் போதுமானதாக உள்ளது. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விருதுநகர் மண்டலம்மூலமாக இயக்கப்படும் நகரப் பேருந்துகளின் வசதியைப் பயன்படுத்தி வத்திராயிருப்பிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து அதன் வழியாகச் செல்லும் மேற்படி விரைவுப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி சென்னைக்கு வரலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், நீங்கள் கேளுங்கள்.

[2008 மார்ச் 31

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், தோழர் இராமசாமி அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்தும், வத்திராயிருப்பிலிருந்தும் நேரடியாகச் சென்னைக்குச் செல்ல பேருந்து வசதி கேட்டிருக்கின்றார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்பதோடு, அத்துடன் சேர்த்து என்னுடைய கேள்வி ஒன்றையும் இணைத்துக்கொள்கின்றேன். குறிப்பாக எல்லாத் தொகுதிகளின் தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்குப் பேருந்து வசதி செய்து தரவேண்டும். என்னுடைய தொகுதியில், அமைச்சர் சொல்வதைப்போல அந்த வழியாகப் பேருந்து சென்னைக்கு வருவதில்லை. ஆகவே, ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியிலிருந்தோ, கீரமங்கலத்திலிருந்தோ அல்லது கறம்பக்குடியிலிருந்தோ ஏதாவது ஒரு பேருந்தை சென்னைக்கு இயக்க வேண்டும். அதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஏற்கெனவே கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக அவருடைய பகுதிக்கு நிறைய புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. மேலும், நேரடியாக சென்னைக்கு பேருந்து விடவேண்டுமென்று கேட்கின்றார்கள். அதையும் பரிசீலித்து ஆலங்குடியிலிருந்து நேரடியாக சென்னைக்கு வருவதற்கு, ஒரு பேருந்தை விடுவதற்கு முயற்சி எடுக்கிறோம். அதேபோல, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து நேரடியாக சென்னைக்கு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பயணிகளின் அடர்வு சரியாக இருக்குமானால், அந்தப் புதிய வழித்தடத்தையும் தொடங்க முயற்சி எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம். மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 31]

**26—**

## பத்திரப் பதிவு அலுவலகம்

***11224—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலை பகுதியில் துணைப் பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளித்தலை தொகுதி, தோகைமலை கிராமத்தில் புதியதாக துணைப் பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலைப் பகுதி 20 ஊராட்சிகளையும், 19 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கியது. சுமார் 85 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியின் மொத்த பரப்பளவு 302 சதுர கி.மீ. ஆகும். தோகைமலைப் பகுதி 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, திருச்சி மாவட்டத்திலுள்ள திருச்சிக்கும், மணப்பாறைக்கும், கரூர் மாவட்டத்திலுள்ள குளித்தலைக்கும், நங்கவள்ளிக்கும் பொதுமக்கள், பத்திரப் பதிவு பணிக்காக சுமார் 40 கி.மீ. கடந்து சென்றுகொண்டிருக்கின்றார்கள். மேலும், தோகைமலைப் பகுதியிலே 4 ஊராட்சிகளில் அரசு கல் குவாரிகள் இருக்கின்றன. கல் குவாரிகளில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் அங்கே கல்லுடைக்கும் உரிமையைப் பெற்று, அகல ஜல்லி கல்லுடைக்கும் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். பத்திரப் பதிவு செய்வதற்கு அவர்களுக்கு வீண் அலைச்சலும், காலதாமதமும் ஆகின்றது. பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மகளிர் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கின்ற,

இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற, முத்தமிழறிஞர், முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய முதல் தொகுதியான குளித்தலை தொகுதி, தோகைமலைப் பகுதியில் துணைப் பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோகைமலை கிராமத்தைப் பொறுத்தமட்டில், இதுவரை திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டத்தில் உள்ள 11 சார் பதிவகங்களில் ஒன்றாக மணப்பாறை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. தோகைமலை கிராமத்தைப் பொறுத்தமட்டில், 2005 ஆம் ஆண்டு 40,20,300 ரூபாய்க்கான சொத்து மதிப்புள்ள 112 ஆவணங்களும், 2006 ஆம் ஆண்டு 42,10,680 ரூபாய்க்கான சொத்து மதிப்புள்ள 108 ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதிய சார் பதிவாளர் அலுவலகம் தோகைமலையில் அமைக்கப்பட்டால், ஆண்டொன்றுக்கு சுமார் ஆயிரம் ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். எனவே, அதற்கான வாய்ப்புகள் வருகின்றபோது, வருங்காலத்தில் அது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று கருதுகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் வருங்காலத்தில் என்னுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம் என்று சொன்னதற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை சட்டப் பேரவைத் தொகுதியில் இருக்கின்ற வேலூர் துணைப் பத்திரப் பதிவு அலுவலகம் 2005-2006 ஆம் ஆண்டு 96.91 விழுக்காடு வருவாய் இலக்கை அடைந்துள்ளது. இன்றைய நிலையிலே 2006-2007 ஆம் ஆண்டு 52.65 விழுக்காடு இலக்கை அடைந்து வருவாய் மிகக் குறைந்த நிலையில் இருக்கிறது. அதற்கான காரணத்தை





ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இரண்டு மாதங்களுக்கு முன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று துறையினுடைய அதிகாரிகள் ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அதிக வருவாய் ஈட்டிக்கொடுக்கின்ற ஒரு துறையாக பதிவுத் துறை இருக்கின்றது. ஆனால், இன்றைக்கு பெரும்பாலான இடங்களில் பதிவுத் துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. குறிப்பாக, எங்களுடைய திருத்தணி தொகுதியை எடுத்துக்கொண்டோமேயானால் அங்கே மணவாளநகர், திருவாலங்காடு போன்ற பகுதிகளில் வாடகைக் கட்டடத்திலே இயங்குகிறது. அங்கே வருகின்றவர்களுக்குப் போதுமான வசதிகள் அந்தப் பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களில் செய்து கொடுப்பது இல்லை என்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, அரசு பொதுவான ஒரு முடிவெடுத்து வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற அத்தனை பதிவுத் துறை அலுவலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 568 சார் பதிவாளர் அலுவலகங்களில் சொந்தக் கட்டடத்தில் 311 சார் பதிவாளர்

அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்தைப் பொறுத்தமட்டில், 257 சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் முதல் ஆண்டில் 10 புதிய கட்டடங்களும், கடந்த ஆண்டு 2006-2007 ஆம் ஆண்டில் புதியதாக மேலும் 15 கட்டடங்களும் கட்டப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில், வாணியம்பாடியில் ஒரேயொரு சார் பதிவாளர் அலுவலகம் மட்டும்தான் கட்டப்பட்டது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## யோகாசனம்

***30543—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் யோகாசனத்தினைக் கட்டாயப் பாடமாக்கி ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் உடற்கல்விக்கு என்று வாரம் ஒன்றுக்கு இரண்டு பாட வேளைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. உடற்கல்வி வகுப்புகளில் யோகாசனமும் கற்றுத் தரப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.





**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிறைய மாணவர்கள் மன அழுத்தத்தாலே, மன இறுக்கத்தாலே mental depression-ஆல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கின்ற வகையில், ஈசா யோகா மையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து எப்படி, நாம் மரம் நடுகின்ற இயக்கத்தின்மூலம் மரங்களை நடுகின்றோமோ, அதைப்போல, ஈசா யோகா மையம், உலக சமுதாய சேவை மையம், அறிவுத் திருக்கோயில் போன்ற அமைப்புகள்மூலமாக அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, எல்லா பள்ளி, கல்லூரி அளவிலே யோகாசனத்தைக் கட்டாயப் பாடமாக்கி, தனிப் பாடமாக அமைக்க நடவடிக்கை எடுத்து, மாணவர்களுடைய மன இறுக்கத்தைப் போக்க, அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள் சொல்லி இருக்கின்ற கருத்துகளை இந்த அவையிலே அனைவரும் முழுமனதாக ஏற்றுக்கொள்வோம். எப்படி மரம் நடும் முயற்சியிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இன்றைக்கு முன்னுதாரணமாக அனைவருக்கும் திகழ்கிறாரோ, அதைப்போல இந்த 84 வயதிலும் தினந்தோறும் யோகா பயிற்சியினை மேற்கொண்டு 24 வயது இளைஞராக உழைக்கக்கூடிய ஓர் ஆற்றலை அவர் பெற்றிருக்கின்றார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்திலே இருக்கின்ற நாம் நன்றாக அறிவோம். எனவே, அவருடைய தலைமையில் இயங்கக்கூடிய இந்த அரசு தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய வருங்கால சந்ததியினர் குறிப்பாக மாணவர்கள் தொடர்ச்சியாக இந்த யோகா பயிற்சியினைப் பெறவேண்டும், புத்துணர்ச்சியைப் பெறவேண்டும். யோகா பயிற்சியை தொடர்ந்து செய்தால் மன இறுக்கத்தில் இருந்து விடுபட முடியும். அதைப்போல, உடல் ஆரோக்கியமாக இருக்கக்கூடிய வழிவகை ஏறபடும் என்ற வகையிலே கடந்த ஆண்டே நாங்கள் கல்வி மானியக் கோரிக்கையில் இதைப் பற்றித் தெரிவித்தோம். அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஏறத்தாழ 300 பயிற்சி ஆசிரியர்கள், பயிற்றுனர்கள் மேலும் 3,500 உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் ஆகியோருக்கு முதலிலே யோகா பயிற்சியைக் கொடுத்து அதற்குப் பிறகு, ஆழியாறு யோகா மையத்திலே இருக்கக்கூடிய கருத்தாய்வாளர்களையும் உடன்

எடுத்துக்கொண்டு, இதுவரை ஏறத்தாழ 1,10,000 ஆசிரியர்களுக்கும் இந்த யோகா பயிற்சியை நாங்கள் கொடுத்திருக்கிறோம். இதற்காக இதுவரை ஏறத்தாழ 1,61,00,000 ரூபாய் அரசின் சார்பாக நாங்கள் செலவிட்டிருக்கிறோம். வரக்கூடிய ஆண்டிலும் ஏறத்தாழ 80 ஆயிரம் ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக நாங்கள் யோகா பயிற்சிகள் வழங்க இருக்கிறோம். வரக்கூடிய கல்வி ஆண்டிலிருந்து பாட வேளைகளிலே யோகாவையும் ஒரு முக்கியமான, கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்து, தொடர்ச்சியாக மாணவர்களுக்கும் இதைக் கொடுக்கக்கூடிய அளவில் தனிப் பாட வேளைகளை ஒதுக்குவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு அமைச்சருடைய நல்ல அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரும் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் இரண்டு பேரிலே யார் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்கு பள்ளிகளில் 2 பாட வேளை உடற்கல்வி இருப்பதாகவும், அந்த உடற்கல்வி பாட வேளையில் யோகா பாடங்கள் மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதாகவும் ஒரு அறிவிப்பினைச் செய்ததற்கு நாங்கள் மனதார வரவேற்கிறோம். ஆனால் இன்றைய சூழ்நிலையில், சர்க்கரை நோய், இருதய நோய் போன்றவை எல்லாம் வயதானவர்களுக்கு வருகிற காலம் எல்லாம் மாறி, இப்பொழுது பள்ளிக்கூட மாணவப் பருவத்திலேயே வரக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். இதற்கு உணவுப் பழக்கங்களும் அதைப்போல உடற்பயிற்சி இல்லாததும் ஒரு மிகப் பெரிய காரணமாக அமைந்து விடுகிறது. உடல் பருமன் பேராபத்து என்று சொல்கிறார்கள். ஆகவே, உடல் பருமன் இல்லாமல் உடலை மெல்லியதாக வைத்துக்கொள்வதற்கு இந்த உடற்பயிற்சி, யோகா மிக, மிக அவசியமாகிறது. ஆனால், இன்று இரண்டு பாட வேளைகள் இருந்தாலும்கூட, கடந்த காலங்களில் உடற்பயிற்சி வகுப்புகளில் மாணவர்கள் எல்லாம் பயிற்றுவிக்கப்பட்டு, கைப் பந்துப் போட்டி,



கால் பந்துப் போட்டி, மென்பந்துப் போட்டி, ஈட்டி எறிதல், ஓட்டப் பந்தயம், குண்டு எறிதல் போன்ற பல்வேறு போட்டிகளிலே பயிற்சி பெற்று கடந்த காலங்களிலே மாநில அளவிலே ஏன் இந்திய அளவிலேகூட சென்று பரிசுகளை வென்ற காலம் எல்லாம் இருந்தது. ஆனால், அந்த நிலை இப்போது இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்களை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த உடற்பயிற்சியை, உடற்கல்வியைக் கட்டாயப் பாடமாக்கி எல்லா மாணவர்களும் விளையாட வேண்டும், உடற்பயிற்சி கட்டாயம் பெற வேண்டும் என்கிற ஒரு கட்டாயத்திற்கு மாணவர்களை அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புவதோடு, இந்த 2 பாட வேளைகள் என்பது கூடுதலாக்கப்பட்டு இனி மாலை நேரங்களில் கட்டாயம் விளையாட வேண்டும், யோகா செய்ய வேண்டும் என்று அதை வலியுறுத்துவீர்களா என்பதை அறிய விரும்புவதோடு, நிதிநிலை அறிக்கைக்கான நீண்ட காலக் கூட்டத் தொடர் இது; இந்தக் கூட்டத் தொடரிலே நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் இங்கே யோகா பயிற்சியை அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய மணி அவர்கள் கூறி இருப்பதைப் போல பள்ளிகளில் உடற்கல்விக்கு ஒரு மிகுந்த முக்கியத்துவத்தை இந்த அரசு கொடுத்துக்கொண்டு வருகிறது. அவர் சொல்லி இருப்பதைப் போல பள்ளியினுடைய பாடத் திட்டங்கள், Text Books என்று சொல்லக்கூடிய பாடப் புத்தகங்களில் மாத்திரம் இந்தக் கல்வி அடங்கி விடாமல், அதையும் தாண்டி ஒரு விரிவுபடுத்தப்பட்ட கல்வி முறை வேண்டும் என்கிற அடிப்படையிலே பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அதிலும் மிகக் குறிப்பாக, கடந்த 2 ஆண்டு காலத்திலே மாத்திரம் பார்த்தீர்கள் என்று சொன்னால், உடற்கல்வி ஆசிரியர் மாத்திரம் 2006-2007-லே 168 பேர் நியமித்தோம். 2007-2008 இந்த ஆண்டிலே 439 பேர், ஆக மொத்தம் 607 பேர் புதிதாக உடற்கல்வி ஆசிரியர்களை நியமித்து, இந்த ஆட்சியிலே அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னால், அடிப்படை உடற்கல்விக்குக் கொடுக்கக்கூடிய முக்கியத்துவத்தை இந்த அரசு முழுமையாக உணர்ந்திருக்கிறது. வரக்கூடிய கல்வி ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மணி

அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல இன்னும் விரிவாக ஆய்வினை எடுத்துக்கொண்டு கூடுதலான பாட வேளைகளிலே இந்த உடற்கல்வியை தொடர்ந்து நடத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு யோகா கற்றுக்கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு யோகம் இருந்தால் யோகம் கிட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு யோகா பயிற்சி கற்றுத் தரப்படுமா என்று கோ.க. மணி அவர்கள் கேட்டார்கள். யோகா பயிற்சி செய்ய வேண்டும் என்றால் 5-30 மணிக்கெல்லாம் எழுந்துகொள்ள வேண்டும். எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் 5-30 மணிக்கு எழுந்துகொள்வார்கள் என்று எனக்குத் தெரியாது. அப்படி எழுந்து கொள்ளத்தயாராக இருந்தால் அண்ணா நகரிலே ஆசன ஆண்டியப்பன் என்று மிகப் பெரிய ஆசன நிபுணர் ஒருவர் இருக்கிறார். அவர் ஏற்கெனவே அண்ணா சித்தா மருத்துவக் கல்லூரியிலே பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார். அவரை 5 மணிக்கெல்லாம் Hostel-க்கு வரச்சொல்லி, குறைந்தது 10 எம்.எல்.ஏ.-க்களாவது அதைக் கற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால், அந்தப் பயிற்சி தருவதற்கு நான் ஏற்பாடு செய்து தருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. Supplementary question எல்லாம் கிடையாது. சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி. (குறுக்கீடு) திரு. மணி, என்ன சொல்லுங்கள்.

முற்பகல் 10-05

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள், எல்லோருக்கும் வாய்ப்பு அளிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த முறை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த நேரத்தில், இந்த மாமன்றத்தில் ஓர் அறிவிப்பினைச் செய்தார்கள். இந்தச் சர்க்கரை வியாதி வராமல் இருப்பதற்குக் காலையில் தூங்கி எழுந்தவுடன் ஒரு லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும், இது சர்க்கரை



நோய் வராமல் தடுக்கும் என்று சொன்னார்கள். அதை நாங்கள் எல்லாம் தொடர்ந்து பின்பற்றிக்கொண்டு இருக்கிறோம். அவருடைய அரிய ஆலோசனையைப் பின்பற்றிக்கொண்டு இருக்கிறோம். இதனை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உடற்கல்வி ஆசிரியர் நியமனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்று பரவலாக பெரும்பாலான பள்ளிகளில், உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் காலியாகவே இருக்கிறது. ஆகவே, வரக்கூடிய கல்வி ஆண்டில் படித்துவிட்டு வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில், நடுநிலைப் பள்ளி முதல் எல்லாப் பள்ளிகளிலும் உடற்கல்வி ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு நிச்சயமாக வரக்கூடிய ஆண்டுகளில் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சர்க்கரை நோய் என்று குறிப்பிட்டார். அதைச் சர்க்கரைக் குறைபாடு என்றுதான் சொல்ல வேண்டும். சர்க்கரை நோய் என்று சொல்லக்கூடாது. மேலும், ஒரு லிட்டர் தண்ணீர் குடிப்பதன்மூலம் சர்க்கரை நோய் வராது என்பதும் தவறான கருத்து. காரணம், தாய் தந்தைக்கு யாருக்காவது இருந்தால், கண்டிப்பாக அந்தக் குடும்பத்தில் உள்ளோருக்கு வந்தே தீரும். ஆகவே, நம்மைப் பொறுத்தவரைக்கும் சர்க்கரை குறைபாட்டைப் பற்றி தயவுசெய்து நமக்குத் தெரியாத கருத்துகளை இந்த அவையில் கூறவேண்டாம் என்பதைத் தங்கள்மூலமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ.. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யோகாசனம் செய்தால் யோகம் வரும் என்கிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட இப்போது பதிலளிக்கும்போது சொன்னார்கள். அது என்ன வகையான யோகம் என்று அமைச்சர் கூறுவாரா? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, யோகா செய்தால் யோகம் வரும் என்று நான் சொன்னேன். யோகம் என்றால் என்ன என்று பார்த்தால், கர்ம யோகம், ஞானயோகம், பக்தி யோகம், ராஜ யோகம் என்று பல யோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய இதிகாசங்களில்கூட இந்தக் கருத்துகள் இருக்கின்றன. அது ஒருபுறம் இருந்தாலும்கூட, உங்களுக்கு என்ன யோகம் வேண்டுமென்று நினைத்தால், நீங்கள் மனதளவிலே எதைக் கேட்கிறீர்களோ அது வரும். குறிப்பாக உங்களுக்குக் கொஞ்சம் கோபம் குறைவாக வரும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் அவர்களுக்குக் கொஞ்சம் யோகம் இருந்தால் அவர்களுக்கு ராஜ யோகம்கூட வரும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எந்த வகையான யோகம் வரும் என்று அமைச்சரைப் பார்த்துக் கேட்கின்றார். அது பரம ரகசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (சிரிப்பு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

### மின் வேலி

***9990—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், சிற்றார் கோட்டத்தில் காட்டு யானைகளின் வருகையைத் தடுப்பதற்காக மின்சார தடுப்பு வேலி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





கன்னியாகுமரி மாவட்டம், சிற்றார் கோட்டத்தில், காட்டு யானைகள் வருவதைத் தடுப்பதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் 10 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கின்ற பணி நடைபெற்று முடிவுற்றுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் 31 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கும் பணி நடைபெற்று முடிகின்ற தருவாயில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் குளிர்ச்சியான பதிலைக் கூறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அதிர்ச்சியான பதிலைத் தந்திருக்கிறார்கள். அவர் குறிப்பிட்ட 10 கி.மீ. ஏற்கெனவே வேலை முடிந்து இருக்கிறது. நான் இங்கே குறிப்பிட்டு இருக்கக்கூடிய சிற்றார் கோட்டத்தில் அது அமையவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சிற்றார் கோட்டத்தில் அரசு இரப்பர் தோட்டம் அமைந்து உள்ளது. இரப்பர் தோட்டம் யதார்த்தமாக வனத் துறையினுடைய ஒரு பகுதியாகவே இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, காட்டு யானைகள் அங்கே வருவது இயல்பு. குறிப்பாக, சபரிமலை சீசன் காலத்தில் அதிகமான காட்டு யானைகள் வந்து அங்கே அட்டகாசம் செய்கின்றன. அரசு இரப்பர் தோட்டத்தில் வேலைக்குச் செல்லக்கூடிய தொழிலாளர்களை காட்டு யானைகள் மிரட்டுகின்றன பயமுறுத்துகின்றன, சிற்சில சந்தர்ப்பங்களில் தாக்கி இருக்கின்றன. ஆகவே, மின் வேலி என்று ஆரம்ப காலத்தில் இருந்தாலும் மின் வேலி அவ்வளவு உறுதியானதாக இல்லையென்று சமீபத்தில் நிரூபணம் ஆகியிருக்கிறது. ஆகவே, இந்தப் பகுதிகளில் உறுதியான கருங்கல் வேலியை அமைத்து. . .

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Question —ஐ கேளுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** காட்டு யானைகளின் அட்டகாசத்தைத் தடுக்க வனத் துறை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மார்ச் 31

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியில் ஒருநூறாம் வயலிலிருந்து வண்ணாத்திப்பாறை வரை 3 கி.மீ. தூரத்திற்கும், அதைப்போல பெருங்குருவியிலிருந்து மல்லமுத்தன்கரை வரை 3 கி.மீ. தூரத்திற்கும், அதைப்போலவே மல்லமுத்தன்கரையிலிருந்து முக்கூட்டுக்கல் வரை 2 கி.மீ. தூரத்திற்கும், முக்கூட்டுக்கல் கிராமத்தைச் சுற்றி 2 கி.மீ. தூரத்திற்கும், ஆக 10 கி.மீ. தூரத்திற்குச் சென்ற ஆண்டு மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகள் அவருடைய தொகுதியிலேதான் வருகின்றன. 31 கி.மீ.-லே இந்த ஆண்டு அரசு இரப்பர் தோட்டம் அமைந்துள்ள திருவட்டாறு பகுதியிலே 20 கிலோ மீட்டருக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. மீதி 5 கி.மீ. தூரம் கன்னியாகுமரி மாவட்டத்திலும், 5.5 கி.மீ. தூரம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட ராதாபுரம் தொகுதியிலும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய புள்ளிவிவரங்கள் உண்மைதான். ஆனால் சிற்றார் கோட்டம் கோட்டத்தில் அது அமையவில்லை என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். ஒரு பக்கத்தில் காட்டு யானைகளின் தொல்லை; இன்னொரு பக்கத்தில் காட்டுப் பன்றிகள் மற்றும் காட்டுக் குரங்குகளின் தொல்லை. காட்டுப் பன்றிகள், நெல், சேனை, மரச்சீனி, வாழை போன்றவற்றை நாசம் செய்கின்றன. அதேபோல காட்டுக் குரங்குகள், வாழை, தென்னை, இரப்பர் போன்ற பயிர்களை வெகுமளவில் நாசம் செய்கின்றன. காட்டுக் குரங்குகளின் தொல்லை சகிக்கவே முடியாத நிலையில் உள்ளது. இராணுவ வீரர்கள் அணிவகுத்து வருவதைப்போல் நூற்றுக்கணக்கான காட்டுக் குரங்குகள் வருகின்றன. வீடுகளின் கூரை மீது ஏறி ஓடுகளைப் பிரித்து எறிந்து விட்டு வீட்டுக்கு உள்ளே நுழைகின்றன. சமையல் அறை வரைக்கும் சென்று எதாவது அகப்படுமா என்று தேடிப் பார்க்கின்றன. கிடைத்தால் சாப்பிடுகின்றன. கிடைக்காவிட்டால் சட்டி, பெட்டி, மண் பாண்டங்கள் அத்தனையையும் அடித்து நொறுக்கி விட்டு, துணிமணிகளைத் தூக்கிக்கொண்டு செல்கின்றன. இத்தகைய நிலை தொடர்கிறது. இரப்பர் மரத்தில் ஏறி இரப்பருடைய இளம் தளிர், குருத்துகளை கிள்ளிச் சாப்பிடுகின்றன.



2008 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குரங்கு குணத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** கேள்விதான் ஐயா. இந்தக் காட்டுக் குரங்குகள், காட்டுப் பன்றிகள், யானைகள்மூலம் ஏற்படுகின்ற கொடுமைகளால் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்படுகின்றது. ஆகவே, இதனைத் தடுக்கக்கூடிய வகையில் உறுதியான நடவடிக்கையை, ஒரு தொலைநோக்கு திட்டத்துடன் ஒரு பெரிய திட்டத்தைத் தயாரித்து அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி அரசு, இந்த வன விலங்குகள்மூலம் ஏற்படக்கூடிய நஷ்டத்திலிருந்து பணப் பயிர்களையும், மனித உயிர்களையும் பாதுகாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குரங்குத் தொல்லையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். குரங்கும் அறிவாற்றல் நிறைந்த ஒரு வன விலங்குதான். குரங்கிலிருந்துதான் மனிதர்கள் வந்ததாக வரலாறுகள் சொல்லுகின்றன. எனவே, மனிதர்கள் செய்கின்ற அந்தத் தந்திரங்களை குரங்குகள் செய்கின்றன. எவ்வளவுதான் நாம் மின் வேலியைத் தாழ்த்திப் போட்டாலும் யானை போன்ற மிருகங்கள் எல்லாம் காய்ந்த மரங்களை, அந்த சூரிய மின் கம்பிகளின்மீது போட்டு அதைத் தகர்த்துவிட்டு உள்ளே வர முயற்சி செய்கின்றன. சில இடங்களில் நாங்கள் அகழிகள் அமைத்தும்கூட இவற்றைத் தடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இவையெல்லாம் வன விலங்குகளைத் தடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட முயற்சி என்றாலும், மாண்புமிகு தலைவர் அவர்கள் இந்த ஆட்சியிலேதான் 2006-2007-லே 262½ கி.மீ.-க்கு சூரிய மின் வேலி அமைப்பதற்கும் 2007-2008-லே 303.25 கிலோ மீட்டருக்கு சூரிய மின் வேலி அமைப்பதற்கும் அனுமதி தந்து, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இதையெல்லாம் மீறி வன விலங்குகளாலே உயிர்ச் சேதமும் பயிர்ச் சேதமும் ஏற்படுமேயானால், அவற்றிற்கு நஷ்டஈடு கொடுப்பதற்காக, அவர்களுடைய இழப்பீட்டிற்காக நிதி தருவதற்கு 50 இலட்சம் ரூபாயை 2006-2007, 2007-2008-லே ஒதுக்கித் தந்து, சென்ற ஆண்டு மட்டும், கடந்த

ஆட்சியாளர் காலத்தில் விடுபட்டுப் போன 1,267 பேருக்கு 52 இலட்சத்து 42 ஆயிரத்து 662 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், இந்த ஆண்டு 666 பேருக்கு 38,87,880 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், உயிர்கள் நாசம் அல்லது பொருள்கள் நாசம் அல்லது கால்நடைகள் நாசம் இவைகளுக்கெல்லாம் நட்ட ஈடாக சென்ற ஆண்டு 85,94,326 ரூபாயும், இந்த ஆண்டு 65,83,993 ரூபாயும், ஆக 1,51,78,319 ரூபாயை இந்த அரசு, இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் செய்யாத திட்டமாக நட்ட ஈட்டை வழங்கி விவசாயிகளினுடைய நலனைப் பாதுகாத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் மின்வேலி அமைப்பதைப் பற்றியும், அதையும் மீறி சேதப்படுத்தப்படுகின்ற விளைபொருள்களுக்கு நஷ்டஈடு தருவதைப் பற்றியும் இங்கே விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கின்றார்கள். காட்டுப் பகுதியினுடைய எல்லையிலே, தனியார் விவசாய நிலங்கள் இருக்கக்கூடிய பகுதிகளிலே, சில தனியார்கள் மின்வேலி அமைப்பதோடு மின்வேலிக்கு முன்புறமாக அகன்ற அளவில் அகழிகள் வெட்டி, அகழிக்குப் பிறகு மின் வேலி அமைக்கின்ற பகுதிகளில் சுத்தமாகவே யானைகள் உள்ளே நுழைய முடிவதில்லை. அப்படிப்பட்ட ஏற்பாட்டை ஏன் வனத் துறையும் செய்யக் கூடாது?

அதேபோல, விவசாயிகளுக்கு வேண்டுமானால் நஷ்டஈடு கொடுத்துவிடலாம். பல இடங்களில் மனித உயிர்களையே மிதித்துக் கொல்கின்றன, பழிவாங்குகின்றன. தினசரி செத்துக் கொண்டிருக்கிறார்கள். இது குமரி மாவட்டத்திலே மட்டுமல்ல, வனப் பகுதிகள் அடர்ந்திருக்கக்கூடிய தமிழ்நாட்டினுடைய மற்ற எல்லைப் பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அகழிகள் வெட்டுவதற்கும், அதைத் தொடர்ந்து மின்வேலி அமைப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொள்ளுமா?





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தக் கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். மின் வேலிகளை சில பகுதிகளிலே இருக்கின்ற யானைகள் தகர்த்துவிடுகின்றன என்கின்ற காரணத்தினாலே அகழிகள் அமைக்கப்படுகின்றன என்று சொன்னேன். எனவே, அகழிகள் அமைக்கின்ற பணிகளும் தேவையான இடங்களிலே மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில இடங்களிலே இரயில்வே லைன்களில் யானைகள் வந்துவிடுகின்றன. சென்ற மாதம், 4-2-2008-லே 3 யானைகள் போத்தனூர் அருகிலுள்ள இரயில்வே லைனுக்குள் வந்து இரயிலிலே அடிபட்டு இறந்து போயின. உடனே, அதற்காக நான், அந்தப் பகுதிகளிலேயிருந்து யானைகள் இரயில்வே லைனிலே வராமல் இருப்பதற்காக, மாண்புமிகு மத்திய இரயில்வே இணை அமைச்சர் திரு. வேலு அவர்களைச் சந்தித்து யானைகள் வ்ருவதற்கு வாய்ப்புள்ள இரயில்வே லைன் பகுதிகளில் சூரிய மின் வேலி அமைப்பதற்கு நீங்களும் பணம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அவர் தந்ததற்குப் பிறகு, அந்தப் பணியும் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சென்ற ஆண்டு மட்டும் 30 பேர் இறந்திருக்கிறார்கள். 30 இலட்சம் ரூபாய் அரசின் சார்பாக அவர்களுடைய குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, இந்த ஆண்டும் 23 பேர் இறந்திருக்கிறார்கள். 23 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப் பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 32 பேர் காயமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு 3,12,664 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 18 பேர் காயமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு 3,35,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி வன விலங்குகளால் எதிர்பாராதவிதமாக ஏற்படுகின்ற சேதங்களுக்கெல்லாம், மனித உயிர்களாக இருந்தாலும், பயிர்ச் சேதமாக இருந்தாலும் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அதற்கு நஷ்டஈடு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாளிதழ்களிலே பார்க்கின்றபோது யானை, சிறுத்தை போன்ற காட்டு விலங்குகளெல்லாம் நாட்டுக்குள் வருகிற செய்திகள்

அடிக்கடி வருகின்றன. காட்டிலே இருக்கிறவரைதான் யானைக்குக்கூட மரியாதை. அந்த யானை நாட்டுக்கு வந்துவிட்டால், அதைக்கூட பிச்சை எடுக்க வைத்து விடுகிறார்கள் மனிதர்கள். அப்படிப்பட்ட நிலையில், இந்த யானைகள் அல்லது மற்ற விலங்குகள் காட்டிலிருந்து இங்கே வராமல் இருப்பதற்கு அவற்றிற்கு என்ன தேவையோ அவற்றைக் காட்டிலேயே செய்வதற்கு, அந்த உணவுகள் கிடைப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இன்றைக்கு இந்திய அளவிலே 1,500 யானைகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றின் எண்ணிக்கை வளர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற யானைகளிலே, எத்தனை ஆண் யானைகள், எத்தனை பெண் யானைகள் இருக்கின்றன? (சிரிப்பு) அந்தத் தகவல்கள் எங்களுக்குத் தெரிய வேண்டும். அதனை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண் யானைகள் எவ்வளவு, பெண் யானைகள் எவ்வளவு என்று கேட்டிருக்கிறார். அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டுப் பகுதிகளிலே தோராயமாக 4,015 யானைகள் இருக்கின்றன. உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாகத்தான் யானைகள் அல்லது மிருகங்கள் எல்லாம் காட்டுப் பகுதியில் இருந்து வெளியில் வருகின்றன. எனவே, காட்டிற்குள் இருப்பதற்காக அங்கே சிறு குட்டைகள் அமைத்து தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிறோம். யானைகளுக்கு அங்கேயே உணவுகளைக் கொடுப்பதாக இருந்தாலும், யானைகள் ஒரு நாளைக்கு 20 கிலோ மீட்டர் தூரம்வரை இடம் பெயரக்கூடியவை. எனவே அவை இடம் பெயருகின்றபோது சில நேரங்களில் சிதறி ஓடுகின்றன. காடுகளில் யானை வழித்தடம் (Elephant Corridor) தடைபட்டிருந்தால் அவை சிதறி ஓடுகின்றன என்பதை உணர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், யானைகள் வழித்தடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால் அவற்றை அகற்றி அல்லது தனியாரிடம் இருந்தால் அவற்றையெல்லாம் திரும்பப் பெறுவதற்காக, சென்ற நிதிநிலை அறிக்கையிலேயே 398 ஏக்கர் நிலங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்பதற்காக 2,68,00,000 ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, அவை எல்லாம் நடந்து



முடிந்தால் இந்தப் பிரச்சினைகள் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுக்குள் இருந்து நாட்டிற்குள் வந்து அட்டகாசம் செய்யும் யானைகளைக் கடந்த காலங்களில் முதுமலைக்குக் கொண்டுசென்று புத்துணர்ச்சி மையம் அமைக்கும் திட்டம் இருந்ததைப்போல, இந்த ஆண்டும் நடைமுறையில் அப்படிப்பட்ட திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் செயற்குறிப்பில் அதுபோன்ற திட்டம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே யானைகள் காட்டுக்குள் இருந்து நாட்டுக்குள் வந்துவிடுவதாகச் சொல்கிறார்கள். அந்தக் காடும் நம்முடைய நாட்டில்தான் இருக்கிறதா என்பதை அமைச்சர் முதலிலே விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பொதுவாக, மின்வேலி அமைப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சில குறிப்புகளைத் தந்தார்கள். அவை எல்லாமே யானைப் பசிக்குச் சோளப்பொரி போடுவதுபோல்தான் இருக்கின்றன. காரணம் என்னுடைய மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய என்னுடைய நிலத்தில் மூன்று நாட்களுக்கு முன்னால்கூட 7 யானைகள் வந்து, அங்கிருந்த தென்னை, மா மரங்களை எல்லாம் பிடுங்கிப் போட்டுவிட்டு போய்விட்டன. செலவு செய்து என்னுடைய பகுதியில் மின்வேலி அமைத்து இருக்கிறோம். எங்கள் மாவட்டப் பகுதியிலுள்ள காட்டுக்குள்ளே நீங்கள் 5 கிலோ மீட்டர் தூரம்தான் மின்வேலி அமைத்துக் கொடுத்தீர்கள். 5 கிலோ மீட்டருக்கு நீங்கள் மின்வேலி அமைத்தது என்பது நிச்சயமாகப்

[2008 மார்ச் 31

போதாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்வேலி அமைப்பதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். பொதுவாக, ஜவ்வாது மலையை எடுத்துக்கொண்டால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு மின்வேலியை நிச்சயமாகப் போட்டாக வேண்டும். இல்லையென்று சொன்னால் யானை வருவதை நீங்கள் தடுக்கவே முடியாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு இழப்பீடு கொடுத்ததைப் பற்றி இங்கே சொன்னார்கள். சென்ற ஆண்டு 30 பேர் இறந்தார்கள், அதற்கு 30 இலட்சம் கொடுத்ததாகவும், இந்த ஆண்டு 23 பேர் இறந்ததாகவும், 23 இலட்சம் கொடுத்ததாகவும் சொன்னார்கள். இப்படி உயிர்கள் போனதற்குப் பிறகு, அதற்கு நஷ்டஈடு கொடுப்பது என்பதைக்காட்டிலும், பொதுவாக யானைகள் அந்த எல்லையை விட்டு ஊர்ப் பகுதிகளுக்கு வராமல் தடுப்பதற்கும் முழு அளவில் மின் வேலியைப் போடுவதற்கும் அதேபோல, வனத் துறை அதிகாரிகளைக் கொண்டு, வராமல் தடுப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரனுக்குச் சொந்தமான ஐந்து ஏக்கர் நிலத்தில் யானைகள் புகுந்து அட்டகாசம் செய்ததாகச் சொல்கிறார். ஞானசேகரனுக்கு ஏராளமான நிலம் இருக்கிறது. அவர்களது மாமனார் வீட்டு நிலம் அதைவிட அதிகம். ஆகவே, அந்த ஐந்து ஏக்கர் நிலத்தினை காட்டு இலாகாவிற்குக் கொடுத்துவிடுங்கள். அதில் யானை மேய்ந்து கொள்ளட்டும். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, அவருக்காகவே வேலூர் மாவட்டத்திற்கு 16 கிலோ மீட்டர் ஒதுக்கித் தந்து, வேலூர் கோட்டத்திலே 10 கிலோ மீட்டருக்கு, திருப்பத்தூர் பகுதியிலே அவர் நிலம் இருக்கின்ற பகுதியில் 6 கிலோ மீட்டருக்கும் என்று ஒதுக்கித் தந்து மின்வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலையிலும், மேற்கு



2008 மார்ச் 31]

தொடர்ச்சி மலையிலும் யானைகள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 1,200 கிலோ மீட்டர் தொலைவுள்ள ஒரு linear length-ஐச் சொல்கிறேன். அந்தக் காடுகளையெல்லாம் சுற்றிப் போடவேண்டும் என்று சொன்னால் 5,000 கிலோ மீட்டரிலிருந்து 10 ஆயிரம் கிலோ மீட்டர் அளவிற்கு சூரிய மின் வேலி அமைக்க வேண்டும். ஒரே ஆண்டிலே அனைத்தையும் அமைப்பது என்பது சாத்தியக்கூறா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மத்திய அரசினுடைய திரவ இயக்கத் திட்டத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்வேலி அமைப்பதற்காக 8,80,000 ரூபாய் தந்தீர்கள். அதற்கு நன்றி. இந்த ஆண்டு மேலும் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி, தொடர்ந்து விவசாயிகளைப் பாதுகாக்க இன்னும் 10 கிலோ மீட்டர் தூரம் அந்த மின்வேலியை அமைத்துத் தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** சென்ற ஆண்டு அவருடைய தொகுதியிலே உள்ள திம்மபுரத்திலும், சிவகாமிபுரத்திலும் 5.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் தேவையான இடங்களில் அமைப்பதற்கு ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

**பாலம்**

***11923—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதி, பெரியகோட்டை ஊராட்சி, கோம்பையன்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சந்தனவர்தினி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே ஒரு தரைமட்ட தாம்போகிப்பாலம் உள்ளது. மேலும், இந்தத் தரைமட்ட தாம்போகிப்பாலம் அமைந்துள்ள மேல் பகுதியில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் திண்டுக்கல்லிலிருந்து மணக்காட்டூர் செல்லக்கூடிய மாவட்ட முக்கிய சாலையில் ஓர் உயர்மட்டப் பாலம் உள்ளது. அதேபோல, அந்தத் தரைமட்டத் தாம்போகியிலிருந்து கீழ்ப்பகுதியில் சென்னையிலிருந்து திண்டுக்கல் வரை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 45-லும் ஓர் உயர்மட்டப் பாலம் உள்ளது. எனவே, இந்தத் தரைமட்டத் தாம்போகியில் மழைக் காலங்களில் மட்டும் தண்ணீர் வரத்து அதிகமாகி போக்குவரத்து தடைபடுகிறது. எனவே, இன்றுவரை அதற்குரிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இரண்டு முறை மழை பெய்தபோது அந்தக் கோம்பையன்பட்டி என்பது முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு அங்கு உணவு கொடுப்பதற்குக்கூட வாய்ப்பில்லாமல் போனது. ஆகவே, தரைவழிப் பாலமாவது தேவைப்படுகிறது. அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இப்போது வந்த கனமழையிலேகூட பாதிக்கப்பட்ட அந்த இடத்தை நேரடியாகச் சென்று பார்த்து வந்தார்கள். ஆகவே, அந்தத் துறையினுடைய மாவட்ட அதிகாரிகள் இவ்வாறு நேரடியாகப் பார்த்ததையாவது கருத்துருவாக அரசுக்கு அனுப்பி வைத்தால்தான் ஆவன செய்ய முடியும். ஆகவே, இதை அந்தத் துறை அதிகாரிகளுக்குக் கவனப்படுத்த வேண்டும், கவனப்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியினுடைய தரைமட்ட தாம்போகிப் பாலம் ஏற்கெனவே இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, துறையினுடைய அதிகாரிகள் அந்தப் பகுதியிலே உயர்மட்டப் பாலம் வேண்டுமென்று ஏற்கெனவே எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவ்வாறு உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், சுமார் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. எனவே, இந்த ஆண்டு அது குறித்து நிச்சயமாக துறை பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று திண்டுக்கல் ஒன்றியத்தில் சந்தனவர்தினி ஆறு, கல்லாறு, குடகனாறு என்ற மூன்று ஆறுகளும் அந்த ஒன்றியப் பகுதி முழுவதும் நூற்றுக்கணக்கான கிராமங்களைத் துண்டித்துவிடுகின்றன. ஆகவே, ஒரு கோடி ரூபாய் அளவுக்கல்லாமல், மக்கள் நடந்து வருவதற்கு, two wheeler செல்லக்கூடிய அளவில் சிறிய பாலமாகக் கட்டுவதற்கு ஆய்வு செய்தால்கூடப் போதுமானது. ஆகவே, அந்த வகையில் அந்த ஒன்றியத்திலே 4 சிறிய பாலங்களை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கடிதம்மூலமாக எனக்குத் தந்திருக்கிறார்கள். அதேபோல, அந்த மாவட்டத்தைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடத்திலிருந்தும் கடிதம் வந்திருக்கிறது. அவருடைய கடிதத்திலும் அந்தப் பாலங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கடிதத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, அதுகுறித்து நிச்சயமாக எதிர்காலத்தில் இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

[2008 மார்ச் 31

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிபாளையத்திலிருந்து ஈரோடு செல்லும் காவிரி ஆற்றின் குறுக்கே இருக்கின்ற பாலத்தில் இரண்டு வண்டிகள் எதிரெதிரே சென்றால் இருசக்கர வாகனங்கள்கூட செல்ல முடியாத அளவுக்கு குறுகிய பாலமாக இருக்கின்ற காரணத்தினால் கூடுதல் பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டத்தையும் இணைக்கக்கூடியவகையிலே, காவிரி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே பள்ளிபாளையத்தையும் ஈரோடு நகரத்தையும் இணைக்கக்கூடிய வகையிலே ஒரு பாலம் இருக்கிறது. அதேநேரத்திலே அதற்கு மேல்பகுதியிலே நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் தடுப்பணை கட்டப்பட்டு அதிலேயும் ஓரளவுக்கு போக்குவரத்து செல்லக்கூடிய வகையிலே அந்தப் பாலம் அமைந்திருக்கிறது. மேலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, ஏற்கெனவே தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் நாமக்கல் மாவட்டம் சோழசிராமணியையும், ஈரோடு மாவட்டம், பாசூர் பகுதியையும் இணைக்கக்கூடிய வகையிலே தடுப்பணை கட்டுவதற்காக நடவடிக்கை எடுத்திருந்தார்கள். ஏற்கெனவே தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. பழனிசாமி அவர்களும், அதேபோல, திருச்செங்கோடு தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய மத்திய அமைச்சர் மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். எனவே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக தமிழக அரசு சுமார் 6 கோடி ரூபாய் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறது. எனவே, இருவழிப் பாலங்களாக அந்தப் பாலம் அமைய இருக்கின்றது. அதேநேரத்திலே, கடந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றோம்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



2008 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** நாமக்கல் மாவட்டம், கொக்கராயன்பேட்டை பகுதியையும் ஈரோடு மாவட்டம், பரிசல் துறையையும் இணைக்கக்கூடிய வகையிலே இருவழிப் பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, எதிர்காலத்திலே நிச்சயமாக நாமக்கல் மாவட்டத்திலிருந்து ஈரோடு மாவட்டம் போன்ற பகுதிகளுக்கு காவிரி ஆற்றின் குறுக்கே வருவதற்கு பாலங்கள் கூடுதலாக அமைய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக சென்னை போன்ற மாநகராட்சிப் பகுதிகளிலும், பல்வேறு நகராட்சிப் பகுதிகளிலும் நாளுக்கு நாள் வாகன நெருக்கடிகள் அதிகமாகி, traffic jam ஏற்பட்டு விமான நிலையத்திற்குச் செல்கின்றவர்கள், பேருந்து நிலையத்திற்குச் செல்கின்றவர்கள், அவசரத் தேவைகளுக்கு மருத்துவமனைகளுக்குச் செல்கின்றவர்களெல்லாம் குறிப்பிட்ட நேரத்தில் செல்வதற்கு வாய்ப்பில்லாமல் மிகப் பெரிய அவதிக்குள்ளாகி தமிழகம் தத்தளித்துக் கொண்டிருக்கிற ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை இல்லாத அளவுக்கு மேம்பாலங்களை மாண்புமிகு மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியினுடைய மேயராக இருந்தபோது பல்வேறு பாலங்களைக் கட்டி இன்றைக்கு நெருக்கடிகளையெல்லாம் தவிர்த்து இருப்பதைப்போல, ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி விமான நிலையத்திற்கு இணைப்பு, அதேபோல் நம்முடைய Harbour இருக்கிற இடத்திற்கு இரவு நேரங்களிலே சென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், முடித்து விடுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** முடித்து விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய இட நெருக்கடி ஏற்பட்டு, முழுவதும் traffic jam ஏற்பட்டு மருத்துவமனைகளுக்கு வரமுடியாமல் வாகனங்கள் சிக்கிக்கொள்கின்றன. விமான நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால் குறைந்தபட்சம் 2½ மணி நேரம் ஆகிறது. இவற்றையெல்லாம் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

புதிய திட்டங்களை அறிவிப்பார்களா அல்லது விமான நிலையத்திற்கென்று, மருத்துவமனைகளுக்கென்று தனியான பாலங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, தமிழகத்தில் வாகனங்களினுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி, போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் ஏற்கெனவே இருக்கிற சாலைகளைத்தான் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை. புதிதாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சென்னையைப் பொறுத்தளவில் ஏற்கெனவே Inner ring road என்கிற வகையிலே கத்திப்பாராவிலிருந்து கோயம்பேடு வரை செல்லக்கூடிய அந்தச் சாலை, அதேநேரத்திலே கோயம்பேடு பகுதியிலும் கத்திப்பாரா பகுதியிலும் மத்திய அரசால் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம், ஒரு பெரிய மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அந்தப் பணி இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு மாநகராட்சியின்மூலம் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு ஏறத்தாழ 9 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பாலத்தைப் புதியதாகத் திறந்து வைத்திருக்கிறார்கள். மேலும், சென்னை புறவழிச் சாலை என்கிற வகையிலே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் தாம்பரம் நகரப் பகுதியிலிருந்து நம்முடைய எண்ணூர் துறைமுகத்தை இணைக்கக்கூடிய வகையிலே அந்தப் புறவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், வண்டலூரிலிருந்து இன்றைக்கு ஒரு வெளிவட்டச் சாலைக்கு O.R.R. - Outer ring road-க்கு தமிழக அரசுமூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. போக்குவரத்து நெரிசலை அந்தச் சாலைகள் எல்லாம் நிச்சயமாகக் குறைக்கும். அதேபோல, மேம்பாலங்களைப் பொறுத்தளவில் இன்றைக்கு விமான நிலையத்தின் அருகிலே ஒரு மேம்பாலப் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நடைபெற்று வருகிறது. அதேபோல நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின்மூலமும்





தேனாம்பேட்டை சிக்னல் பிரிவு, சென்னை அண்ணா சாலை போன்ற நகரப் பகுதிகளிலே இரண்டு மேம்பாலங்களும் அதேபோல போரூர் பகுதியிலே போக்குவரத்து நெரிசலைக் குறைக்கிற வகையிலே ஒரு மேம்பாலமும் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையின் மானியக் கோரிக்கை வரும்போது இந்த நிதியாண்டில் எந்தெந்த இடங்களில் புதியதாகப் பாலங்கள் கட்டப்படும் என்பதை விளக்கமாக நான் தெரிவிக்க இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி ஆற்றின் குறுக்கே இருக்கிற அத்தாணி பாலத்தின் உட்பகுதியிலே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குழாய்கள் பதித்துக் கொண்டு வருகிறார்கள். அப்படிப் பதிக்கின்றபோது இரண்டு வாகனங்கள் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. பல இடங்களிலே இதுபோன்ற பாலங்கள் இருக்கின்றன. அப்படி இல்லாமல் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் தனியாக பில்லர் போட்டு அதிலே குடிநீர்க் குழாய்களை இணைத்துக் கொண்டு செல்வதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே கேட்க வேண்டிய கேள்வியை என்னிடத்திலே கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும் அது குறித்து நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கமளித்திருக்கிறார்கள். மிக முக்கிய சாலையான கும்பகோணம்-விக்கிரவாண்டி-சென்னை சாலையில் அணைக்கரை என்கிற இடத்திலே இருக்கிற பாலம் தினசரி

போக்குவரத்திற்கு மிகப் பெரிய அளவிலே நெருக்கடி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மணிக்கணக்கிலே போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. ஆகவே, அந்த அணைக்கரைப் பாலத்தை அகலப் பாலமாக, புதியப் பாலமாகக் கட்டுவதற்கான முயற்சி அரசினிடத்திலே இருக்கிறதா? அதேபோல, காவிரி பாசனப் பகுதிகளிலே கிட்டத்தட்ட அறுபதுக்கும் மேற்பட்ட பாலங்கள் கட்டப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. அந்தப் பாலப் பணிகள் எல்லாம் எந்த நிலையிலே இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, கும்பகோணம்-விக்கிரவாண்டி சாலையும் மிக மோசமான சாலையாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் தினசரி வந்து செல்கிற அந்தச் சாலையை உடனடியாகச் செப்பனிடப்படுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணைக்கரைப் பாலத்தைப் பற்றி இங்கே கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்வி பாலபாரதி அவர்கள் கேட்ட கேள்வி 'திண்டுக்கல் தொகுதி, பெரியகோட்டை ஊராட்சி, கோம்பையன்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா' என்பது குறித்துதான். 234 சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பாலங்களைப் பற்றிக் கேள்வி கேட்க ஆரம்பித்தால் அதற்கே 10 நாட்கள் பதில் சொல்ல வேண்டி வரும். ஏற்கெனவே கேள்வி நேரம் 10-30-க்கு முடிய வேண்டியது இப்போதே நேரம் 10-36 ஆகிறது. இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. அதற்குப் பிறகு பொது விவாதம் நடைபெற இருக்கிறது. உறுப்பினர்கள் தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், சீக்கிரம் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் பக்கத்திலேயிருந்து . . . (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கோ. அரி கேட்டிருக்கிறார்; எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்டிருக்கிறார்; திரு. செங்கோட்டையன் கேட்டிருக்கிறார். எல்லோருக்கும் சமமாகத்தான் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். துணைக் கேள்வி கேட்க நினைக்கிற எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தான் விரும்பும் துணைக் கேள்வியோ, கேள்வியோ கேட்பதற்கு, தலைவருடைய கவனத்தை ஈர்ப்பதற்கு கையை உயர்த்த வேண்டும். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கையை உயர்த்த வேண்டும். (குறுக்கீடுகள்) ஆனால், யாரை அழைப்பது என்பது தலைவருக்குள்ள தனி அதிகாரம், உரிமை. கேள்வி நேரத்தில் ,தன்னைக் கூப்பிட்டுத்தான் ஆக வேண்டுமென்று உறுப்பினர் கட்டாயப்படுத்த முடியாது. இது முழுக்க, முழுக்க சபாநாயகருடைய உரிமை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) நான் எல்லோருக்கும் சமமாகத்தான் வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) கட்டாயப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணைக்கரை பாலத்தைப் பற்றி இங்கே வினா எழுப்பியிருக்கிறார். ஏற்கெனவே கடந்த கூட்டத் தொடரிலே அதுகுறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க நான் பதிலைத் தந்திருக்கிறேன். இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின்மூலம் அந்தச் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. அதாவது விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் என்கிற தேசிய நெடுஞ்சாலை. அந்த தேசிய நெடுஞ்சாலையும் பழுதுபட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதையும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்காக, பராமரிப்புச்

செய்வதற்காக, சுமார் 12 கோடி ரூபாய் மத்திய அரசின்மூலம், நம்முடைய மத்திய அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அதற்குரிய பணிகள் தொடங்கியிருக்கின்றன. அந்தச் சாலை விரைவில் பராமரிக்கப்படும். கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டு புதிய பாலங்களைக் கட்டுவதற்கான அறிவிப்பை ஏற்கெனவே அறிவித்திருக்கின்றது. ஒன்று, கடலூர் மாவட்டம், மணல்மேட்டையும், அதேபோல நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியையும், மணல்மேடு பகுதியையும் இணைக்கக்கூடிய வகையிலே ஓர் உயர் மட்டப்பாலம் கட்டுவதற்கும், அதேபோல அரியலூர் மாவட்டத்திலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திற்கு கும்பகோணத்திற்கு எளிதாகச் செல்லக்கூடிய வகையிலே மதனத்தூர்-நீலத்தநல்லூர் பகுதிகளை இணைக்கக்கூடிய வகையிலே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த இரண்டு பாலங்கள் அமைந்தாலே அணைக்கரை பாலத்திலே இருக்கிற போக்குவரத்து நெரிசல் குறைய வாய்ப்புண்டு. மேலும் அணைக்கரை பாலம் என்பது பாலம் அல்ல என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அது பொதுப் பணித் துறையினுடைய ஷட்டர். அந்தப் பகுதியிலேதான் இதுவரையில் வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. மேலும் அதிலே புதிய பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், இது இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதுவும் எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

## விற்பனை நிலையம்

***35702—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வானூர் தொகுதி, மரக்காணம் பேரூராட்சியில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வானூர் சட்டப் பேரவைத் தொகுதி, மரக்காணம் பேரூராட்சியில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்தும் திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பரிசீலனையில் உள்ளது. மீன்வளத் துறைமூலம் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையின் இல்லை.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் ஒன்றியம், மரக்காணம் பேரூராட்சி, கோட்டக்குப்பம் பேரூராட்சிகளில் 19 மீனவக் கிராமங்கள் உள்ளன. இந்த மீனவக் கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பிடிக்கும் மீன்களைச் சாலையோரங்களிலும் தெருக்களிலும் வைத்து விற்பனை செய்து வருகின்றனர். விற்பனை செய்ததுபோக மீதமுள்ள மீன்களை சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பாண்டிச்சேரி மாநிலத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். அதே சமயத்தில் குறித்த நேரத்தில் பேருந்து வசதி இல்லாமலும் போக்குவரத்துக்குக் கஷ்டப்படுகின்றனர். இந்த ஏழ்மையான மீனவர்களின் நலன் கருதி, மரக்காணம் பேரூராட்சியிலும், கோட்டக்குப்பம் பேரூராட்சியிலும் மீன் விற்பனை நிலையங்கள் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரக்காணம் பேரூராட்சி எல்லையில் 5 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. பிடிக்கப்படும் மீன்களைச் சுகாதாரமான முறையில் விற்பனை செய்ய மரக்காணத்தில் மீன் அங்காடி அமைத்திட நிதியுதவி கோரி மரக்காணம் பேரூராட்சி மன்றத் தலைவரால் விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்குக் கடிதம்

[2008 மார்ச் 31

அனுப்பப்பட்டுள்ளது. வானூர் தொகுதி, மரக்காணம் பேரூராட்சியில் நவீன முறையில் மீன் அங்காடி அமைக்கப்பட்டால் இங்குள்ள பொது மக்களுக்கு நல்ல நிலையில் மீன்கள் கிடைப்பதுடன், சுகாதாரக் கேடு விளைவதைத் தடுக்கவும், அங்குள்ள மீனவ மக்களுக்கு ஜீவாதார வசதிப் பெருக்கம் ஏற்படவும் வாய்ப்பாக அமையும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பரிசீலனையில் இத்திட்டம் இருப்பதால், மீன் வளத் துறையின்மூலம் மீன் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாகச் செய்து தருவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரை எந்த ஒரு கருத்துருவும் இல்லை. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டிருக்கிறேன். ஒரு வருட காலமாக இதுபற்றி ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்படி எந்தக் கருத்துருவும் இதுவரையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரக்காணம் பேரூராட்சி மன்றத்தில் அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்திலே பெய்த மழையின் காரணமாக ஏறக்குறைய 16 நாட்கள் மீனவர்கள் மீன் பிடிப்பதற்குச் செல்லவில்லை. விவசாயிகள் பட்ட துன்பத்தைப் போலத்தான் மீனவர்களுடைய துன்பமும் இருக்கிறது. இப்பொழுது, வருகின்ற ஏப்ரல் 14 ஆம் தேதி முதல் 40 நாட்களுக்கு கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை இருப்பதால், நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பதிவு செய்தபடி, பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரியிலே ஆயிரம் ரூபாயும், 90 கிலோ அரிசியும் இந்தக்



D V21, 31/08 P08 · 43·3

2008 மார்ச் 31]

காலங்களிலே மானியமாக வழங்குகிறார்கள். அதேமாதிரி இந்த அரசும், அளிக்க வேண்டும். மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தயவினால் வறுமையான காலத்திலே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கிடைத்ததனால்தான் நிறைய மீனவர்களுடைய வீட்டிலே அடுப்பு எரிந்தது. இல்லையென்றால் அந்தச் சமயத்திலே அவர்களுடைய துன்பம் மிகவும் அதிகமாக இருந்திருக்கும். அதேபோன்று மீனவர்களுக்காக கூட்டுறவு வங்கிகள் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பெருக்கம் செய்வதற்காக நம்முடைய தமிழக அரசு மட்டும் அல்ல, இந்தியக் கடற்பகுதியிலே இருக்கின்ற அத்தனை அரசுகளும், 45 நாட்கள், 60 நாட்கள் என்று மீன் பிடிப்பதற்குத் தடை செய்து, மீன் பெருக்கம் செய்வதற்காக அறிவித்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, மீனவ மக்கள் நல்ல நம்பிக்கை கொண்டிருக்கக்கூடிய வகையில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய கலைஞருடைய அரசு, நிச்சயமாக இந்த 45 நாட்கள், மீன் பிடிக்கச் செல்லாத காலங்கள் குறித்து ஒரு நல்ல முடிவை அறிவிக்கும் என்பதனையும், இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு ஆலோசிப்பேன் என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Triplicane Constituency-ல் நிறைய மீன் விற்பனைக்கு வருகிறது. அதுவொரு மீன் centre என்பதால், all over Chennai-லேயிருந்து மக்கள் அங்கே வந்து மீன் வாங்குகிறார்கள். மீன் sales நிறைய நடக்கிறது. அங்கே refrigeration facilities arrange செய்து, அங்கே ஒரு நல்ல market அமைத்து விற்பனை செய்தால் நன்றாக இருக்கும். இப்போது சாலையோரங்களில்தான் இந்த sales நடக்கி[illegible] உள்ள மீனவர்களுக்கு help பண்ணுவதற்கும், Tri[illegible]

228104
சென்னை-600 009

[2008 மார்ச் 31

விற்பனை செய்யவும், refrigeration facility arrange செய்யவும், ஏற்றுமதி செய்யவும், மீன் விற்பனை மற்றும் ஏற்றுமதி நிறுவனம் அமைக்கவும் அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறீர்கள். அவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன; பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம் தொடர்ச்சி. (குறுக்கீடுகள்) முதலில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். 30 நிமிடங்களில் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் இன்றைக்குக் காலையிலே கொடுத்திருக்கிறீர்கள். நான் பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) காலையிலே கொடுத்திருக்கிறீர்கள்; பரிசீலனையில் இருக்கிறது. பொது விவாதத்தின்போது, கவன ஈர்ப்பு எதுவும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆகவே, 2 ஆம் தேதிக்குப் பிறகு பார்ப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தம்பிதுரை, நீங்கள் காலையிலேயே என்னிடம் கேட்டீர்கள். 2 ஆம் தேதிக்குப் பிறகு கவனிப்போம் என்று உங்களிடம் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.



2008 மார்ச் 31]

## 3. வரவு-செலவுத் திட்டம், 2008-2009, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துகளை வழங்குவதற்கு வாய்ப்பினை நல்கியமைக்கு நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூமியெங்கும் பூங்காற்றாய் புறப்பட்ட, பூந்தமிழின் புனிதக் காவியமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தூய மணிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) துரும்பாக விளங்கும் கரிகாலன் வாள் போல், களத்தில் ஓங்கி நிற்கும் இந்த விசுவாசத் தொண்டனின் பணிவான வணக்கம். மின்னாமல், முழங்காமல் வந்த மழைபோல் இருந்தது எங்கள் அம்மாவினுடைய நிதிநிலை அறிக்கை. வெற்று ஆரவார இடிகளும், விளம்பர மின்னல்களும் தென்படும், சொட்டு மழையும் தராத கலைந்த மேகம்தான் இந்த அரசின் நிதிநிலை அறிக்கை.

அத்தியாவசியப் பொருட்களுடைய விலைகள், பொது மக்கள் பொருளாதாரத்தைச் சிதைக்கின்ற வகையிலே பல மடங்கு உயர்ந்திருக்கின்றன. கடந்த ஆறு மாத காலத்தில், சமையல் எண்ணெய் உட்பட, மற்ற எண்ணெய், அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை கிடுகிடுவென்று உயர்ந்து, நடுத்தர மக்களின் நுகர்வுத்தன்மையை பெரிதும் பாதித்துள்ளது.

2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பக்கம்-4, பத்தி 4-ல், தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி 2005-2006-ல் 61.46 இலட்சம் டன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2006-2007-ல் 82.63 இலட்சம் டன் உற்பத்தி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2007-2008-ல் மாநிலத்தில் பல பகுதிகளில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும், உணவு தானியத்தின் உற்பத்தி 100 இலட்சம் டன் அளவை எட்டும் என்று கூறப்பட்டுள்ளது.

முற்பகல் 10-50

தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி அதிகமாக இருப்பதாக நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்தபோதிலும் விலைவாசி

உயர்வை ஏன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு குறித்தும் அவற்றைக் குறைக்கும் வழிவகைகள் குறித்தும் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதும் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கதாகும். உபரி பட்ஜெட் தாக்கல் செய்து சாதனை படைத்ததாகக் கூறிக்கொள்ளும் இந்த அரசு பொதுமக்களை அன்றாடம் பாதிக்கின்ற அத்தியாவசியப் பொருட்களுடைய விலை உயர்வு குறித்து மௌனம் சாதிப்பது ஏன்? இந்த மாமன்றத்தில் சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, 'இந்து' நாளேட்டை துணைக்கு அழைத்து இந்த அரசைப் பாராட்டி கவி பாடியதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அதே 'இந்து' நாளேடு 24-3-2008 அன்று தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வுகளைப் புடம் போட்ட தங்கமாக படம் பிடித்துக்காட்டிக் கண்டித்துள்ளதையும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் நல்லெண்ணெய் விலை 2007 டிசம்பரில் 80 ரூபாயிலிருந்தது இன்றைக்கு 120 ரூபாய். கடலை எண்ணெய் விலை 60 ரூபாயிலிருந்து 90 ரூபாய். சூரியகாந்தி எண்ணெய் ரூ.60-லிருந்து 85 ரூபாய். பாமாயில் ரூ.42-லிருந்து 48 ரூபாய். வெங்காயம் ரூ.140-லிருந்து 170 ரூபாய். பச்சரிசி ரூ.19-லிருந்து 24 ரூபாய். புழுங்கலரிசி ரூ.18-லிருந்து 23 ரூபாய். பாசுமதி அரிசி ரூ.38-லேயிருந்து 63 ரூபாய். இட்லி அரிசி ரூ.12 ருபாயிலிருந்து 18 ரூபாய். சம்பா கோதுமை ரூ.20-லிருந்து 45 ரூபாய். கோதுமை மாவு ரூ.22-லிருந்து 30 ரூபாய். ஏலக்காய் ரூ.500-லேயிருந்து 700 ரூபாய். மிளகு ரூ.150-லேயிருந்து 220 ரூபாய். கடுகு ரூ.35-லேயிருந்து 50 ரூபாய். பால் ரூ.16-லிருந்து 18 ரூபாய். புளி ரூ.40-லிருந்து 50 ரூபாய். இதயம் நல்லெண்ணெய் ரூ.90-லிருந்து 165 ரூபாய். Gold Winner ரூ.60-லிருந்து 90 ரூபாய். மஞ்சள் 40 ரூபாயிலிருந்து 60 ரூபாய், கசகசா ரூ.350-லிருந்து 560 ரூபாய். காப்பித் தூள் ரூ.160-லிருந்து 220 ரூபாய். Horlicks ரூ.111-லேயிருந்து 121 ரூபாய். வேர்க்கடலை ரூ.40-லிருந்து 60 ரூபாய். துவரம் பருப்பு 38 ரூபாயிலிருந்து 47 ரூபாய். கடலைப் பருப்பு ரூ.32-லேயிருந்து 40 ரூபாய். பச்சைப் பயறு ரூ.32-லேயிருந்து 42 ரூபாய். குண்டு மிளகாய் ரூ.45-லேயிருந்து 60 ரூபாய், வெந்தயம் ரூ.40-லிருந்து 60 ரூபாய் என்று உயர்ந்திருக்கிறதென்று படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதைப்போலத் தான். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், வெளி மார்க்கெட்டிலே சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பிற மாநிலங்களிலும் எந்த அளவுக்கு விலைகள் ஏற்றப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றித் தெரிவித்தார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு வகைகளிலே மத்திய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தாலுங்கூட தமிழ்நாட்டைப் பொறுத்தளவுக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், ஏழையெளிய, நடுத்தர மக்கள், குறிப்பாக பொது விநியோகக் கடைகளிலே பொருட்களை வாங்குகிற மக்களுக்கு விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் சிறப்புப் பொது வினியோகத் திட்டம் என்கிற திட்டத்தை உருவாக்கி, சில குறிப்பிட்ட பொருட்கள், அன்றாடம் பயன்படுத்துகிற பொருட்களான துவரம் பரும்பு, உளுத்தம் பருப்பு, எண்ணெய் வகைகளிலே பாமாயில் போன்றவைகளெல்லாம் நேரடியாக மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதை உணர்ந்த காரணத்தினால்தான் நம்முடைய உணவுத் துறையின்மூலமாக பல்வேறு வகைகளிலே அவைகளுக்கு மானியங்களெல்லாம் ஒதுக்கப்பட்டு, பொது வினியோகக் கடையைப் பொறுத்தளவுக்கு துவரம் பருப்பு 32 ரூபாய்க்கும், உளுத்தம் பருப்பு 36 ரூபாய்க்கும், பாமாயில் 40 ரூபாய்க்கும் அதேபோன்று, கோதுமை மாவு-ஆட்டா என்பது 11 ரூபாய்க்கும் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, வெளி மார்க்கெட்டிலே இருக்கின்ற விலைகள் என்பது வித்தியாசப்படுகிறது. சாதாரணமாக ஒரு நாடார் கடைக்கோ, ஒரு செட்டியார் கடைக்கோ போய் கேட்கிற விலைக்கும் சூப்பர் மார்க்கெட்டிலே போய் கேட்கிற விலைக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஏனென்று சொன்னால், பிராண்ட் மார்க்கெட் என்று, வசதிபடைத்தவர்கள் காரைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு அங்கே போய் வாங்குகிறார்கள். அதில் விலை அதிகமாகக்கூட இருக்கும். சூப்பர் மார்க்கெட்டிலே பார்க்கிறபோது சென்னையில் பார்த்தால்கூட, வட சென்னைக்கும், தென் சென்னைக்கும்கூட பொருட்களின் விலையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், இந்த விலைகளை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஒரு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆக, மக்கள் பயன்படுத்துகிற துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை போன்றவற்றின் விலைகளை, தமிழக அரசைப் பொறுத்தவரையில் கட்டுப்படுத்தி, குறைந்த விலையில்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உண்மைக்கு மாறான ஒரு தகவலை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். Sorry, மன்னிக்க வேண்டும்.

(முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** வெளிக் கடைகளில் வாங்கினால் இந்த விலைதான். 'உண்மைக்கு மாறாக என்றால்' என்ன இருக்கிறது இதிலே. வெளிப்படையாக போர்டு போட்டு வைத்திருக்கிறோம். ஒவ்வொரு பொது விநியோகக் கடையிலும் என்னென்ன விலை என்பதை போர்டு போட்டிருக்கிறோம். முடிந்தால் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள கடைகளில் நேரடியாக சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள் சென்று பாருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து தவறான தகவலை இந்த மன்றத்திற்கு அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் நாங்கள் இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்துகொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் வருகை தருகிறோம். எந்தக் கூட்டுறவு அங்காடியில் இதுபோன்று அவர் சொல்லியிருக்கிற பொருட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அவரால் நிரூபிக்க முடியும் என்று சொன்னால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இவர் சொல்லுகிறார், கொடுப்பதாகச் சொல்லுகிறார், கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார். ஆனால் கடையிலே இவை கிடைக்கின்றனவா என்று கேட்டால் எந்தக் கடையிலும் இல்லை என்பதைத்தான் இன்றைக்கு நாட்டு மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிலும் அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை ஏற்பதோடு, பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். எந்தெந்தக் கடைகளில் விற்கப்படுகின்றன என்பதையும், இந்த விலைக்குக் கூடுதலாக விற்கவில்லை என்பதையும், இந்த விலைக்குத்தான் விற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டமன்றத் தொகுதி உள்ள, அதாவது ஈரோடு மாவட்டத்திற்குக்கூட சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக துவரம் பருப்பு 1,203 மெட்ரிக் டன்னை நாங்கள் ஒதுக்கினோம், ஆனால், அந்த மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக விற்பனையானது எவ்வளவு என்று சொன்னால் 853 மெட்ரிக் டன்தான் விற்பனையாகியிருக்கிறது. இன்னும்கூட சில கடைகளில் இருப்பு இருக்கிறது; உளுத்தம் பருப்பை எடுத்துக்கொண்டால், 715 மெட்ரிக் டன் ஒதுக்கீடு செய்தோம். ஆனால், விற்பனையாகியிருப்பது என்னவென்று சொன்னால் 475 மெட்ரிக் டன்தான், 93 சதவீதம்தான் அங்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. பாமாயிலைப் பொறுத்தளவிற்கு 1,216 கிலோ லிட்டர் நாங்கள் ஒதுக்கீடு செய்தோம். ஆனால் 1,038 கிலோ லிட்டர்தான் விற்பனை ஆகியிருக்கிறது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அரசாங்கத்தைப் பொறுத்தளவிற்கு ஒதுக்கீடு செய்கிறோம். அது கடைகளுக்குப் போகின்றது. வேண்டுமென்று சொன்னால் ஈரோட்டிற்கு நானும் அவரும் நாளை காலை போகலாம் S.R.M. அலுவலகத்தில் வைத்து கணக்கெடுத்துக் கொடுக்கிறேன். ஆகவே, நான் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது முதல் மாதத்திலே வரப்பட்டது. அதற்குப் பிறகு ஏதாவது கடைகளிலே இந்த சப்ளை செய்யப்படுகிறதா என்பதை அமைச்சரே நேரடியாகச் சென்று பார்வையிட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இல்லாத பொருட்களை இருப்பதாகச் சொல்வதும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், நீங்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால், அமைச்சர் எழுந்திருந்து பதில் சொல்லிக்கொண்டே இருப்பார், நேரம்தான் கூடுதலாகும். சப்ஜெட்க்குள் பேசுங்கள்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** இல்லை, நான் உண்மையைச் சொல்ல வேண்டும். வேறு எதற்கு நாங்கள் ? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சட்டமன்றத்தில்கூட எதிர்க்கட்சிகள் விளக்கத்தைச் சொல்லவில்லை என்று சொன்னால், வேறு எங்கே போய் சொல்வது, உங்கள் வீட்டில் வந்து சொல்வதா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் விலையைக் குறைக்காவிட்டால் சிமெண்ட் ஆலைகள் அரசுடைமையாக்கப்படும் என்ற மிரட்டல் அறிவிப்பு எந்த நிலையிலே உள்ளது? நியாயவிலைக் கடைகள்மூலமாக பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா ஆகிய உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலதான் இன்றைக்குக் கட்டுமானப் பொருட்களுடைய விலைகளைப் பார்க்கிறபோது, குறைந்த விலையிலே 200 ரூபாயிலே அனைவருக்கும் சிமெண்ட் கிடைக்கும் என்ற நிலையை இந்த அரசு அறிவித்திருந்தது. ஆனால், இதுவரையிலும் எவ்வளவு பேர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது எவ்வளவு டன் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். கட்டுமானப் பொருள்களுடைய விலை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது ஒரு டன் இரும்பு 24,000 ரூபாயாக இருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சியிலே இன்றைக்கு அது 52,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மணல் ஒரு யூனிட் 1,000 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 3,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஜல்லி ஒரு யூனிட் 1,000 ரூபாயிலே இருந்து 2,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சிமெண்ட் 120 ரூபாயிலிருந்து 130 ரூபாயாக விற்றது, இப்போது 220 ரூபாயாக விற்றுக்கொண்டிருக்கிறது. மக்கள் மன்றம் இந்த விலையேற்றத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலும் உற்பத்திச் செய்யப்படுகின்ற பொருட்களுக்கு தற்போதைய விலை உயர்வுப்படி நெல்லுக்கு 1,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று விவசாயிகள் வற்புறுத்தி வருகிறார்கள். விவசாய சங்கங்கள் போராட்டம் நடத்தியிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி கோதுமைக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்குவதைப்போல, நெல்லுக்கும் 1,000 ரூபாய் ஒரு டன்னுக்கு வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால், மத்திய அரசிலே அங்கம் பெற்றிருக்கிற உங்கள் அரசு, இன்றைக்கு விவசாயிகளுக்காக வாதாடுகிறதா அல்லது மத்திய அரசிடம் வலியுறுத்தி அந்த



1,000 ருபாயைப் பெற்றுத் தருவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதாவது கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்களா என்றால் இல்லை. ஆகவே, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே, கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று அதை மட்டும் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற, வேளாண்மைத் தொழிலை நம்பி வாழுகின்ற விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்கப்படவில்லை. இன்றைக்கு உரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், இங்கே இருக்கிற பல்வேறு தொழிற்சாலைகள் உரத்தை உற்பத்தி செய்யவில்லை என்ற நிலை தமிழ்நாட்டிலே நிலவி வருகிறது. ஆனால், அமைச்சர்களைக் கேட்டால், தேவையான உரம் இருக்கிறது ... (குறுக்கீடு)

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள், உரம் கிடைக்கவில்லை என்று சொல்லுகின்றார்கள். 2006-2007, 2007-2008 ஆண்டுகளில் உரத் தட்டுப்பாடு என்பதே இல்லை. டி.ஏ.பி. உரத்தைத் தயாரிக்கின்ற ஸ்பிக் நிறுவனம், உரம் தயாரிப்பதை நிறுத்திவிட்டது. இருந்தாலும், டான்பெட்டான்ஃபெட்மூலம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், உரத்தை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்து வழங்க வேண்டுமென்று முடிவெடுத்து, அதற்காக 30 கோடி ரூபாயை ஒதுக்கி, தேவையான டி.ஏ.பி. உரம் வரவழைக்கப்பட்டு, தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் ஸ்டாக் இருக்கிறது. பற்றாக்குறை என்பதே இந்த இரண்டு ஆண்டு காலங்களில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைக் கருத்தரங்கைக் கூட்டி, விவசாயிகளை அழைத்து, யூரியா கிடைத்திருக்கிறதா, காம்ப்பிளக்ஸ் கிடைத்திருக்கிறதா, சூப்பர் கிடைத்திருக்கிறதா, பொட்டாஷ் கிடைத்திருக்கிறதா என்று கேட்டு, ஒரு கருத்தரங்கு நடைபெறுமேயானால், விவசாயிகள் அதைக்

குறிப்பிட்டுக் காட்டுவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டில் பன்னிரண்டு மாவட்டங்களில் வேளாண்மைக் கருத்தரங்குகள் நடைபெற்றன. அப்படி நடைபெற்ற கருத்தரங்குகளுக்கு 2,500-லிருந்து 3,000 விவசாயிகள் வருகை தந்தார்கள். எந்த விவசாயியும் உரம் கிடைக்கவில்லை என்று புகார் தெரிவிக்கவில்லை.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் வரட்டும். அந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், நீங்கள் சப்ஜெக்டிலே பேசுங்கள். நீங்கள் கேள்விமேலே கேள்வி கேட்டுக்கொண்டேயிருந்தால், அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். உங்கள் நேரம்தான் போய்க்கொண்டேயிருக்கும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை. சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் 3,000 வேளாண்மை . . . *(குறுக்கீடு)* இருங்கள். பின்னர், எதைத்தான் சொல்வது? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்ததும், அவருடைய மாவட்டத்திற்கு நான் வருகின்றேன். விவசாயிகளுடைய கருத்தரங்கைக் கூட்டலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு கட்டாயம் வரவேண்டும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நாங்களும் வருவோம். கேள்விகளைத் தொடுப்போம். அப்பொழுது அமைச்சர் அவர்கள் திண்டாடுகிற நிலை உருவாகும்.



அத்தியாவசிய உரங்களுடைய விலை பல மடங்கு ஏறியிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். கேட்டால், இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், எதிர்காலத்தில் உணவு உற்பத்தி என்பது குறைந்துவிடுமோ என்கிற அச்சம் விவசாயிகள் மத்தியிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. முதலில், தழை உரத்தை வைத்து விவசாயம் செய்தவர்கள், குறிப்பிட்ட அளவிற்கு உற்பத்தியைச் செய்தார்கள். அதற்குப் பிறகு, நவீன காலத்திற்கு மாறமாற, உற்பத்திச் செய்வதற்குத் தேவையான உரங்களைப் பெற்று, விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைச் செய்கிறபோது, நாட்டிலே அதிக உற்பத்தியைச் செய்தார்கள். அது எதிர்காலத்திலே குறைந்துவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் விவசாயச் சங்கங்கள் இன்றைக்கு வலியுறுத்தி வருகின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் விரைவிலே நடத்தப்படும், அதற்கான ஏற்பாடுகள் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று 2006-2007 நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருந்தது. சென்ற ஆண்டில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில், ஆளுங்கட்சியின் வரலாறு காணாத வன்முறையின் காரணமாகவும், தோழமைக் கட்சிகளின் கண்டனம் காரணமாகவும், முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை இரத்து செய்து அறிவிக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலைப் பற்றி, இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதும் கூறப்படவில்லை. ஜனநாயகத்தில் மிகுந்த நம்பிக்கையுண்டு என்று அவ்வப்போது கூறிக்கொள்ளும் இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை விரைவிலே நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் வைத்தியநாதன் கமிட்டியின் பரிந்துரைகளில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும், நபார்டு வங்கியும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத நிலை ஏற்படும் எனத் தெரிவித்திருக்கிறது. அரசு இதன் உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான், இந்த கூட்டுறவு சங்கங்களிலே டெபாசிட் செய்தவர்கள், ஏழையெளிய மக்கள், கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், ஏறத்தாழ ஐந்து இலட்சத்திற்கும்

மேற்பட்டவர்கள், கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பிட்ட அந்தக் காலம் நிறைவுபெற்றதற்குப் பிறகும், அவர்கள் டெபாசிட் செய்த அந்தத் தொகை கொடுக்கப்படவில்லையென்ற நிலை தமிழ்நாட்டிலே நிலவி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்கெங்கே அப்படிக் கொடுக்கப்படவில்லை என்று கேட்கக்கூடும். பல சங்கங்கள் இருக்கின்றன. இன்றைக்குக் குறிப்பிட்டுக் காட்டவேண்டுமென்று சொன்னால், ஈரோடு மாவட்டத்திலே உள்ள கெட்டிச்சேயூர், கூவலூர் மற்றும் பொம்மநாயக்கன்பாளையம் போன்ற பகுதிகளில் உள்ள இதுபோன்ற நூற்றுக்கணக்கான சங்கங்களிலே இன்றைக்கு deposit தொகையைக் கட்டியவர்கள், பணத்தைப் போட்டவர்கள் அந்தத் தொகையை குறிப்பிட்ட காலத்திலே தங்களுடைய திருமணத்திற்கோ, தங்கள் தேவைக்கோ அந்தக் குறிப்பிட்ட காலம் முடிந்ததற்குப் பிறகும் அவர்களுக்குத் திருப்பிச் செலுத்த முடியாத, கொடுக்க முடியாத அவல நிலை கூட்டுறவுச் சங்கங்களிலே நிலவி வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

அதேபோல, வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டில் கடுமையான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு, விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல், பழுதடைந்த பாலங்களைச் செப்பனிடுதல், நான்கு சக்கர வாகனங்கள், இரண்டு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத அளவிற்கு, ஏன் மனிதர்களேகூட நடமாட முடியாத அளவிற்குக் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளைச் சீரமைத்தல் ஆகியவைதான் தற்போதைய உடனடித் தேவைகள். தமிழ்நாட்டில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடத்திலேயிருந்து தமிழக அரசு கேட்ட நிதித் தொகை 1,510 கோடி ரூபாய். மத்திய அரசின் நிதிநிலையை எதிர்பார்த்து, உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று 200 கோடி ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளதாகவும் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலேகூட 56.5 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, முரசொலியிலே வந்த முதலமைச்சர் அவர்கள் கொடுத்த செய்தியைப் பொறுத்தவரையிலும் சாலைகள், ஏரிகள், குளங்கள் பராமரிப்பு நிவாரணப் பணிகள், உதவித் தொகைகள், பாலங்கள் பழுதுபார்த்தல் போன்ற பணிகளுக்காக ரூ.86.5 கோடி என்றும், 143 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மீதம் 57 கோடி ரூபாய் இருப்பிலே உள்ளது என்றும் 24-3-2008 அன்று முரசொலியிலே



முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 200 கோடி ரூபாயிலே மீதமுள்ள தொகை 57 கோடி ரூபாய் இப்பொழுது பெய்த மழைக்கு நிவாரணத்திற்காகப் பயன்படுத்தப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், 1,510 கோடி ரூபாய் நிதி உதவி கோரப்பட்டது. இது அதிகாரிகளின் தவறா அல்லது இந்த அரசின் தவறா அல்லது மக்களை ஏமாற்றப் போட்ட நாடகமா என்பது குறித்து ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலத்தான், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், பக்கம் 30, பத்தி 66-ல் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் திட்டத்திற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,500 கோடி ரூபாயும் இந்த ஆண்டு 750 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதுவரையிலும் 59 இலட்சத்து 55 ஆயிரம் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 27 இலட்சத்து 86 ஆயிரத்து 255 பயனாளிகளுக்கு மட்டும்தான் இதுவரை வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மீதமுள்ள 31,68,754 தொலைக்காட்சிப் பெட்டிகள் அரசிடத்திலே உள்ளதா அல்லது இன்னும் டெலிவரி செய்யப்படவில்லையா, இது குறித்து விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இந்த அவையிலே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய ஒத்துழைப்போடு முதலமைச்சரே உட்கார்ந்துகொண்டுதான் டெண்டரை open செய்து, இவ்வளவு தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க வேண்டுமென்று முடிவெடுக்கிறார்கள். ஆனால், நினைத்தால் ஒரே நாளிலே இலட்சக்கணக்கிலே தொலைக்காட்சிப் பெட்டிகளைச் செய்துவிட முடியாது. ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வர, வர தமிழ்நாடு முழுவதும் வினியோகம் செய்துகொண்டிருக்கின்றோம். எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் எவ்வளவு தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் முடிவெடுத்ததோ அவற்றை நிச்சயமாக உற்பத்தியாளர்கள் அரசுக்கு ஒப்படைத்தவுடன் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 மார்ச் 31

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டு காலத்தில் நீங்கள் வழங்கியது 27,86,255. நீங்கள் இன்னும் எவ்வளவு பேருக்கு வழங்கப் போகிறீர்கள்? எத்தனை ஆண்டுகளிலே வழங்கப் போகிறீர்கள்? உங்கள் ஆட்சி இருக்கும் வரையிலே வழங்கப் போகிறீர்களா என்பதுதான் கேள்விக்குறியாக இருந்துகொண்டிருக்கிறதே தவிர, நாங்கள் அதைத்தான் கேட்க விரும்புகிறோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் யார் யாருக்கு இல்லையோ, ரேஷன் அட்டை வைத்திருந்தால், அத்தனை பேருக்கும் இந்த ஆட்சியில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு இல்லையென்ற பட்டியலை இவர்கள் தயாரித்து வைத்திருக்கிறார்களா இல்லையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கென்று அந்தந்தப் பகுதிகளிலே குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்கள்தான் அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

முற்பகல் 11-10

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ரேஷன் அட்டை வைத்துக் கொண்டிருப்பவர்கள் கலர் டி.வி. இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஒரு அரசு நினைத்தால், ஓரே மணி நேரத்தில் எவ்வளவு பேர் ரேஷன் அட்டை வைத்துக் கொண்டிருப்பவர்கள், கலர் டி.வி. பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள், இல்லாதவர்கள்



2008 மார்ச் 31] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

என்பது குறித்த பட்டியல் உங்கள் கையிலே இருக்க வேண்டும். தேர்தல் நேரத்திலே நீங்கள் சொன்னது, 6 மாதக் காலத்தில் கலர் டி.வி. வழங்குவேன், 6 மாதக் காலத்தில் கேஸ் அடுப்பு வழங்குவேன், 6 மாதக் காலத்திலே தலா ரூ.300 வழங்குவேன் என்று வாக்குறுதியைத் தந்துவிட்டு, இரண்டு ஆண்டு காலம் கழிந்த பிறகு, நீங்கள் வழங்கியிருப்பது இவ்வளவுதான் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதக் காலத்திற்குள்ளாக அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? (குறுக்கீடுகள்) அதேபோன்று, இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் பேசினால் எப்படி? அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** சென்ற ஆண்டு 25 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. விலை குறைந்து, 34 இலட்சம் பேருக்கு இந்த ஆண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதாக முடிவு செய்து, அதற்காக ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆர்டர் சில கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனிகள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைச் செய்து அரசுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு ஓர் ஆண்டு கால அவகாசம் இருக்கிறது. வருகிறபோது எல்லாம் உடனே கொடுக்கப்படுமே தவிர, அலாவுதீனுடைய அற்புத விளக்கு இருந்தால், தேவைப்படுகின்ற 34 இலட்சம் டி.வி.-க்களும் ஓரே நாளிலே செய்து கொடுக்க முடியும் என்று சொல்லலாம். அலாவுதீனின் அற்புத விளக்கு முதலமைச்சரிடம் இல்லை. இந்த அரசிடத்திலே இல்லை. அதனாலே, வருகின்றபோது எல்லாம் வழங்கப்படும் என்று அந்தக் குழுவினுடைய ஓர் உறுப்பினர் என்ற முறையில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலாவுதீன் அற்புத விளக்காக நீங்கள் இருக்க வேண்டாம். Atleast ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்க முடியுமா என்பதுதான் எங்களுடைய கேள்வியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவிலேகூட, இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. இருக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதிக் கேட்டும் அந்தக் குழுவிலே இடம் பெற மாட்டோம் என்று மறுத்திருக்கிறார்கள். ஆனால், இப்போது அக்கறையோடு இங்கே கேள்வி கேட்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நான்கு நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் டெண்டர்களை யாருக்குக் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்ய எங்களை அழைத்திருக்கிறீர்கள். ஆனால், தேர்தல் அறிக்கையை நீங்கள் அறிவிக்கின்றபோது எங்களை அழைத்துப் பேசினீர்களா என்பதை நான் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் வீடுகள்தோறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்தார்கள். அதற்குப் பின்னாலே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தனது சுற்றுப் பயணங்களின்போதும், ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், ரேஷன் அட்டை வைத்திருக்கின்ற அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** No, No, No. எங்களுடைய தேர்தல் அறிக்கையை மீண்டும் ஒருமுறை அவர் படித்துப் பார்க்க வேண்டும்.



வீடு இருக்கிறவர்களுக்கெல்லாம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி என்று எங்களுடைய தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கவில்லை. முதலில் அதைப் படித்துப் பாருங்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்வது வரட்டும். யார் யாருக்கு (குறுக்கீடுகள்) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லையோ . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) சரி சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ரேஷன் அட்டை இருக்கின்ற அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று சொன்னதற்குப் பின்னால், இப்போது சாதுர்யமாக, யார், யாருக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லையோ அவர்கள் ரேஷன் அட்டை வைத்திருந்தால், வழங்குவோம் என்று இன்றைக்குச் சொல்கின்றார். ஆனால், அன்றைக்கு அப்படிச் சொல்லவில்லை. அனைவருக்கும் வழங்கப்படும் என்றுதான் சொன்னார்கள். அதைத்தான் எதிர்க்கட்சி என்ற முறையில் கேட்கின்றோம். அனைவருக்கும் வழங்குவோம் என்று சொன்னீர்களே, ரேஷன் அட்டை வைத்திருக்கின்ற அனைவருக்கும் வழங்குங்கள் என்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை இந்த அவைக்கு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருக்கக்கூடிய கருத்தின் அடிப்படையிலே, அந்தக் கருத்தை நான் பல கூட்டங்களிலே பிரச்சார நேரத்தில் எடுத்துச்சொன்னது உண்மை. அதுமட்டுமல்ல, இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கக்கூடிய உயர்மட்டக் குழுவிலே எல்லோருக்கும் வழங்கலாம் என்று என்னுடைய கருத்துகளை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதேபோல, பல உறுப்பினர்கள்கூட இந்தக் கருத்துகளை வலியுறுத்தி நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே சுட்டிக்காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். முதலில் யார் யாருக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லையோ அவர்கள் ரேஷன் அட்டை வைத்திருந்தால் போதும். அவர்களுக்கு வழங்குவோம், அதற்குப் பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று அந்தக் குழுவிலேகூட

எங்களிடத்திலே உறுதிமொழி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தக் கருத்தைத்தான் நான் வலியுறுத்தி தொடர்ந்து எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, அதுவல்ல என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதைப் பொறுத்தளவுக்கு பயனாளிகள் பட்டியல் என்பது எந்தக் கட்சியையும் சாராமல், இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றெல்லாம் பார்க்காமல் ஒவ்வொரு ஊராட்சியிலும், ஊராட்சி மன்றத் தலைவர்கள், நிர்வாக அலுவலர்கள், ஒரு தலைமை ஆசிரியர் என்ற அடிப்படையில்தான் குழு அமைக்கப்பட்டு பட்டியல் தயார் செய்யப்படுகிறது. அதிலே கட்சியெல்லாம் பார்ப்பது இல்லை. அவர்கள்தான் தயார் செய்து அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பார்ப்பது இல்லை. எங்கள் மாவட்டத்தில்கூட, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அந்தத் தொகுதியிலும் தொடர்ந்து கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, கட்சியெல்லாம் பார்ப்பது இல்லை. ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான் பட்டியலைத் தயார் செய்கிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றெல்லாம் சின்னத்திலே நிற்கவில்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியிலே இதைத் தேர்வு செய்வது என்பது ஊராட்சி மன்றத் தலைவர்களை உள்ளடக்கியது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, பதிவு செய்தவர்களுக்கு 3 ஆண்டு காலத்திற்கு மாதம் 300 ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. பக்கம் 53, பத்தி 117-லே, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு, இதுவரையிலும் 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 இளைஞர்கள் மட்டும்தான் பயனடைந்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் சுமார் 55 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்துள்ளார்களே, அவர்களுக்கு நீங்கள் எப்போது வேலை கொடுக்கப் போகிறீர்கள் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே



குறிப்பிடவில்லை.

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய நாடே வியக்கும்வண்ணம் ஒரு கோடியே 88 இலட்சம் நிலமற்ற விவசாயிகள் மற்றும் சிறு குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கொண்டுவந்த உன்னதத் திட்டமான உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்மூலமாக, கருவிலே இருந்து கல்லறை வரையிலும், விவசாயிகள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டத்தைச் செயல்படுத்தி, 3 மாத காலத்தில் 201 கோடியே 18 இலட்சம் ரூபாய் வழங்கி சாதனை படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், இந்த அரசு இந்தத் திட்டத்தையே சின்னாபின்னமாக்கும் எண்ணத்தோடு இந்தத் திட்டத்தை மாற்றி, புதிய பெயர் சூட்டி, இரண்டு ஆண்டு காலமாக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வெட்டைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், மின்சார அளவு 8,775 மெகா வாட் இருந்த நிலையிலிருந்து, தற்போது மின்சாரத் தேவை 8,800 மெகா வாட் என்ற நிலையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்க கடந்த 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் அன்றைய தி.மு.க. அரசால் அமைக்கப்பட்டது. உங்கள் ஆட்சி வந்தவுடனே தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று நீங்கள் பெயர் மாற்றிவிட்டீர்கள். அதுவும், முதலமைச்சர் விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம் என்று நீங்கள் ஆரம்பித்தீர்கள். இப்போது மீண்டும் இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை ஒரு கோடியே 66 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம், ஈமச்சடங்கு உதவி மற்றும் இழப்பீடு போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வரும், 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக 152 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்படவே இல்லை என்று உண்மைக்கு மாறாகப் பேசக்கூடாது. அப்படித்தான் எங்கள்

மாவட்டத்திலே... (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். எங்கள் மாவட்டத்திற்கு வாருங்கள், விவசாயிகளை அழைத்துப் பேசுங்கள். உரம் கிடைக்கிறதா, இல்லையா என்ற தகவலை அறிந்துகொள்வீர்கள் என்று சொன்னீர்கள். கோபிசெட்டிப்பாளையம் உங்கள் தொகுதிதான், அங்கே நானும், மத்திய இணை அமைச்சர், கைத்தறித் துறை அமைச்சர் எல்லாம் கலந்துகொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் ஏன் அங்கு வரவில்லை? வந்தால் எதுவும் பேசுவதற்கு உங்களிடம் ஒன்றும் இல்லை, அதனாலே வருவது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வந்து கருத்துகள் சொல்கிறபோது அமைச்சர் அதற்குப் பின்னாலே கருத்து சொல்கிற வாய்ப்பு இருக்கிறது. மீண்டும் நாங்கள் அந்தக் கருத்துகளைப் பரிமாறுவதற்குச் சட்டமன்றத்திலே இடம் இருக்கிறதே தவிர அங்கே இடம் இல்லை. அதைப் புரிந்துகொள்ள வேண்டும் அமைச்சர் அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) நீங்கள், எங்களுடைய ஆட்சி இருக்கிறபோது இங்கே இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தனைபேர் எங்களுடைய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபோது, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்குப் பிறகு, இரண்டாண்டு காலத்தில் நீங்கள் அதன் பெயரை மாற்றினீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, மூன்றே மாத காலத்தில், 201 கோடியே 18 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், நீங்கள் எவ்வளவு வழங்கியிருக்க வேண்டும்? ஆகவே, அந்த நிவாரணப் பணிகள் சரியான முறையில் நடைபெறவில்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 11-20

அதேபோல, மின்சாரப் பற்றாக்குறையால் தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் இருளில் மூழ்குகின்ற நிலை உருவாகியிருக்கின்றது. அமைச்சரவர்கள் எதற்கெடுத்தாலும் உங்கள் ஆட்சிக் காலத்தில் சரியான முறையில் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளையே இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, நேரம் போதாத காரணத்தினால் நான் குறிப்பிட விரும்புகின்றேன்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) அவர் கேள்வியையே கேட்டுக்கொண்டிருந்தார், அமைச்சர்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். (குறுக்கீடு) மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-2001 தி.மு.க. ஆட்சியில் புதிதாக 560 மெகா வாட் அளவிற்கு மட்டும்தான் மின் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், 2001-2006 மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் ஆண்டுக்கு 2,047 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு உற்பத்திச் செய்யப்பட்டிருக்கிறது, தி.மு.க ஆட்சியில் எவ்வளவு என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோல, தமிழகத்தைப் பொறுத்தவரையில், தேசிய நதிகளை இணைக்கும் திட்டம், தென்னக நதிகள் இணைப்புத் திட்டம் என்று பல்வேறு வாக்குறுதிகளை தேர்தல் நேரத்தில் அள்ளித் தந்தீர்கள். ஆனால், கடைசியில் பார்க்கின்றபோது, கழுதை தேய்ந்து, கட்டெறும்பான கதையாக இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற அணைகளுக்கு நதிகளிலிருந்து தண்ணீர் திருப்பி விடப்படும் என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள்.

அதேபோல, தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு சரியாக இல்லை என்பதை நாங்கள் மட்டுமல்ல, இங்கே அமர்ந்து கொண்டிருக்கின்ற உங்களை ஆதரித்துக் கொண்டிருக்கின்ற கட்சிகள் அனைவருமே இன்றைக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே பக்கத்திலே இருக்கின்ற அருமை அண்ணன்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிகளை தேசியமயமாக்க வேண்டுமென்பதில் எங்களுக்கும் மாறுபட்ட கருத்து இல்லை, உங்களுக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், அது அவ்வளவு எளிதாக நடக்கக்கூடியதாகத்

தென்படவில்லை. நீர் அதிகம் உள்ள மாநிலங்கள், அதை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பவில்லை. மகா நதியிலிருந்து கோதாவரிக்குக் கொண்டு வந்து, கோதாவரியிலிருந்து கிருஷ்ணாவுக்குக் கொண்டு வந்து, கிருஷ்ணாவிலிருந்து பெண்ணையாறு, பாலாற்றுக்குக் கொண்டு வந்து, எடுத்துப் போவது என்பது ஒரு திட்டம். ஆனால், ஒரிசா மக்கள் அதை விரும்பவில்லை. ஆனால், குறைந்த அளவு நம்மோடு இணைந்திருக்கின்ற மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம்-- ஏனென்றால், Krishna water வருகின்றது--ஒரிசா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர்களையாவது வைத்து, நமக்குள் பேசி, வீணாகின்ற நீரைப் பங்கிட்டுக்கொள்ளலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு அறிவுறுத்தியதன் அடிப்படையில், நான் அந்த மாநிலங்களில் இருக்கின்ற நீர்ப்பாசனத் துறை அமைச்சர்களுக்கெல்லாம் கடிதம் எழுதினேன். 'உட்கார்ந்து பேசுவோம், இதிலுள்ள சாதக, பாதகங்களைப் பற்றி முதற்கட்டமாகப் பேசுவோம், பின்னர் முதலமைச்சர்கள் பேசட்டும், மத்திய அரசு தலையிடட்டும்' என்று எழுதினேன். ஒரு கடிதத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதினேன். ஆனால், யாரும் பதில் எழுதவில்லை. எழுதிய ஒருவர், எங்களுக்கு இதில் விருப்பமில்லை என்று எழுதிவிட்டார். ஆக நிலைமை அது.

பம்பா-அச்சன்கோவில் தண்ணீர் வீணாகக் கடலில் போய் கலக்கிறது. ஆனால் நமக்கு 22 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தால், இங்கிருக்கின்ற திருநெல்வேலி, கோவில்பட்டி மற்றும் சங்கரன்கோவில் போன்ற பகுதிகள் பயன்படும். ஆனால், அதைத் தர மறுக்கின்றார்கள். பாண்டியாறு-புன்னம்புழாவின் நிலைமை என்ன? 14 டி.எம்.சி. தண்ணீர் வீணாகப் போகின்றது. நாம் 7 டி.எம்.சி.தான் கேட்டோம். ஆனால், அதையும் கொடுக்க மறுக்கின்றார்கள். ஆக, இப்படிப்பட்ட பிரச்சினைகள் மாநிலங்களிடையே இருக்கின்ற காரணத்தினால்தான், மற்ற மாநில நதிகள், பன்மாநில நதிகளை இணைப்பதைவிட, intra-state-மாநிலத்திற்குள்ளே இருக்கின்ற நதிகளையாவது இணைப்போம் என்ற தத்துவத்தின் அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள் இங்கேயிருக்கின்ற நதிகளை இணைப்பதற்கு ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய அரசு அதற்கு நிதி உதவிசெய்யவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மத்திய அரசும் அதைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருக்கின்றது. இவ்வளவு உயரிய நோக்கத்தை, ஏதோ தேய்ந்து, ஏதோ ஆனது போல் என்று சொல்கின்றாரே, அது அவருக்கு அடுக்குமா? *(மேசையைத் தட்டும் ஒலி)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள், நீங்கள் பேச ஆரம்பித்து 36 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

முற்பகல் 11-25

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலேயும் நீங்கள்தான் இருக்கின்றீர்கள். பக்கத்து மாநிலங்களிலும் உங்களுடைய தோழமைக் கட்சிகள்தான் இருக்கின்றன. ஆகவேதான், நாங்கள் இங்கே கேட்கின்றோம். தொடர்ந்து மத்திய அரசிலே இடம் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். தேர்தல் வந்தபோது, அனைத்து நதிகளும் இணைக்கப்படும், தென்னக நதிகளும் இணைக்கப்படும் என்று நீங்கள் சொன்னீர்கள். நான் அதை விட்டுவிட்டு வேறு பொருளுக்கு வருகின்றேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 9-5-2007 ஆம் தேதியன்று சட்டமன்ற விவாதத்திலே பதிலளிக்கின்றபோது விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு வழங்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 3,000-லிருந்து ரூ. 4,000 ஆக உயர்த்தப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றுவரையிலும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கே இந்தக் கதி என்று சொன்னால், மக்களுக்கு என்ன கதி ஏற்படும் என்பதை நாட்டு மக்கள் இன்றைக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. வேதரத்தினம் கொஞ்சம் இருங்கள். திரு. செங்கோட்டையன் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களை வாட்டி வதைக்கும் அத்தியாவசியப் பொருள்களுடைய விலை உயர்வு, கட்டுமானப் பொருள்களுடைய கடுமையான விலை உயர்வு, தமிழகத்தை இருளிலே மூழ்கடித்துக்கொண்டிருக்கும் மின்வெட்டு, அமைதிப் பூங்காவாக

இருந்த தமிழகம் இன்றைக்கு தீவிரவாதிகளுடைய புகலிடமாக மாறிவிட்ட நிலைமை, சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டிருக்கும் நிலை, பின்தங்கிப் போய் இருக்கும் நிலை போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இந்த அரசு கவனிக்காமல், விளம்பர வெளிச்சத்திலும், பாராட்டு மழையிலும் நனைந்துகொண்டிருக்கிற இந்த அரசுக்கு, மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தேர்தல் வருகின்றபோது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக அமர்வார்கள், அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேதரத்தினம். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் செங்கோட்டையன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொன்னார். கலர் டி.வி. விஷயத்தில் டெண்டருக்கு மட்டும்தான் எங்களைக் கூப்பிட்டீர்கள், தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும்போது ஏன் கூப்பிடவில்லை என்று சொன்னார். நிச்சயமாக அடுத்த முறை தேர்தல் அறிக்கை தயாரிக்கும்போது அவரும் நம்முடன் இருப்பார் என்று நான் நம்புகிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றவர்களைப்போன்று காட்டிக்கொடுக்கின்ற புத்தி எனக்குக் கிடையாது. நீங்கள் அழைத்தாலும் வரப்போவதில்லை, என் உயிர்மூச்சு இருக்கும் வரை புரட்சித் தலைவிக்காகத்தான் இருப்பேனே தவிர, இடம் மாறி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேதரத்தினம், ஆரம்பியுங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்போதெல்லாம் எப்போது நிதிநிலை அறிக்கை வரும் என்று அனைத்துத் தரப்பு



மக்களும் எதிர்பார்க்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு தரப்பு மக்களும், இந்த நிதிநிலை அறிக்கை எங்களுக்காகத்தான் போடப்பட்டது, இல்லை, இல்லை எங்களுக்காகத்தான் போடப்பட்டது என்று பெருமிதத்துடன் மகிழ்ந்து பாராட்டக்கூடிய ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையைத் தந்த நம் மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயத்திலேலே ஆரம்பித்து, விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், மாணவர்கள், முதியோர்கள், சிறுபான்மையினர், அரவாணிகள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் சிறு வணிகர்கள் உட்பட என்று அனைத்துத் தரப்பு மக்களும், இன்றைக்கு இது ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. குறிப்பாக, 60 சதவீத விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் இன்றைக்கு விவசாயத்திற்கு மிகப் பெரிய அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

எந்தத் தொழிலையும் ஒரு நம்பிக்கையோடு மனதிலே அச்சம் இல்லாமல் மன நிறைவோடு செய்தால்தான் அந்தத் தொழில் சிறப்படையும். குறிப்பாக, கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்திற்கு முன்பு படுகின்ற பாடு, என்னைப் போன்ற கிராமப்புற பகுதிகளில் இருந்து வருகின்றவர்களுக்குத்தான் தெரியும். ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பே மார்கழி மாதத்தில், அவர்கள் கர்ப்போட்டக் காலம் பார்க்க ஆரம்பிப்பார்கள். மார்கழி மாதம் 13 ஆம் தேதியிலிருந்து 25 ஆம் தேதி வரையில் கர்ப்போட்டக் காலம் துலாம் பார்ப்பார்கள். அடுத்த ஆண்டு எப்படி மழை இருக்கும் என்று, அந்தக் கால நேரத்தைக் கணக்கிட்டு வரும் ஆண்டில் இந்தக் காலத்தில், இப்போது மழை துவங்கும் என்கின்ற ஓர் அறிகுறியை வைத்துக்கொண்டு, அடுத்த ஆண்டு விவசாயம் ஆரம்பிப்பார்கள். அப்போது என்ன நடக்கும் என்றால், வேண்டாத கடவுளையும் வேண்டிக்கொள்வார்கள். விதைப் பெட்டியையும் கையில் தூக்கிக்கொள்வார்கள். மனைவியை என்ன செய்யச் சொல்வார்கள் என்றால், மனைவியை வெளியில் அனுப்பி 'சகுனம் எப்படி இருக்கிறது என்று பாரடி' என்று சொல்வார்கள். சகுனம் பார்த்து விதைப் பெட்டியை வெளியிலே தூக்கிக் கொண்டு வருவார்கள். தோளிலே ஏர் கலப்பையைத் தூக்கி வைத்துக்கொண்டு வருவார்கள். அதைப் பார்த்தால், ஏதோ யுத்த களத்திற்கு இராணுவ வீரர்கள் புறப்பட்டுப் போகிற மாதிரி புறப்பட்டுப் போவார்கள். நல்ல

சகுனம் அமைந்திருக்கிறது, நன்றாக இருக்கிறது, இந்தப் பருவ சூழல் என்று போய்க் கொண்டிருப்பார்கள். 10 அடி, 15 அடி தூரம் போனவுடனே அங்கே பார்த்தால், சொசைட்டியிலிருந்து வருவார்கள் வசூல் பண்ணுவதற்கு. எல்லா சகுனமும் போய்விட்டது. அந்த ஆளைப் பார்த்தவுடனே பாதி நெல் கீழே கொட்டிவிடும். அது மாதிரி ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? ஒரு நம்பிக்கையோடு விவசாயத்தைச் செய்வதற்குரிய ஒரு வாய்ப்பை நமது தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(முற்பகல் 11-30)*

இன்னும் சொல்லப் போனால், ஒரு காலத்தில் குடிசையிலே தொங்கிப் போன கயிற்றுக் கட்டிலிலே நமக்கு எதிர்காலம் உண்டா, மீண்டும் எலிக் கறி தானா, இல்லை கடந்த காலத்தைப் போல மீண்டும் தற்கொலை தானா என்று எண்ணி இருந்த உழவர் பெருமக்கள் எல்லாம் இன்றைக்கு ஒரு நம்பிக்கையோடு நமக்கு விடிவு உண்டு, எந்தச் சூழ்நிலையிலும் நமது டாக்டர் கலைஞர் அவர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள், அது வெள்ளமா, மழையா அல்லது வறட்சியா எந்தக் காலத்திலும் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மைக் கைவிடமாட்டார்கள், விவசாயிகளுடைய சுமைதாங்கியாக, இன்னும் சொல்லப் போனால், அவர்களுடைய வாழ்விலே வருகிற சிறு, சிறு அதிர்வுகளைத் தாங்கக்கூடிய shock absorber-ஆக இருக்கின்ற காரணத்தினால், ஒரு நம்பிக்கையோடு இன்றைக்கு விவசாயத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே விவசாயத்திற்கு ஒதுக்கி இருக்கின்ற பணம் மிக அதிகம்.

அடுத்து, 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வட்டி, அபராத வட்டி, அசல் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், கடந்த காலத்தில் உங்களுக்குத் தெரியும். 350 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி பண்ணிவிட்டு 450 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததாக தட்டி வைத்தார்கள். ஆனால், மக்கள் இன்றைக்கு எந்த ஒரு நிதிச் சுமையும் இல்லாமல், கடன் பயம் இல்லாமல் நல்ல முறையில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் 2006-2007-லே 1,250 கோடி ரூபாய் பயிர்க் கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த ஆண்டு 1,177 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த ஆண்டு 1,500 கோடி ரூபாய் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருப்பது விவசாயத்திற்கு மிகவும் உகந்ததாக உள்ளது.



அதேபோல வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதம் 2006-2007-லே, 2007-2008-லே 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதம். இப்போது 5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். ஆக, எல்லா பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் இன்றைக்கு மகிழ்ச்சியோடு தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அந்த விளைச்சலின் காரணமாகத்தான் 2005-2006-ல் 61 இலட்சம் டன்னாக இருந்த கொள்முதல் 2006-2007-லே 82 இலட்சம் டன்னாகவும் 2007-2008-லே 100 இலட்சம் டன் ஆகவும் உயர்ந்திருக்கிறது. ஆனால், கடந்த காலத்தில் என்ன நடந்தது? கொள்முதலைப் பற்றிப் பேசினார்கள்.

நான் சிதம்பரத்திலிருந்து உங்கள் ஊர் வழியாகப் போய்க் கொண்டிருக்கும்போது கீரப்பாளையம் என்ற ஊர் வருகிறது. அது புவனகிரி பாலத்திற்கு அடுத்தது. அந்த ஊரில் பெரிய கூட்டம் நின்று கொண்டிருந்தது. அந்தக் கீரப்பாளையம் ஊர் எப்படி என்றால், இந்தியாவிலேயே சிறந்த கிராமம் என்று ஜனாதிபதி அவார்டு வாங்கிய கிராமம். அந்த மக்களை, அப்போது இருந்த ஜனாதிபதி திரு. அப்துல் கலாம் அவர்கள், நேரடியாக வந்து பாராட்டிச் சென்ற நிகழ்ச்சி எல்லாம் நடந்தது. அங்கே பெரிய கூட்டம் நின்று கொண்டிருந்தது. உடனே நான் காரிலிருந்து இறங்கிப் போய்ப் பார்த்தேன். பார்த்தால் அங்கே பெரிய அளவிலே கூட்டம் இருந்தது. சரி ஏதோ திரு. அப்துல் கலாம்தான் திரும்ப வந்துவிட்டார் போல இருக்கிறது என்று நினைத்தேன். நாம் முதலில் பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் எப்படி இருக்கிறது என்று பார்க்க வந்துவிட்டார் போல இருக்கிறது என்று நெருங்கிப் போய்ப் பார்த்தேன். அப்போது, திடீரென்று போலீஸ் அடிக்க ஆரம்பித்தது. என்ன என்று தெரியவில்லை. சுமுகமாக இருந்த மாதிரி தெரிந்தது கூட்டம். ஆனால், போலீஸ் அடிக்கிறதே என்று கிட்டே போய்ப் பார்த்தால், ஏதோ அசாம் உல்பா தீவிரவாதிகள் அல்லது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் போல போட்டுச் சாத்தினார்கள். மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். சரி, நானும் திரும்பி ஓடி வந்து காரிலே ஏறிக் கொண்டு டிரைவரிடம் சொன்னேன்; அடித்த அடி தாங்க முடியாமல் ஓடிவந்தேன்; செருப்பைத் தாண்டி கல் குத்திவிட்டது என்று சொன்னேன். எங்கே அண்ணே பார்ப்போம் என்றார். பார்த்தால் என் காலிலே இருந்த செருப்பு காணோம். கல் குத்தி, இரத்தம் வருவது எல்லாம் உண்மைதான் என்றான். துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று அத்தனை விவசாயிகளும் ஓடினோம். வேறு ஒன்றுமில்லை.

அவர்கள் வேறு ஒன்றும் கேட்கவில்லை. அந்த நெல்லைக் கொள்முதல் பண்ணச் சொல்லிக் கேட்டார்கள். இப்போதுகூட அண்ணன், நமது முன்னாள் அமைச்சர், எதிர்க்கட்சியினுடைய கொறடா வந்து சொன்னார்கள். வேளாண்மைக்கு ஒன்றும் சரியாகப் பண்ணவில்லை 1,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று. 2004-2005-லே நடந்த கதையைத்தான் நான் சொல்கிறேன். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? நமது உணவு அமைச்சர் அவர்கள் நெல் அறுவடை செய்வதற்கு முன்பாகவே இன்றைக்கு எல்லா இடங்களிலும் கொள்முதல் நிலையங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னோடு படித்த ஒரு பையன். அவனிடம் கேட்டேன், என்னப்பா என்ன எப்படி நெல் கொள்முதல் நிலைமை என்றேன். அண்ணே 15 நாளைக்கு முன்னாலேயே திறந்து விட்டார்கள் அண்ணே, நெல்லே வரவில்லை என்றான். ஏனப்பா என்றேன். இன்னும் அறுவடையே ஆகவில்லை அண்ணே என்றான். அந்த அளவுக்கு அறுவடை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே இன்றைக்கு நெல் கொள்முதல் நிலையங்களையெல்லாம் திறந்து எந்தவிதக் குறையும் இல்லாமல் இந்த விவசாயிகள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதை மட்டும் இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-35*

அடுத்து, விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள். இது ஒரு அருமையான திட்டம். இதுபற்றி கொஞ்சம் அதிகமாக நான் வலியுறுத்திச் சொல்ல வேண்டியதிருக்கிறது. ஏனென்றால், 1989-ல் தருமபுரி மாவட்டத்தில் நாம் ஆரம்பித்தது மகளிர் சுய உதவிக் குழுக்கள். ஆனால், அதற்கு உரிமை கொண்டாடுவதற்கு இங்கே ஒரு கூட்டம் இருக்கிறது. பிற்காலத்தில் இதை நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று சொல்வதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில் சட்டபூர்வ உரிமை பெற்ற சில பேரை கையோடு அழைத்துப் போக வேண்டியது இருக்கிறது. இல்லாவிட்டால் என்னுடையதுதான் என்று சொல்கிற கூட்டம்கூட இங்கே இருக்கிறது. அதனால்தான் நான் இதை வலியுறுத்திச் சொல்கிறேன். இந்த சுய உதவிக் குழுக்களுக்குக் கிட்டத்தட்ட ரூ.10 கோடி பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு இலட்சம் உறுப்பினர்களை 10,000 சுய உதவிக் குழுக்கள்மூலம் விவசாயத்தின் மேம்பாட்டிற்காக அரசு அமைத்துள்ளது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

அடுத்து, இலவச மின்சாரம். அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் வழங்குகின்ற ஒரு திட்டம் இது. ஒரு காலத்தில்



எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் ஆட்சிக்கு வருகிறபோது இந்த மின்சாரத் திட்டத்திற்கு மூச்சு திணறல் வந்துவிடும். பிறகு மறுபடியும் நமது கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அது திரும்ப உயிர்ப் பெறும். இடையில்கூட இந்தத் திட்டம் இரத்து என்று சொன்னார்கள். போராட்டம், அதற்குப் பிறகு தருகிறேன், ஆனால், Money Order அனுப்புகிறேன் என்றார்கள். எனக்குக்கூட Money Order அனுப்பினார்கள். ஆனால் அதற்குள் எங்கள் அப்பா செத்துப் போய்விட்டார். அவர் பெயருக்கு வந்தது. திரும்பி அதை மாற்றி ஏதாவது பண்ணலாமா என்று நினைத்து, என் தம்பி என்ன செய்தான் என்றால், எங்கள் அம்மா பெயருக்கு மாற்றம் செய்து கொடுங்கள் என்று கேட்டான். அப்படி மாற்றம் செய்து வருவதற்குள் எங்கள் அம்மா இறந்துபோய்விட்டார்கள். இந்த அம்மாவும் போய்விட்டார்கள். இலவச மின்சாரத் திட்டம் இப்போது தொடர்கிறது. அதற்கு உண்மையிலேயே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஆமாம். எதை எதையோ புரிந்துகொள்ள முடிகிறது. இது என்னவென்றே தெரியவில்லை. இலவச மின்சாரம் தருகிறார்கள். Money Order அனுப்பி நீங்களே கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்வது என்ன என்றே தெரியவில்லை. உலகத்திலே இது மாதிரி நான் கேள்விப்பட்டதும் இல்லை. அதனாலே, அந்தத் திட்டத்திற்குப் பிரச்சினையில்லாமல் ரூ.208 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பது உண்மையாகவே வரவேற்கத்தக்கது.

அடுத்தபடியாக, நல வாரியம். இந்த நல வாரியத்திற்கு ரூ.152 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பது மிக மிகப் பாராட்டுக்குரியது.

அதேபோல, ஆதி திராவிட மக்கள் தாட்கோமூலம் வாங்கிய கடன் இரத்து. ஏனென்றால், எல்லா விவசாயக் கடன்களையும் இரத்து செய்தாகிவிட்டது. வட்டி இரத்து செய்தாகிவிட்டது, அபராத வட்டி இரத்து செய்தாகிவிட்டது. ஆதி திராவிட மக்கள் தாட்கோமூலம் வாங்கியிருக்கிற கடன் கிட்டத்தட்ட ரூ.5.5 கோடி. அது விடுபட்டுப் போய்விட்டது. அதைக் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் உடனடியாக அதையும் இரத்து செய்திருக்கின்ற இந்த அரசு உண்மையாகவே பாராட்டப்பட வேண்டியது.

அடுத்து, விலைவாசியைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள். இங்கேகூட நமது எதிர்க்கட்சிக் கொறடா பேசும்போது, ஏலக்காய் ரூ.500-க்கு விற்றுக்கொண்டிருந்தது. இப்போது ரூ.700 விற்கிறது என்று சொன்னார்கள். பக்கத்தில் இருக்கிற திரு. லட்சுமணன் சொன்னார், அவர் ஊரில் நிரம்ப விளைகிறது. அவர் சொன்னார் “ரூ.500 என்பது

ரூ.700 ஆகவில்லை. ரூ.500, ரூ.450 ஆகிவிட்டது. வேண்டும் என்றால் நான் 1,000 டன் வாங்கித் தருகிறேன்" என்று. எதிர்க்கட்சி கொறடா ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன். ஏனென்றால், ரூ.450-க்கு கொடுத்தாலே இலட்சக்கணக்கான ரூபாய் இலாபம் கிடைக்கும் என்கிறார். ஏனென்றால், அவர் ஒரு வியாபாரி. அதனால் தவறான தகவல் தரக் கூடாது.

அடுத்தது, கூட்டுறவுத் தேர்தல் பற்றி. இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். கூட்டுறவுத் தேர்தலைப் பற்றிச் சிந்திக்காதவர்கள், கூட்டுறவுத் தேர்தலையே நடத்தாதவர்கள், இன்றைக்கு கூட்டுறவுத் தேர்தலைப் பற்றிச் சொல்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் மன நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

அதேபோல், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. ஏதோ தொலைக்காட்சிப் பெட்டி என்றால் ஆடம்பரப் பொருள் போல இங்கே ஏற்கெனவே பேசப்பட்டது. ஆனால், இன்றைக்கு என்ன ஆகியது என்றால், கிராமங்களில் இதற்கு ஏகப்பட்ட வரவேற்பு. ஊராட்சி மன்றத் தலைவர்கள், அதேபோல் அந்தக் குழுமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கெல்லாம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. இதிலே என்ன வேடிக்கை என்றால் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியே கொடுக்கக்கூடாது என்று சொன்னவர்கள், இதை எப்போது கொடுப்பீர்கள் என்று கேட்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி விரைவில் கொஞ்சம் கொஞ்சமாக வழங்கப்படும். அந்த வகையிலே எங்கள் வேதாரண்யம் தொகுதியிலே ஒரு சம்பவம் நடந்தது. கொடுக்கக்கூடாது என்று சொன்ன கட்சியினுடைய தலைவர் பொறுப்பிலே இருந்தவர், தலைவர் சொல்கிறார், இல்லாத வீட்டுக்குக் கொடுப்போம் என்கிறார். அந்த அம்மா சொல்கிறார், யாருக்கும் கொடுக்காதே என்று, அந்தத் தலைவர் பொறுப்பிலே இருந்த, கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தவர் சொல்கிறார், எல்லோருக்கும் கொடு என்கிறார். இதற்கு ஒரு உண்ணாவிரதம், நோட்டீஸ் வரை போட்டுவிட்டார். பெரிய, நல்ல மனமாற்றம்; இதுமாதிரி நல்ல மன மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நான்கூட சொன்னேன். ஏற்கெனவே இவர்கள் இந்த நல்ல மனநிலைக்கு வந்து இருந்தால், இந்தத் திட்டத்தை இன்னும்



செம்மைப்படுத்துவதற்கு, விரைவுப்படுத்துவதற்கு இவருடைய ஆலோசனை கிடைத்திருக்கும். அந்த வகையிலே இந்தத் திட்டம் சிறப்பான திட்டம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்று சொன்னார்கள். இந்தியா முழுவதும் இன்றைக்கு விலைவாசி உயர்வு. உலகம் முழுவதும் ஏறியிருக்கிறது. ஏனென்றால், கச்சா எண்ணெய் விலை கூடியிருக்கிறது. தங்கம் விலை கூடியிருக்கிறது. எங்கள் வேதாரண்யம் பகுதியிலேயிருந்து வெளிநாடுகளுக்கு, அரபு நாடுகளுக்கு ஏராளமானோர் சென்றிருக்கிறார்கள். அங்கேகூட இதே நிலைமைதான். விலைவாசி ஏறியிருக்கிறது. அதனால் பலபேர் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சிலபேர் தங்களுடைய அவதார புருஷராக வருணிக்கின்ற திரு. நரேந்திரமோடி ஆட்சியிலே இருக்கின்ற குஜராத்திலேகூட விலைவாசி ஏறியிருக்கிறது. அந்தப் பகுதியிலே இருந்தவர்கள் எங்கள் ஊருக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள், ஆண்டாண்டு காலமாக அங்கே போய் தொழில் செய்து கொண்டிருந்தவர்கள், கூலி வேலை செய்து கொண்டிருந்த கூலித் தொழிலாளர்கள் எல்லாம் இன்றைக்கு ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், நாம் விலைவாசியைச் சமாளிப்பதற்காக கூட்டுறவு அங்காடிகளிலே விலை குறைந்த அளவிற்கு பொருட்களை கொடுக்கிறோம். அதேபோல, கட்டுமானத் தொழிலுக்கான சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கான பல்வேறு முயற்சிகளை எடுத்து மிகச் சிறப்பாக போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே விலைவாசி உயர்வு நமது மக்களை பெரிய அளவில் பாதிக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு திட்டம், அருமையான திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இது மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம். 2006 மே வரைக்கும் 7.3 கோடி ரூபாய்தான் இந்தத் திட்டத்திற்காக மொத்த செலவே ஆகியிருக்கிறது. ஆனால், இப்போது 609 கோடி ரூபாய் மார்ச் 2008 வரைக்கும் நாம் செலவு செய்திருக்கிறோம். அதிலே பயனடைந்தவர்களில் கிட்டத்தட்ட 82 சதவிகிதம் பேர் பெண்கள், அதில் 59 சதவிகிதம் பேர் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆனால், இந்தத் திட்டம் என்னவாயிற்று

என்றால், ஆணுக்கும் பெண்ணுக்கும் 80 ரூபாய் கூலி. ஒரு சமயத்தில் இந்த அளவிற்குக் கிடைக்கவில்லை. 80 ரூபாய் கூலி என்று சொன்னவுடனே எல்லோரும் செய்தார்கள். கிராமப் பஞ்சாயத்திலே குளம் வெட்டுவது, வாய்க்கால் வெட்டுவது என்று சொல்லி ஒவ்வொரு இடத்திலேயும் பார்த்தால் 500 ஆட்கள் நிற்பார்கள். ஒரு வாரம் கழித்துப் பார்த்தால் 100 பேர், 50 பேர் என்று குறைந்து கொண்டே வந்தது. திட்டத்தில் ஏதோ குறையிருக்கிறது. ஆனால், கடந்த காலத்தில் அதில் என்ன குறை என்று கண்டுபிடிப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நமது மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் அந்தப் பணி நடைபெறுகின்ற இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து, (குறுக்கீடு) 5 நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடிக்க வேண்டும். டி.வி.-யிலே திரு. சமுத்திரம் பேசுவதுமாதிரி இருக்கிறது.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** சுற்றிப் பார்த்து இதிலே என்ன குறைபாடு என்று, சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை நேரடியாக, அந்த வேலை செய்கின்ற இடத்திற்குப் போய் - அதாவது நாகப்பட்டினம் மாவட்டத்திலே நடந்ததைச் சொல்கிறேன் - நேரடியாகக் கேட்டார்கள். அப்போது அவர்கள் தங்களுக்கு இருக்கிற குறையைச் சொன்னார்கள். காலையிலிருந்து சாயங்காலம் வரை வேலை செய்கிறோம், 35 ரூபாய், 40 ரூபாய்தான் எங்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது. அதனால் இந்தத் திட்டத்தில் நாங்கள் வேலை செய்வதால் எங்களுக்கு இலாபம் இல்லையென்றும், இதைவிட கூடுதலாக எங்களுக்குக் கிராமத்தில் சம்பளம் கொடுக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அப்போது அமைச்சர் அவர்கள், அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் எல்லோரையும் அழைத்து ஆலோசனை நடத்தி, இந்தத் திட்டத்தை எப்படிச் செம்மைப்படுத்தலாம், அவர்களுக்கு உரிய கூலி கொடுப்பதற்கு என்ன வழி என்பதற்கான முயற்சியை மேற்கொண்டு அந்தக் குறைபாடுகள் எல்லாம் தவிர்க்கப்பட்ட காரணத்தினால்தான் இன்றைக்கு கிட்டத்தட்ட 650 கோடி ரூபாய்க்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

அதேபோல கல்வித் துறை. ஒரு நாட்டினுடைய பொருளாதார ஏற்றத்தாழ்வை, சாதிசமயமற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதற்குக் கல்விதான் மிகச் சிறந்த ஆயுதம். அந்த வகையிலே உயர் கல்விக்கும் சரி, தொடக்கக் கல்விக்கும் சரி ஏராளமான நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல, சாலை மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமான திட்டம் அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி, மாம்பலம் கால்வாய்க் கரைகளில் உபரியாக உள்ள இடத்தில் சாலைகளை அமைத்து அதிவேக வட்டச் சாலைளைப் போட்டு, மற்ற மாநிலங்களுக்கு இணைப்பு கொடுப்பதற்குரிய சிறப்பான ஏற்பாட்டைச் செய்திருக்கிறீர்கள். அந்த வகையிலே அது ஒரு நல்ல திட்டம்.

அடுத்தது, பேருந்து. பேருந்தைப் பொறுத்தவரைக்கும் கடந்த காலத்திலே நடந்தது என்ன என்பது உங்களுக்குத் தெரியும். பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தால் போக வேண்டிய இடத்திற்கு போய்ச் சேரமுடியாது. இன்றைக்கு அண்ணன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தால், இன்றைக்கு வண்டிகள் புறப்பட்டால் போக வேண்டிய இடத்திற்குப் போய் நிற்கும். அதுமட்டுமல்ல, 5,500 புதிய பேருந்துகள், தனியார் பேருந்துகளை மிஞ்சக்கூடிய அளவுக்கு சிறப்பான சொகுசுப் பேருந்துகள் இன்றைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. நமது மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் தொகுதியிலே நடந்தது. கடந்த ஆட்சியிலே நடந்தது. பேருந்திலே போய்க்கொண்டிருக்கும்போது ஒரு 8 வயது பிள்ளை கீழே விழுந்து விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எத்தனை வயது குழந்தை?

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** 8 வயது குழந்தை. பஸ்ஸிலிருந்து பொத்துக்கொண்டு கீழே விழுந்துவிட்டது, இது கடந்த ஆட்சியிலே நடந்தது. அந்த அளவிற்கு அந்த நிர்வாகம் இருந்தது. இன்றைக்கு அவர்கள் குறை சொல்கிறார்கள். இன்றைக்கு ஒரு சிறப்பான நிர்வாகத்தை போக்குவரத்துத் துறை அளிக்கிறது. அதேபோல், படுக்கை வசதி கொண்ட பேருந்துகள் எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அடுத்தது, திருமண உதவித் திட்டம். (குறுக்கீடு) சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் குழந்தை விழவில்லை என்று சொல்கிறார். என்னவென்று கேட்போம். சரி, சொல்லுங்கள்.

முற்பகல் 11-45

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது கடந்த தி.மு.க.

ஆட்சியில் பேருந்துகள் சரியாகப் பராமரிக்கப்படாததன் விளைவாக ஒரு குழந்தை கீழே விழுந்து இறந்தது உண்மை. ஆனால், அந்தச் சம்பவத்திற்காக மிகுந்த துயரப்பட்டு அம்மா அவர்கள் உடனடியாக (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, சிரிக்க வேண்டாம், இதிலே சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை. அதற்குப் பின்புதான் (குறுக்கீடுகள்) இல்லை, கேளுங்கள், கேளுங்கள், உட்காருங்கள். அதற்குப் பின்பு, இந்த நிலைக்குக் காரணம் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மோசமான ஆட்சிதான். அதுதான் காரணம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். ஏற்கெனவே, அவர் சொல்கிறார் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, குழந்தை விழுந்ததை அவர் ஒத்துக்கொண்டார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** முன்னாள் அமைச்சர் கொஞ்சம் இருங்கள். -- ஒத்துக்கொண்டார்-- மாண்புமிகு முன்னாள் அமைச்சர் சொல்கிறார், ஏற்கெனவே 1996-2001 ஆம் ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பேருந்துகள் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தினால்தான் ஓட்டை ஏற்பட்டு அதிலே குழந்தை விழுந்ததாகச் சொன்னார்கள். 1996-லிருந்து 2001 வரை கலைஞர் முதலமைச்சராக 4-வது முறையாக இருந்தபோது 10,600 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள், 2001-லிருந்து 2006 வரை ஆட்சியிலிருந்தபோது வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 5,300. எந்த ஆட்சியில் நன்றாகப் பராமரிக்கப்பட்டது என்பது பேருந்துகள் வாங்கியதிலிருந்தே தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிலே Body கட்டியது எவ்வளவு? (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் Body யார் அதிகம் கட்டியது என்கிறார். (குறுக்கீடுகள்)



**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** சரி இருக்கட்டும், இருக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**திரு. இரா. விசுவநாதன்:** துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி, correct, correct. (குறுக்கீடு) இல்லை, correct-ஆகச் சொல்லிவிட்டீர்கள். . .

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.கே. வேதரத்தினம், சீக்கிரம் உரையை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு மகிழ்ச்சி. என்னவென்றால், எங்கே முன்னாள் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிடப் போகிறாரோ என்று நினைத்தேன். ஒத்துக்கொண்டதற்கு நன்றி. அடுத்தது, எரிவாயு . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நேரம் இல்லை. இன்னும் 10 பேர் பேச வேண்டும். நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. வேதரத்தினம், நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** அதாவது என்னுடைய தொகுதியிலுள்ள இரண்டேயிரண்டு கோரிக்கைகளை மாத்திரம் சொல்கிறேன். வேதாரண்யம் போன்ற பகுதிகளெல்லாம் மானாவரி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. உரையை முடியுங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடு) நேரம் இல்லை, முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, திரு. விசுவநாதன், உங்களுடைய தலைவர் பேசும்போது பேசச் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** என்னுடைய வேதாரண்யம் தொகுதியின் இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி

முடித்துவிடுகிறேன். தலைஞாயிறு பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும்.

அதேபோல, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையிலே நாகப்பட்டினத்திலே ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனது வேதாரண்யம் பகுதியிலே எந்தவிதக் கல்லூரியும் கிடையாது. இரண்டேயிரண்டு Tutorial Colleges-தான் இருக்கின்றன. அதனாலே இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பொறியியல் கல்லூரியை வேதாரண்யத்திலே அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறுகள் தூர் வாரப்படுகின்ற நிலையிலே மேலேயிருந்து வருகின்ற தண்ணீர் விரைந்து வந்து எங்களுடைய டெல்டா மாவட்டத்தினுடைய கடைமடைப் பகுதியிலே தேங்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள். நேரம் இல்லை. திரு. சு. சிவராஜ், வேகமாகப் பேசுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க் கொளி*

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசற்கெல்லாம் விளக்கு போன்றவர்கள் என்பது வள்ளுவருடைய வாக்கு. அதைப்போல, இந்தியத் துணைக் கண்டத்தில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக, மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலே முன்னோடியாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலிலே நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்கள் இன்றைக்கு ஒரு உன்னதமான நிதிநிலை அறிக்கையைத் தமிழக மக்களுக்கு அளித்திருக்கின்றார்கள். அதை நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



(முற்பகல் 11-50

அதேபோல, இந்த நிதிநிலை அறிக்கை என்பது குறிப்பாக வேளாண் துறைக்கும், அதைப்போல, உள்ளாட்சித் துறைக்கும், கிராமங்களை மையமாக வைத்து கிராமப்புறங்களிலே வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு பயிர்க் கடன் வழங்குவதற்காக 1,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான வட்டி 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகவும், அதற்குப் பின்னால் 5 சதவிகிதமாகவும், இன்றைக்கு அதுவே 4 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டிருக்கின்றது. இது விவசாயத்திற்கு நல்ல ஒரு முயற்சியாகும்.

அதைப்போல, விவசாயத்தினுடைய ஓர் அங்கமாக இருக்கக்கூடிய பாசனத் துறையையும் சேர்த்து வேளாண் துறைக்கு ஏறத்தாழ ரூ.4,792 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டப்படக்கூடிய ஒன்று. அதைப்போல, உள்ளாட்சித் துறைக்கு நேரடியாக 5,775 கோடி ரூபாயும், மற்ற ஒதுக்கீடுகளையெல்லாம் சேர்த்து இன்றைக்கு ஏறத்தாழ 10,000 கோடி ரூபாய் உள்ளாட்சித் துறைமூலம் கிராமப் பகுதிகளிலே பணிகளை நிறைவேற்ற ஒதுக்கியிருப்பது பாராட்டப்படக்கூடிய ஒன்று.

அதைப்போல, நெசவாளர்கள், நரிக்குறவர்கள், அரவாணிகள் போன்றவர்களுக்கு பல்வேறு நல வாரியங்களைத் துவக்கியிருப்பதும் பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும். அன்னை சோனியா காந்தி அவர்களுடைய கனவுத் திட்டமான வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் இன்றைக்கு தமிழகத்திலேயுள்ள 9 மாவட்டங்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 9 மாவட்டங்களிலும் இந்த ஆண்டு ஏறத்தாழ 600 கோடி ரூபாய்க்கு மேல் பணிகள் நடைபெற்று இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்த 2,000 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டிலும் செலவு செய்யப்படும் என்ற உறுதியை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவும் பாராட்டப்படக்கூடிய ஒன்று.

அதைப்போல, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இந்தத் திட்டத்தின்மூலம் மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஏறத்தாழ 4500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தக் கிராமங்களிலே நூலகம், குளங்கள், மயானக் கொட்டகைகள், கான்கிரீட் சாலைகள் போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு, அந்தக் கிராமங்கள்

தன்னிறைவு அடைந்து இருப்பதை நாம் காண்கின்றோம். இதிலே இன்னொன்றையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று என்னுடைய ஒரு சிறிய ஆலோசனையைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒவ்வொரு ஊராட்சியிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழே ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சமுதாய நலக் கூடம் கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், முந்தைய காலங்களில் திருமணம் மற்றும் விசேஷங்கள் எல்லாம் வீடுகளிலேயே நடைபெற்றன. ஆனால், அந்த நிலைமை மாறி, விசேஷங்களானாலும், திருமணங்களானாலும், திருமண மண்டபங்களில் நடத்த வேண்டும் என்ற ஒரு நடைமுறை இன்றைக்கு கிராமப் பகுதிகளிலேகூட வந்திருக்கிறது. நாம் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், சிறிய கிராமமாக இருந்தாலும்கூட அங்கு ஒரு கடையில் 200 Chairs, சாமியானா துணி, Dining Table, Chair இவற்றையெல்லாம் வாடகைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவற்றைக் கிராம மக்கள் பயன்படுத்துகிறார்கள். ஆக, அதுபோன்ற விசேஷங்களை ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் நடத்துவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் அவசியமாக ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட வேண்டும் என்ற என்னுடைய ஆலோசனையை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே இவ்வளவு நல்ல பல பணிகளுக்காக, கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பல்வேறு நிதிகளை நாம் ஒதுக்கி இருந்தாலும்கூட, இதனுடைய தாக்கம் பொதுமக்களை அடைவதற்கு முன்பாக, ஒரு பக்கம் அத்தியாவசிய பொருள்களுடைய விலைவாசி உயர்வு இதனுடைய தாக்கத்தைக் குறைக்கின்றது. விலைவாசி உயர்வைப் பற்றியும், அதைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதைப் பற்றி ஆராய இன்றைக்குக்கூட மத்திய அரசாங்கம் அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறது. ஆகவே, அதை நம்முடைய மாநில அரசாங்கமும் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு விலைவாசி என்பது உயர்ந்துகொண்டே இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். தேவைப்பட்டால் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு துறையைக்கூட ஏற்படுத்தலாம். அதைப்போல, கட்டுமானப் பொருட்களுடைய விலை இன்றைக்கு வெகுவாக உயர்ந்துகொண்டிருக்கிறது. சிமெண்ட், மணல், ஸ்டீல் விலை எல்லாம் உயர்ந்திருக்கின்றன. இன்றைக்கு இரும்பு விலை ஒரு டன் 52,000 ரூபாயிலிருந்து 53,000 ரூபாயாக உயர்ந்துவிட்டது. எங்கள்



மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளுக்குக் கடந்த மாதம் இரண்டு முறை டெண்டர் வைத்தோம். ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு முறையும் டெண்டரில் பங்கேற்க ஒரு ஒப்பந்தக்காரர்கூட வரவில்லை. விலைவாசி உயர்வின் காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பணியைச் செய்ய மறுக்கிறார்கள். அதனாலே இன்றைக்கு ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆகவே, இதை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டும்.

முற்பகல் 11-55

அதைப்போல இன்றைக்கு உள்ளாட்சி மன்றங்களான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளிலே சொத்து வரிப் பிரச்சினை என்பது தமிழகத்திலே மிக அதிக அளவிலே மக்களைப் பாதிக்கக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. அதிலே வீடாகப் பார்த்தால் 25 சதவீதம், தொழிற்சாலைகளாக இருந்தால் 100 சதவீதம், வணிக நிறுவனங்களுக்கான கட்டடங்களாக இருந்தால் 150 சதவீதம் வரையில் உயர்த்திக்கொள்ளலாம் என்று அரசு ஆணை வெளியிடப்பட்டு, பல்வேறு நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சிகளிலே அதற்கான தீர்மானங்கள் எல்லாம் போடப்பட்டு, சொத்து வரி உயர்த்தப்பட்டு இருக்கின்றது. எங்களுடைய திருக்கோவிலூர் பேரூராட்சியிலேகூட இதுசம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கின்றது. இன்றைக்கு வேலூரிலேகூட இதைக் கண்டித்து காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது. 1997-98-லே ஒரு தடவை நாம் சொத்து வரியை உயர்த்தி இருக்கின்றோம். அந்த வரியையே இன்றைக்குக் கட்ட முடியாமல் 50, 60 சதவீதம் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்தச் சொத்து வரியை உயர்த்தி வெளியிடப்பட்ட ஆணையை இந்த அரசு திரும்பப்பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, நேற்றைக்குக்கூட நம்முடைய முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சென்னையிலே உஸ்மான் சாலையையும் மகாலிங்கபுரத்தையும் இணைக்கக்கூடிய மேம்பாலத்தைத் திறந்து இருக்கின்றார்கள், வரவேற்கக்கூடிய ஒன்று. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் peak hours என்று சொல்லக்கூடிய நேரங்களிலே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் போக வேண்டும் என்றாலும்கூட முக்கால் மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் ஆகிறது. இன்றைக்கு அவ்வளவு வாகன

நெரிசல். வாகனங்கள் மிக அதிக அளவிலே பெருகிவிட்டன. இன்னும் கொஞ்சம் நாட்களில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு கார் வரப்போகிறது. அது வந்தால் எந்த அளவுக்குப் போகும் என்று தெரியவில்லை. ஆகவே, நாம் அதைக் கருத்தில்கொண்டு எவ்வளவு மேம்பாலங்களை சென்னை நகரத்திலே கட்ட முடியுமோ அவ்வளவு கட்ட வேண்டும். சென்னை நகரம் மட்டுமல்ல, சென்னை போன்ற எல்லா பெருநகரங்களிலும் இதுபோன்ற போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. ஆகவே, நாம் இப்பொழுதே அதைக் கணக்கிட்டு தேவைப்படக்கூடிய இடங்களிலே மேம்பாலங்களைக் கட்டுவதற்கு முழு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். Domestic purpose-க்கு மின்சாரம் எந்தக் கிராமப் பகுதியாக இருந்தாலும், நகரப் பகுதியாக இருந்தாலும் ஓரளவுக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்கின்றது. அரசாங்கம் விவசாயத்திற்கு ஆறு மணி நேரம் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று இன்றைக்கு உத்தரவிட்டிருக்கின்றது. ஆனால், எங்கள் பகுதியிலே இரண்டு துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. திருக்கோவிலூரில் ஒன்று, அரியலூரில் ஒன்று. அதிலே, அரியலூர் துணை மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் 10 MVA power transformer தான் இருக்கிறது. அந்தப் பகுதிகளில் நிறைய கிணற்றுப் பாசனம்தான். Bore well கிணறுதான். ஆனால், கோடைக்காலங்களிலே அங்கே சீரான மின்சாரம் கிடைப்பதில்லை. எப்போது மின்சாரம் வருகிறது, எப்போது போகிறது என்று சொல்ல முடியவில்லை. இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் கிடைத்தால் பெரிய விஷயம். ஆகவே, உடனடியாக அரியலூர் பகுதியிலே அந்த 16 MVA power transformer-ஐ நிறுவுவதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எங்களுடைய விழுப்புரம் மாவட்டம், பெரிய மாவட்டமாகும். அந்த மாவட்டம் 12 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டது. நாம் சிறிய மாவட்டங்களை எல்லாம் பிரித்துக்கொண்டிருக்கின்றோம். 12 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை ஆகிய வருவாய் வட்டங்களை இணைத்து புதிய மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோல, கடந்த மாதம் 9 ஆம் தேதி அன்று உளுந்தூர்பேட்டை வட்டம், எறையூரில் உள்ள கிருத்துவ சமுதாயத்திற்குள்ளே உள்ள இரண்டு பிரிவினர், இந்துக்களிலிருந்து மதம் மாறிய தலித் கிருத்துவர்களும், அதேமாதிரி வன்னிய கிருத்துவர்களும் உள்ளனர். இந்த இரண்டு பிரிவினர்களுக்கிடையே ரொம்ப நாட்களாக ஒரு கருத்து வேறுபாடு இருந்தது. ஒன்று, பொதுப் பாதையிலே தேவாலயத்திற்கு முன்பு இருக்கக்கூடிய சாலையிலே அவர்களுடைய மத ஊர்வலங்களோ, சவ ஊர்வலங்களோ நடத்தப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டு இருந்தது. அதைப்போல, தலித் கிருத்துவர்கள் தனியாக ஒரு ஆலயம் கட்டிக்கொண்டு அவர்களுக்குத் தனியாக ஒரு பங்கு வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அதை அந்தப் பேராயர் அனுமதிக்கவில்லை. இந்தப் பிரச்சினை ரொம்ப நாட்களாக அவர்களுக்குள் புகைந்து கொண்டு இருந்தது. 8 ஆம் தேதி அன்றைக்கு ஆலயத்தைப் பூட்டுவோம் என்று எறையூரில் போஸ்டர் எல்லாம் அடித்து ஒட்டி ஒரு சில அமைப்பைச் சார்ந்தவர்கள் உண்ணாவிரதம் நடத்தி அந்த உண்ணாவிரதத்திலே எதிர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களை மிகவும் தரக் குறைவாகவும் ஆத்திரமூட்டக்கூடிய வகையிலேயும் பேசினார்கள். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை எல்லோரும் prayer-க்கு வருகிறார்கள், வரும்போது இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, நேற்று நம்மை தரக் குறைவாகத் திட்டியவர்களை ஏதாவது செய்ய வேண்டும் என்று, அந்தக் காலனிக்குள் சென்று அவர்களைத் தாக்கியதால் கிட்டத்தட்ட 70-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. இந்தக் கலவரத்திலே போலீஸ் வந்து, முதலில் எச்சரிக்கை செய்தார்கள். அதற்குப் பிறகு கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கலவரக்காரர்கள் என்ன செய்தார்கள் என்றால், போலீஸ்காரர்கள் மேலேயே கல் வீசினார்கள். அதிலே S.P. காயமடைந்தார். ஒரு Inspector-க்கு காயம் ஏற்படுகிறது; ஒரு D.S.P. காயப்படுகிறார். 4, 5 P.C.-கள் காயப்படுகிறார்கள். வேறு வழியில்லாமல் துப்பாக்கிச்சூடு நடைபெற்று இரண்டு பேர் பலியாகிறார்கள். இரண்டு பேர் பலியாகியும் இன்றைய வரையிலும் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. நேற்று அங்கு ஒரு சவ ஊர்வலம் நடந்தபோதும் பிரச்சினை ஏற்பட்டது என்று இன்று காலையில்கூட சொன்னார்கள். ஆக, இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக உள்ள பிரச்சினை. இதை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அங்கே இறந்தவர்களுக்கு 2 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி போதாது. 5 இலட்சமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பாதிக்கப்பட்ட,

வீடு இடிந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவி கிடைக்கச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோல, எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறைமூலம் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையின்மூலம் ஒரு சர்க்கரை ஆலையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் 3 தனியார் ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக, எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு விழுப்புரம் மாவட்டத்திலே 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் செயல்படுகின்றன. நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை, கரும்பு சாகுபடி குறித்த ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும், அதைச் சார்ந்த பண்ணையையும் விழுப்புரம் மாவட்டத்திலே தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உயர் நீதிமன்றம் தந்த ஓர் உத்தரவின் காரணமாக நீர்நிலைப் பகுதிகளிலே வீடு கட்டிக் கொண்டிருந்தவர்கள், விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அதிலே, நீர்நிலைப் பகுதிகளிலே விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு அதிகம் பாதிப்பு இல்லை. ஆனால், அங்கே 25, 30 ஆண்டுகளுக்கு முன்பாக B-Memo எல்லாம் செலுத்திவிட்டு, வீடு கட்டிக்கொண்டிருப்பவர்கள்; பக்கா வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள்; கான்கிரீட் வீடுகளைக் கட்டியிருக்கிறவர்கள்; ரூ.2 இலட்சம், ரூ.3 இலட்சம் செலவு செய்து வீடு கட்டியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்கின்ற வகையிலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** அவர்கள் குடியிருக்கும் அந்த இடங்களுக்கு பட்டா கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எனது தொகுதியிலே பேருந்து வசதி கோரி நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்திலே கடந்த 1½ ஆண்டுகளுக்கு



முன்பு. 15 வழித்தடங்களிலே, அதிலே 2, 3 புதிய தடங்கள், மீதியெல்லாம் தட நீட்டிப்பு, தட மாற்றம் கோரி மனு கொடுத்திருந்தேன். அதிலே 2 காரியங்கள்தான் நடந்திருக்கின்றன; மீதி நடக்கவில்லை. ஆகவே, நான் அதை எழுதிக்கொடுக்கின்றேன்; அவற்றைச் செய்து தர ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சங்கராபுரத்திலே உரிமையியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூரிலே ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தியாகதுர்க்கம் - மணலூர்பேட்டையை இணைக்கின்ற தஞ்சாபுரம் பாதையிலே இப்பொழுது ஒரு தரைப் பாலம் இருக்கின்றது. வெள்ளக் காலங்களிலே வெள்ளம் வந்துவிட்டால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நாம் time-ஐ adjust செய்ய வேண்டும்.

**திரு. சு. சிவராஜ்:** அந்தத் தரைப்பாலத்திற்குப் பதிலாக ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அமைச்சரிடத்திலே ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதே சாலையிலே கீழத்தேனூர் என்கிற ஊருக்கு அருகிலே கெடிலம் ஆறு உற்பத்தி ஆகி வருகிறது. அந்த இடத்திலே ஒரு சிறிய பாலம்தான் கட்ட வேண்டும். 45 இலட்ச ரூபாயிலே மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பாலத்தையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருக்கோவிலூர் ஒன்றியம், ஜி.அரியூரிலே ஒரு புதிய துணை மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருக்கோவிலூர் நகரத்தில் இருக்கக்கூடிய பழைய பேருந்து நிலையத்தைப் புதுப்பித்துப் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு இடம் தானமாகத் தரப்பட்டு 20 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அங்கே பேருந்து நிலையம் வரவில்லை. ஆகவே, அந்தப் புதிய பேருந்து நிலையத்தையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. கடந்த ஆண்டு நான் சுற்றுலா மற்றும் செய்தி மானியக் கோரிக்கையிலே பேசும்போது, திருக்கோவிலூரை ஆன்மீக நகரமாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதனை ஏற்று, புராதான இடமாக அறிவித்து, அதற்காக 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்குவதாக அரசாணை வெளியிட்டிருக்கின்றார்கள். அதற்கான பணிகள் தேர்வு செய்யப்பட்டு, முன்மொழிவுகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால், இன்னும் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, அதை உடனடியாகத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே தோரண வாயில்கள், கபிலர் கோட்டத்திற்குக் கட்டடம் போன்ற பணிகளுக்கு உடனடியாகத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அதேபோல, திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவப் பணியிடங்கள் ஒதுக்கித் தர வேண்டும். தற்போது அனுமதிக்கப்பட்ட மருத்துவப் பணியிடங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேரம் ஆகிவிட்டது.

**திரு. சு. சிவராஜ்:** அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 8. ஆனால் தற்போது பணியில் 4 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். உடனடியாக மற்றவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள திருப்பாலப்பந்தல், எடுத்தனூர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடம்பூர், தகடி ஆகிய ஊர்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நீங்கள் கம்ப்யூட்டர், பிரிண்டர் எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். அதை ஆப்பரேட் பண்ணுவதற்கு ஆள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இராஜஸ்தான், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே இதற்கென தனியாக உதவியாளர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, உள்ளாட்சித் துறையின் சார்பாக, அரசு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு உதவியாளரை நியமனம் செய்து தர வேண்டுமென்று கேட்டு (குறுக்கீடு) கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஆப்பரேட்டருடன் கோ ஆப்பரேட் பண்ண வேண்டும். இல்லையென்றால் கஷ்டம் வந்துவிடும்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். இருபதே இருபது நிமிடங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய காலமாக பண்ருட்டி தொகுதியில் அரசின் சார்பாக பொறியியல் கல்லூரியோ, அரசு கலைக் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ இல்லாமல் ஏங்கித் தவித்த என் தொகுதி மக்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், இதே அவையில் பல முறை வேண்டுகோள் வைத்ததன் அடிப்படையில், கடலூரில் நடந்த அரசு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மேடையிலேயே, என்னுடைய தொகுதிக்கு ஒரு பொறியியல் கல்லூரி வேண்டுமென்று முதன் முதலாக நான் வேண்டுகோள் வைத்தவுடனேயே, அதே மேடையிலேயே அறிவிக்கச் செய்ததோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களுடைய அறிவிப்பிலேயும் பண்ருட்டி தொகுதியில் ஒரு பொறியியல் கல்லூரி அமைக்கப்படும் என்கிற நல்ல அறிவிப்பைத் தந்த, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது, இத்தனை ஆண்டு கால தமிழக அரசினுடைய வரலாற்றில் ஆறு கோடி மக்களுடைய பிரச்சினைகளை உள்வாங்கிக்கொள்ளாமல் ஒரு 60 குடும்பத்தாருடைய கட்டுப்பாட்டிலிருந்த சிதம்பரம் நடராஜர் கோயிலில் 6 கோடி தமிழர்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற சிவனடியார் ஆறுமுகச்சாமி அவர்கள் தமிழிலே தேவாரம், திருவாசகம் பாடுவதற்கானத் தடையை உடைத்தெறிய வேண்டும், அங்கு சிவனடியார் ஆறுமுகச்சாமி அவர்கள் தமிழில் தேவாரம், திருவாசகம் பாடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைத்தபோது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், நிச்சயமாக பாடுவதற்கான ஏற்பாட்டை நான் செய்வேன் என்று உறுதியளித்தார்கள். அந்த

உறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் சிவனடியார் ஆறுமுகச்சாமி அவர்கள் அங்கு பாடுவதற்கான அரசாணை வெளியிட்டு, அவர் பாடுவதற்காக காவல் துறை பாதுகாப்போடு அங்கு அவர் சென்று பாட முற்படுகின்றபோது, சிலர், தீட்சிதர்கள் என்ற பெயரிலே அங்கே அவரை வழிமறித்துத் தாக்கிய கொடூரம் நடந்தபோது, அதையும் மீறி, மீண்டும் அவர்களை எச்சரித்து அங்கு தேவாரம், திருவாசகம் பாடுவதற்கு ஆணையிட்ட தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர்களுக்கும் நான் இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோன்று, இன்னும் பல்வேறு வேண்டுகோள்களை இந்த அவையில் நான் வைக்க இருக்கிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே இருப்பார், அவரிடத்திலே, அவருடைய காதுகளுக்கு என்னுடைய இந்தச் செய்திகளைக் கொண்டு சென்று ஒரு தீர்வு எட்டலாம் என்று இருந்தேன். ஆனால் அவருக்குச் செய்தி சொல்லக்கூடிய மூத்த அமைச்சர் பெருமக்கள் இருக்கிற காணத்தினாலே சொல்கிறேன். நேற்றையதினம் 12, ஒரு மணியளவில் என்னுடைய தொகுதியில் திடீரென்று இடியுடன்கூடிய மழை பெய்து, இடி தாக்கி, ராணி என்கிற ஒரு பெண் அதே இடத்தில் உயிரிழந்திருக்கிறார். அவருக்கு 11 வயதில் ஒரு குழந்தை இருக்கிறது. 16 வயதில் ஒரு பெண்ணும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்கிற அடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், அரசும் நிவாரண நிதியாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைத்தான் நான் காலையிலே பேசுகிறபோது இடிதாக்கி இறந்ததற்கான ஆதாரத்தை, நகராட்சியிலே வழங்கப்பட்ட, நேற்றையதினம் நானே சென்று வாங்கிய, இறப்புச் சான்றிதழைக் கொண்டுவந்து இந்த அவையிலே காட்டியிருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஒரு வேண்டுகோள். நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் சொல்கின்றபோது இந்தியாவினுடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் இதற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்று பல கட்டங்களிலே எடுத்துச் சொல்கின்ற அதேவேளையில், இந்திய நாட்டிற்கே முன்னுதாரணமாக இத்தனை ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றில்



அதனுடைய வளாகத்திற்குள் எந்த நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் புகை பிடித்துக்கொண்டிருந்தார்களோ, அவர்கள் அங்கு புகை பிடிக்கக் கூடாது என்று ஒரு பச்சைத் தமிழன் எங்கள் சின்ன ஐயா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று இன்றைக்கு நாடாளுமன்ற வளாகத்திற்குள் யாரும் புகை பிடிக்காத ஒரு நிலையை உருவாக்கியுள்ளார்கள். அதே நிலையை நம்முடைய சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயும் நம்முடைய சட்டமன்ற விடுதிப் பகுதிகளிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களோ, சமூக விரோதிகளோ யாரும் இந்த இடங்களை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்கிற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும். குறிப்பாக, இங்கேயிருக்கிற நாம் தேநீர் அருந்துகிற இடத்தில், 'பெண் பத்திரிகையாளர்களும் அல்லது பெண் சட்டப் பேரவை உறுப்பினர்களும் சென்று, இடைவேளை நேரங்களிலே அவர்கள் தேநீர் அருந்துவதற்குக்கூட வாய்ப்பில்லாமல், நமது சக சட்டமன்ற உறுப்பினர்களே சிலபேர் அங்கே புகை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்; நாங்கள் அங்கே செல்ல முடியவில்லை' என்று நம்முடைய பெண் பத்திரிகையாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்கின்ற ஒரு நிலையிருக்கிறது. அதற்கு தமிழக அரசும், நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் தடை விதிப்பதற்கு முன்வர வேண்டும். இதற்கு முன்னுதாரணமாக வருங்காலத் தமிழகத்தின் எங்கள் வரலாற்று நாயகன், மருத்துவர் சின்னய்யா அவர்கள் இந்திய நாட்டினுடைய நாடாளுமன்ற வளாகத்திற்குள்ளேயே அதைச் செய்திருக்கிறார். அதைப்போல நீங்களும் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழி; தமிழினத் தலைவருடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த இரண்டு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள, இங்குள்ள ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று அனைத்துக் கூட்டணிக் கட்சி உறுப்பினர்களும் கையொப்பமிடுகின்ற பதிவேட்டை நாம் எடுத்துப் பார்த்தோம் என்று சொன்னால், அதிலே பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் தலைப்பெழுத்தைப் போடுகிறார்கள்; ஆங்கிலத்தில் கையொப்பமிடுகிறார்கள். அந்த நிலையை மாற்றி, தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழி நடக்கின்ற இந்த அவையில், இந்த நாட்டிற்கு வழிகாட்டுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற இடத்தில், தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்திற்குள், தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழில் கையொப்பமிட வேண்டும் என்கிற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும். அரசினுடைய

செயலாளர்கள், அரசு அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பும் சுற்றறிக்கைகள் என்று பல்வேறு நிலைகளில், அரசினுடைய திட்டங்களையெல்லாம் வெளி உலகத்திற்குச் சொல்கின்றபோது, பெரும்பான்மையானவை தமிழிலே இன்றைக்குச் செயல்படுத்தப் படாமல், ஆங்கிலத்திலேயே சுற்றறிக்கைகள் சென்று கொண்டிருக்கின்றன; கோப்புகளினிடையே ஆங்கிலத்தில் குறிப்புகள் எழுதி வைக்கப்படுகின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்குக் கிழக்குக் கடற்கரைச் சாலையில் வாகனங்கள் செல்வதற்கு 80 ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஆனால், அந்த Toll Gate -ல் உள்ள 3, 4 வழிகளைத் திறந்து அனுப்புவதற்குப் பதிலாக, ஒன்றைத் திறந்து வைத்துவிட்டு, மூன்று வழிகளை மூடி வைத்திருக்கின்றார்கள். எதற்காக அரசு Toll Gate என்று வைத்துக்கொண்டு இருக்கிறது? பொது மக்கள் பணம் தருகின்றார்கள். அந்த நோக்கம் அங்கே நிறைவேற்றப்படவில்லை. அங்கு சில தவறுகள் அடிக்கடி நடந்து கொண்டிருக்கின்றன. நான் இந்த அவையினுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறேன்; அதைச் சரிசெய்ய வேண்டும். அந்தத் தொகை 80 ரூபாய் என்பது அதிகம். ஒரு பேருந்திலே நான் கடலூருக்குச் செல்வதைக்காட்டிலும், அதிகமான தொகை வசூலிக்கப்படுகிறது. அதைக் குறைப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, கிழக்குக் கடற்கரைச் சாலைக்குச் சிந்தனை சிற்பி நம்முடைய மறைந்த சிங்காரவேலர் அவர்களுடைய பெயரைச் சூட்டுவதற்கு இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், கடந்த முறை மழை வெள்ளம் வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகை தந்தார்கள். நானும் ஓடோடிச் சென்று, முதலமைச்சரிடத்திலேயே சொன்னேன். ''அய்யா, என்னுடைய தொகுதியிலே முந்திரிப் பயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது; மழை வெள்ளத்திலே நெல் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது; உளுந்து பாதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் நிவாரணம் தாருங்கள்'' என்று வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வண்டி வாகனம் எங்கேயெல்லாம் சென்றதோ, அங்கே convoy-ஐ எல்லாம் கொஞ்சம் ஒதுக்கி ஒதுக்கி வைத்துவிட்டு, மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் ஓடிச் சென்று சொன்னேன்; 'அய்யா, என்னுடைய தொகுதியிலேயே 45 ஆயிரம் ஏக்கர் முந்திரிப் பயிர் இருக்கிறது. அந்த முந்திரிப் பயிரில், பூ பூக்கும் பருவங்களிலே மழைத்துளிகள் பட்டால், அது ஒருமுறை கருகிவிட்டால், மீண்டும் காய்ப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படாது. ஆதலால், ஒருமுறை உற்பத்தியாகின்ற முந்திரியை, அந்த முந்திரி விவசாயிகள், ஒரு ஏக்கரில் முந்திரிக்கொட்டை பொறுக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபாய் அவர் செலவிட வேண்டும். நான்கு முறை அவர்கள் மருந்து அடிக்க வேண்டும்; ஆறு முறை மருந்து அடிக்க வேண்டும்; களை கொத்த வேண்டும்; உரம் வைக்க வேண்டும், யூரியா வைக்க வேண்டும்.



இப்படியெல்லாம் பாதுகாத்து, முந்திரிப் பயிர் பிஞ்சு விட்டுக் கொண்டிருந்த பருவத்தில் இருக்கின்றபோது, இயற்கையினுடைய இடர்பாடு காரணமாக மழை ஏற்பட்டு, அந்தப் பூக்கள் எல்லாம் கருகி, இன்றைக்கு அவர்களது வாழ்க்கை கருகிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது அதிகம் என்று கருதுவார்கள். ரூ.25 ஆயிரம் வழங்காவிட்டாலும், ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாயாவது முந்திரி விவசாயிகளுக்கும் தரப்படும் என்கிற அறிவிப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி மட்டுமல்ல; பெரம்பலூர், திருச்சி, கன்னியாகுமரி, விழுப்புரம், செங்கல்பட்டு, கடலூர் ஆகிய 6 மாவட்டங்களிலுள்ள முந்திரி விவசாயிகள் மிகப் பெரிய வேதனையிலே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், இப்போது இரண்டு நாட்கள் விடுப்பிலே சென்றபோது, ''இந்த அறிவிப்பிலே முந்திரி இடம் பெறவில்லை; முந்திரி விவசாயிகளை மறந்துவிட்டதா இந்த அரசு'' என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் நம்முடைய அண்ணன் ஆற்காட்டார் அவர்களிடம் சொல்கின்றபோது, தோட்டக் கலைத் துறையில் முந்திரி விவசாயிகளுக்கும் நாங்கள் அறிவித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். தளபதி அவர்கள் சொல்கின்றபோதும், ''முந்திரிக்கும் வரும் வேல்முருகன்'' என்று சொன்னார்கள். ஆனால், அதை ஒலிபெருக்கியில் சொல்லாத காரணத்தினாலேயே, அறிவிப்பில் இடம் பெறாத காரணத்தினாலே, முந்திரி விவசாயிகள் மத்தியிலேயே ஒரு குழப்பமான சூழ்நிலை இருக்கிறது. இதுவரையில், V.A.O.-வில் தொடங்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் வரையிலும், எந்தவொரு துறை அதிகாரியும் முந்திரி விவசாயிகளுக்கான பாதிப்பு குறித்த

புள்ளிவிவரங்களை இந்த நிமிடம் வரையிலும், என் தொகுதியில் மட்டுமல்ல; மாநிலம் முழுவதும் எடுத்ததாக வரலாறுகள் இல்லை. அதை ஏற்படுத்தித் தரவேண்டும்; பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் பேசுகின்றபோது, நேற்றைக்கு ஒரு விவாதம் சிரிப்பலையோடு வந்தபோது, "முந்திரி சாப்பிட்டால், அது உயிருக்கு ஆபத்து; யாரும் முந்திரி சாப்பிடாதீர்கள்" என்று சொல்லி, ஒரு நகைச்சுவை உணர்வோடு அந்தச் செய்தியைப் பதிவு செய்தார்கள். அந்தச் செய்தி இன்றைக்கு தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த முந்திரி விவசாயிகளிடத்திலே . . . (குறுக்கீடு)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி சாப்பிட்டாலே உயிருக்கு ஆபத்து என்றில்லை. முந்திரிப் பருப்பை யாரும் தினந்தோறும் சாப்பாட்டுக்காகச் சாப்பிடுவதில்லை. ஏதோ, 3, 4 முந்திரிப் பருப்பு சாப்பிட்டால் பரவாயில்லை. அதிகமாக முந்திரிப் பருப்பு சாப்பிட்டால் கொலஸ்ட்டிரால் வரும். அதனாலே, கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, உறுப்பினர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, ஒரு ஆசைக்காக 3 அல்லது 4 முந்திரி சாப்பிட்டால் எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடாது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. நேற்றைய பதில், பத்திரிகைகளில் வேறுவிதமாக வந்திருந்த காரணத்தினாலே அந்தப் பகுதி மக்களிடத்திலே ஒரு பதட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக தங்களுடைய விளக்கத்தை எதிர்பார்த்தேன். நல்ல விளக்கத்திற்கு நன்றி.



அதேபோல், இன்றைக்கு முந்திரிப் பழத்திலிருந்து fenny தயாரிக்க வேண்டும். அதைத் தயாரித்து கோவாவுக்கு ஏற்றுமதி பண்ணி, வேலைவாய்ப்பு தருகிறார்கள் என்று சொன்னேன். அப்போது, நம்முடைய சிறு தொழில் அமைச்சர், fenny தயாரிக்க வேண்டுமென்றால் உங்களுடைய மதுபானக் கொள்கையை நீங்கள் மாற்றிக்கொள்கிறீர்களா என்று கேட்டார். மதுபானக் கொள்கையில் பாட்டாளி மக்கள் கட்சி பூரணமாக நம்பிக்கை வைத்திருக்கிறது. அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். பல முறை முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் அய்யா கடிதம் எழுதியிருக்கிறார். ஏன், இந்திய நாட்டினுடைய அமைச்சராக இருக்கிற எங்களுடைய சின்னய்யா அவர்கள் அதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்றுகூட நீங்கள் சொன்னீர்கள். அதற்கான முயற்சியை அவரைச் சந்திக்க வருகின்ற அனைத்து மாநிலத்தினுடைய முதலமைச்சர்களிடத்திலும், அமைச்சர் பெருமக்களிடத்திலும் அதற்கான கருத்தை வலியுறுத்தி வருகிறார். உலகிலேயே புகையிலை கட்டுப்பாட்டை இந்தியாவில் கொண்டு வந்ததற்காக இன்றைக்கு 'Luther 'L' Terry' என்ற விருதைப் பெற்ற ஒரே தமிழன் எங்கள் சின்னய்யா அவர்கள். ஆனால், அதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே அளவில்தான் அரசமைப்பு சாசனச் சட்டப் பிரிவு 47-ல் எந்த மாநிலத்திலேயும், இந்த மதுவிலக்குக் கொள்கையை மாநில அரசு முடிவு செய்தால், கொண்டு வரலாம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. எங்களுடைய வேண்டுகோள் இந்திய அரசமைப்பு சாசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற அந்தக் கருத்தைத் தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் கவனிப்பார் என்பதற்காக வேண்டுகோள் வைத்திருக்கிறோம். ஒரேயடியாகக் குறைக்காவிட்டாலும், படிப்படியாகவாவது குறைப்பதற்கு நீங்கள் முயற்சியெடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அந்த வேண்டுகோள் வைக்கப்பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்றைக்கு முந்திரியில் இருக்கிற பழங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிடுகிறார்கள். அதை நீங்கள் பயன்படுத்தி உற்பத்தி செய்து அரசுக்கு வருமானம் வரவேண்டும். எங்கள் பகுதி எந்தத் தொழிற்சாலையும் இல்லாமல் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஒரு தொழிற்சாலை வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அந்த வேண்டுகோள் வைக்கப்பட்டதே தவிர, fenny தயாரிப்பதாலே இங்கே பாட்டாளி மக்கள் கட்சி மதுக் கொள்கையைக் கொண்டுவரக் கேட்கிறது என்பது அர்த்தம் இல்லை என்கிற அந்தச் செய்தியையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு பதிலுரையிலேயே வேல்முருகனுக்கு பலாப்பழ juice-லேயிருந்து jam தயாரிக்கிற தொழிற்சாலையைக் கொண்டுவருவதற்கு ஆவன செய்யப்படும் என்கிற அறிவிப்பைச் செய்திருந்தார்கள். ஆனால், அதற்கான எந்த ஒரு *(மணியடிக்கப்பெற்றது.) (குறுக்கீடு)* இருங்கள், இருங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* குறுக்கீடுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் சொல்லட்டும். சொல்லுங்கள், திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் மதுவிலக்குக் கொள்கை குறித்து விரிவாகப் பேசுகிறார்கள். அதேநேரத்தில், அவருடைய தொகுதியிலே முந்திரிப் பழத்திலிருந்து தோல்களை எடுத்து அதிலே மது உற்பத்தி செய்யலாம், அதை வெளிநாடுகளுக்கோ, வெளிமாநிலங்களுக்கோ ஏற்றுமதி செய்யலாம் என்கிறார். அவருடைய கொள்கை எந்த நிலையிலே உறுதியாக இருக்கிறது என்பதை இந்த அவைக்கு அவர் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அய்யாவின் கொள்கை, எங்களுடைய கட்சியின் கொள்கை, தமிழ்நாட்டில் பூரண மது விலக்கு வேண்டும் என்பதுதான். அதிலே எந்த மாற்றமும் இல்லை. நாங்கள் மதுபானக் கொள்கையைச் சொல்கிறோம். ஆனால், குறைந்த சம்பளத்தில் வேலை செய்கின்ற டாஸ்மாக் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் அல்லது அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வேண்டுமென்று இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் போராடுகின்றார்கள். சம்பளத்தைக் கூட்டித்தர வேண்டுமென்று நாங்களும் போராடுகின்றோம். ஒரு தொழிலை அரசு செய்கின்றபோது அதிலே பாதிப்பு இல்லாமல் மக்களுக்கு நன்மை வரும் என்று சொன்னால் அதைச் செய்ய வேண்டும். அடியோடு நிறுத்த வேண்டுமென்று சொன்னால், அதே தொழிலாளர்களுக்கு மாற்றுப்



பணிப் பாதுகாப்புத் தரப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கை, கருத்து. அதே அடிப்படையில்தான் இந்த fenny என்பது, பழச்சாறுகளைப் பயன்படுத்தி மற்ற மாநிலங்களில் தொழிற்சாலைகளை உருவாக்குகின்றார்கள். வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றார்கள். வருமானத்தை ஈட்டுகின்றார்கள். அதே முறையை நீங்கள் நடைமுறைப்படுத்துங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்போது, எங்களுடைய கோரிக்கையான பூரண மதுவிலக்கை நீங்கள் அறிவிக்கின்றபோது இதையும் எடுத்துவிடுங்கள். வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. இன்றைக்கு நியூசிலாந்து மற்றும் உலகத்தில் இருக்கிற பல்வேறு நாடுகளில் தட்பவெப்ப நிலை மாற்றத்தின் காரணமாக மதுபானத்தைக் குடிக்கலாம் என்று அரசே சட்டம் போட்டிருக்கிறது. நியூசிலாந்தில் சட்டம் இருக்கிறது. ஆக, ஒவ்வொரு மாநிலத்தினுடைய தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு அந்தந்த மாநிலங்களிலும், உலக நாடுகளிலும் அந்தக் கொள்கை பின்பற்றப்படுகிறது. தமிழ்நாட்டிலோ, இந்தியாவிலோ மது குடிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இங்கு குளிர் இல்லை, நடுக்கம் இல்லை. இங்கு அவசியம் குடித்தால்தான் மனிதன் உயிர்வாழ முடியும் என்கிற நிலை இல்லை. அதனால், நிச்சயமாக ஏழையெளிய மக்களை வாட்டுகின்ற அந்தத் திட்டத்தை இந்த அரசு கைவிட வேண்டுமென்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிலைப்பாடு என்பதை அருமைத் தோழர் திரு. சிவபுண்ணியம் அவர்களுக்கு இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்.எல்.சி. பிரச்சினை. என்.எல்.சி.-க்கு நிலம் எடுப்புப் பிரச்சினையைப் பற்றி நான் ஏற்கெனவே இங்கே பேசினேன். என்.எல்.சி.-க்காக நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அதற்காக ஒரு தொகை பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்களை எல்லாம் அழைக்க வேண்டாம், எம்.எல்.ஏ.-வை அழைக்க வேண்டாம், எம்.பி.-ஐ அழைக்க வேண்டாம் என்று அந்த மாவட்டத்து மந்திரிக்கே தெரியாமல்கூட பேசி முடித்துவிட்டதாகச் சொன்னார்கள். பரவாயில்லை. ஆனால், இங்கு ஒரிஜினல் பத்திரத்தை எடுத்து வந்திருக்கிறேன். யார் வீட்டு உரிமையாளர்களோ, யார் வீட்டினுடைய சொந்தக்காரர்களோ, யார் நிலத்தினுடைய உரிமையாளர்களோ அவர்களுடைய அனுமதியில்லாமல், அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுடைய பெயரிலே வேறு ஒருவருக்கு அந்தப் பணத்தை பட்டுவாடா செய்துகொண்டிருக்கிற மிகப் பெரிய மோசடி அங்கு

சில தவறான அதிகாரிகளுடைய ஈடுபாட்டால் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்னுடைய வேண்டுகோளை ஏற்றுதான் முதலமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளையும் அழைத்துப் பேசி அதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களில், மற்ற இடங்களில் ஐந்து இலட்ச ரூபாய் தருவதுபோல் இல்லாமல் அங்கே ஒரு ஏக்கரில் ஐந்து கோடி ரூபாய் சம்பாதிக்கிற N.L.C. நிருவாகம், ஏன் பத்து இலட்சம் ரூபாய் தரக்கூடாது. சட்டமன்றத்தில் அவர் விடையளிக்கின்றபோது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று கூறிய உறுதிமொழியை அவர்கள் ஏன் காற்றிலே பறக்கவிட்டார்கள். மாற்றுக் குடியிருப்பு தருவது பற்றி ஏன் இந்த ஒப்பந்தத்திலே குறிப்பிடவில்லை. இவையெல்லாம் செய்யப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

*பிற்பகல் 12-20*

அதேமாதிரி ஒப்பந்தத் தொழிலாளர்கள் கடந்த நான்கு நாட்களாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மின் உற்பத்தி பாதிப்பு ஏற்படும். சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கு நம்முடைய அரசு காவல் துறையை அனுப்ப வேண்டும். பிரச்சினைகளைப் பேசுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட நிர்வாகத்தை அனுப்ப வேண்டும். ஆனால், பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லுகின்றபோது, அந்தப் பகுதிகளினுடைய மக்கள் பிரதிநிதிகளையும், போராட்டக் குழுவினையும் அழைத்துப் பேசாமல், தான்தோன்றித்தனமாக முடிவெடுக்கின்ற ஒரு நிலைமையில் மாண்புமிகு முதலமைச்சர் தலையிட்டு, ஒரு முதலமைச்சர் அளவிலே ஒரு குழுவை அமைத்து இதற்கு ஒரு தீர்வை ஏற்படுத்திக்கொடுத்து மறுபேச்சுவார்த்தைக்கு உட்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கும்போதே சொல்லிவிடுகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே எத்தனை மருத்துவக் கல்லூரிகள் தொடங்க வேண்டுமென்றாலும், தட்டாமல் தடங்காமல் அனுமதி தருகின்ற எங்களுடைய சின்னய்யா அவர்கள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருக்கின்ற இந்தக் காலத்திலேயே வரும் ஆண்டில் கடலூரில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், உடற்கல்வி ஆசிரியர்கள் பிரச்சினை. இன்றைக்குக் காலையில்கூட விவாதம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான உடற்கல்வி ஆசிரியர்கள் உடற்கல்வி பயிற்சியை முடித்துவிட்டு வேலைவாய்ப்பு இல்லாமல் வயது கடந்துபோகிற அளவிற்கு இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த உடற்கல்வி ஆசிரியர்களைத் தொடக்கப் பள்ளிகளில் தொடங்கி மேல்நிலைப் பள்ளிகள்வரையில் 250 பேர்களுக்கு ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டும். இன்றைக்கு 5,000 பேர் இருக்கிற இடத்திற்கும் ஒரே ஒரு ஆசிரியர். 7,500 பேர் படிக்கின்ற பள்ளிகளுக்கும் ஒரே ஆசிரியர். 7,500 பேர்களுக்கு, ஒரு உடற்பயிற்சி ஆசிரியரை வைத்துக்கொண்டு எப்படி control பண்ண முடியும்? அமைச்சர் போகிற, எம்.எல்.ஏ.-க்கள் போகிற விழாக்களிலே மாணவர்களைக் கட்டுப்படுத்தி உட்கார வைக்க முடியவில்லை. ஆகவே, அவர்கள் படித்த படிப்புக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற வகையில் அதற்கான வாய்ப்புகளை உடற்கல்வி ஆசிரியர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே கடந்த முறை வேண்டுகோள் வைத்தேன். Tank Operator-கள் வெறும் 600 ரூபாய் சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு bleaching powder வாங்குவதற்கு பஞ்சாயத்திலே பணம் கேட்டால், பஞ்சாயத்துத் தலைவர்கள் தர மறுக்கிறார்கள். மாவட்ட நிருவாகம் தர மறுக்கிறது. அவதிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்ற இந்த நேரத்தில், பணி நிரந்தரத்தை கொஞ்ச கால அவகாசம் எடுத்துக்கொண்டு செய்து கொடுத்தாலும்கூட, உடனடியாக அவர்களுடைய சம்பளத்தை மூன்று மடங்காக உயர்த்தித் தருவதற்கு குறைந்தபட்சம் 2,000 ரூபாய் தருவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேமாதிரி ஆவின், நான் தமிழ்நாடு முழுக்க பல மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்கின்றபோது 18 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் ஆவின் நிறுவனத்திலேயே வெறும் ஒப்பந்தத் தொழிலாளர்களாக, வாரிசு அடிப்படையிலே வேலை கொடுக்கப்பட்டவர்களுக்கெல்லாம் இன்றைக்குப் பணிப் பாதுகாப்பு வழங்கப்படாத கொடுமையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு

வழங்குவதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இந்த அரசு முன்வந்து அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான பணியை வழங்குவதற்கு முன்வர வேண்டும். அவர்களை நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வருவதற்கு முன்பே நான் நன்றி சொன்னேன். இத்தனை ஆண்டு கால வரலாற்றில் எந்த ஒரு தலைவனாலும், தலைவியாலும் செய்ய முடியாத ஒரு அரிய சாதனையை தமிழகத்தின் வரலாற்றில் செய்து முடித்த தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்கள் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் கொண்டு வந்த நீங்கள், இன்றைக்கு இந்த சூத்திர மக்களை கோவிலுக்குள்ளே வரவிட மாட்டோம் என்ற ஆதிக்க ஜாதித் திமிரோடு திரிகின்ற ஒரு கூட்டத்திற்கு முடிவுகட்டுகிற வகையில் 1987 இல் E.O. அவர்களை நியமித்து அதற்கான அதிகாரத்தைக் கையகப்படுத்தியபோது அவர்களைத் தாக்கிய, கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்ற தீட்சிதர்கள் கொட்டத்தை அடக்கி, தமிழ்நாடு முழுக்க இருக்கிற அனைத்து மக்களுக்கும் சொந்தமான திருக்கோயில் என்கிற நிலையை உருவாக்குவதற்கு, நடராஜர் திருக்கோயிலை அரசுடைமையாக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று, இந்தியா முழுக்க இன்றைக்கு தூக்கு தண்டனை பிரச்சினை. கலைஞர் அவர்களை கருத்து கேட்கின்றபோது, எனக்கு உடன்பாடு இல்லை என்கிறார்கள்; அன்னை சோனியா அவர்கள் கருத்துச் சொல்கிறபோது, எனக்கு உடன்பாடு இல்லை என்கிறார்கள். திரு. அப்துல் கலாம் அவர்களைக் கருத்துக் கேட்கின்றபோது, உடன்பாடு இல்லை என்கிறார்கள். ஆனால், இந்தியாவிலே, உலகத்திலுள்ள நாடுகளிலே பல நாடுகளிலே ஒழிக்கப்பட்ட அந்தத் தூக்கு தண்டனை இன்னும் நம்முடைய தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, இந்த அரசு ஒரு நல்ல முயற்சியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக அதை அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று பட்டதாரி ஆசிரியர்கள். பட்டதாரி ஆசிரியர்களைப் பணி மூப்பு அடிப்படையிலே தேர்வு செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வேளாண்மைத் துறை அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள். வேளாண்மைப் பொறியியல் பட்டய மாணவர்களுக்கான பணியிடங்களை நிரப்புவதற்கு இதுவரையிலும் அரசு முன்வரவில்லை. வேளாண்மை படித்தாலே, விவசாயம் படித்தாலே எங்களுக்கு வேலை இல்லையா என்று தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழையெளிய வேளாண்மைக் கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு, விவசாயப் படிப்பைப் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute திரு. வேல்முருகன். என்ன கலைராஜன்?

***திரு. வி.பி. கலைராஜன்:** இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் பேசுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தூக்கு தண்டனையிலே உடன்பாடு இல்லையென்று சொன்னார்கள்.**

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன், பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்மீது தவறு இருந்தது என்று நீங்கள் சொன்னால், நான் தூக்கு மேடை ஏறுவதற்குத் தயார் என்று அவரே முன்வந்தார். நான் தூக்கு தண்டனை இந்தியா முழுவதும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக வேண்டுகோள் வைக்கிறேன். அதை நம்முடைய சகோதரர் திரு. கலைராஜன் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** அதேபோல I.T. முடித்தவர்கள், I.T. படித்தவர்கள் இன்றைக்கு. . . (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேளாண்மைக் கல்லூரியிலே படிக்கின்ற பட்டதாரிகளுக்கு, கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, கடந்த ஆட்சிக் காலத்திலே பதவி உயர்வு வழங்கப்படாமல் இருந்த 2,877 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. A.O. நியமனம், Tamil Nadu Public Service Commission மூலம்தான் தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற நிலையில், 520 பேர் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று தேர்வாணையத்திற்கு நாங்கள் எழுதியிருக்கின்றோம். தோட்டக்கலைத் துறையில், 47 பணியாளர்களைத் தேர்வு செய்து கொடுங்கள் என்று, தமிழ்நாடு தேர்வாணையத்திற்கு எழுதியிருக்கின்றோம். A.A.O., அதாவது அதிகாரி மட்டத்தில் நியமிக்கக்கூடிய 1,707 பேரை நியமிப்பதற்கு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலேயே அவர்களை இந்த அரசு நியமிக்கும்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) No. Sit down.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் எங்கள் கட்சியினுடைய முன்னணித் தலைவராக இருக்கின்ற திரு. குரு அவர்கள்மீதும், எங்கள் கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளர்கள்மீதும், மாவட்டச் செயலாளர்கள்மீதும் தொடர்ந்து உண்மைக்கு மாறான சில வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. தமிழக அரசால் தடைசெய்யப்பட்டிருக்கின்ற சில இயக்கங்களுடைய பொறுப்பாளர்கள், தலைவர்கள் அங்கே வலம் வந்துகொண்டு, அவர்களுக்கு எதிரான சூழ்ச்சிவலைகளைச் செய்வதும், அவர்களைக் கொலை செய்கின்ற செயல்களில் ஈடுபடுவதுமான நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போதுகூட, யாரோ ஒருவர் கொடுத்த



பொய்ப் புகாரின் அடிப்படையில், ஒரு கட்சியினுடைய தலைவர்மீது, வேண்டுமென்றே, ஏனென்று விசாரிக்காமல்கூட, அங்கே உங்கள் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டுமென்றோ அல்லது இந்தக் கூட்டணிக்கே ஒரு இடைஞ்சலை ஏற்படுத்த வேண்டுமென்றோ, சில அதிகாரிகள் திட்டமிட்டு, கொலை முயற்சி வழக்குகளைப் பதிவு செய்கிறார்கள். பல்வேறு பொய் வழக்குகளைப் போடுகிறார்கள். அந்த நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டறிய வேண்டும். 2007 மாநாட்டிற்கு வசூல் செய்ததற்கு, இன்றைக்கு வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. வெடிகுண்டே வெடிக்கவில்லை. வெறும் கற்பூரத்தைக் கொளுத்தி, அந்த இடத்திலே கருப்பு படிந்தவுடனே அதைக்காட்டி, இங்கே வெடிகுண்டு வெடித்தது என்று ஒரு வழக்கைப் பதிவு செய்கின்றார்கள். யாரோ ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றுவிட்டதாக வழக்குப் பதிவு செய்கிறார்கள். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிழரசுமீது வேண்டுமென்றே கொலை முயற்சி தாக்குதல் நடக்கிறது. அதற்கு அவர் கொடுத்த புகார்மீது வழக்கு கிடையாது. கைது கிடையாது. நேற்றையதினம், . . (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. 22 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. தி. வேல்முருகன்:** குறுக்கீடு ஐந்து நிமிடம் வந்துவிட்டது, தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. தி. வேல்முருகன்:** இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய பேர் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. தி. வேல்முருகன்:** இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கட்சியினுடைய முக்கியமான பொறுப்பாளர்கள்மீது மட்டும் கொலை வழக்கல்ல, என்மீதும், என்னுடைய சகோதரர்மீதும், கடந்தகாலங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, தூசி தட்டி எடுக்கப்பட்டு, நேற்றையதினம் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, என்னுடைய சகோதரருக்கு Non-bailable warrant issue செய்யப்பட்டு, அவர் காவல்

நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், இதிலே எங்கேயோ தவறு நடந்துகொண்டிருக்கிறது. இது நம்முடைய இணக்கமான கூட்டணியைக் குலைப்பதற்காக, சிலர் ஒற்றுமையோடு சேர்ந்துகொண்டு, மூவர் கூட்டணி அமைத்துக்கொண்டு, பத்திரிகையாளர்கள் என்கிறார்கள், காவல் துறை உயரதிகாரிகள் என்கிறார்கள், இன்னும் சிலபேர் அமைச்சர் பெருமக்கள் என்று சொல்கிறார்கள். இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு, இந்த இணக்கமான சூழ்நிலையைத் தகர்த்தெறிவதற்காக, மிகப் பெரியதொரு சதிவலை நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த உண்மை நிலையை அறிய வேண்டும். எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. குரு அவர்கள்மீது போடப்பட்ட வழக்கு, எங்கள் மாவட்டச் செயலாளர் அவர்கள்மீது போடப்பட்ட வழக்கு, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. தமிழரசு அவர்கள்மீது போடப்பட்ட வழக்கு, தமிழ்நாடு முழுவதும், இளஞ்செழியன் என்பவர்மீது, சாதாரணமாக கிணறு வெட்டுவதற்குப் பயன்படுத்தியதற்காக, இலங்கைக்கு வெடிகுண்டு கடத்தினார் என்று வழக்குப் பதிவு செய்யப்படுகிறது என்று சொன்னால், இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினாலே, உங்களிடத்திலே நாங்கள் வேண்டுகோள் வைக்கிறோம். எங்கள் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, யாரோ மிகப் பெரிய சதிவலையைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த சதியை நீங்கள் அம்பலப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், ஏதோ பா.ம.க.வினர்மீது இந்த அரசு திட்டமிட்டு பொய் வழக்குப் போடுவதைப்போல தொடர்ந்து பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். நான் குறுக்கிட வேண்டாமென்று நினைத்தேன். அதிலேயும், அவருடைய கட்சியைச் சேர்ந்த குருவைப் பற்றி இங்கே குறிப்பிட்டார். இதுவரையிலே யார் அவர்மீது புகார் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அங்கே புகார் கொடுத்தார்கள். F.I.R. போடப்பட்டது. இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் காவல் துறையைக் கூப்பிட்டு கைது செய்ய வேண்டாம், விசாரணை



நடத்துங்கள் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, அவரைக் கைது செய்யவில்லை. அது மட்டுமல்ல, அவர் பேசிய பேச்சு ஒன்றைச் சொல்கிறேன். மத்திய அமைச்சர் ராஜாவை அந்தத் தொகுதிக்குள் நடமாட விடமாட்டோம் என்று அவர் பேசுகிறார், அரியலூர் பொதுக் கூட்டத்திலே. ஆண்டிமடம் தொகுதியிலே இடைத் தேர்தல் வரும் என்று பேசுகிறார். ஒரு கட்சியைச் சேர்ந்தவர், அதிலே முன்னணித் தலைவராக இருக்கக்கூடியவர், இப்படிப்பட்ட வன்முறைப் பேச்சுக்களைப் பேசினால், போலீஸ் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்குமா? F.I.R. போடமாட்டார்களா? இது நியாயம்தானா என்பதை மாண்புமிகு உறுப்பினரே எண்ணிப் பார்த்துப் பதில் சொல்ல வேண்டும். இவ்வளவுக்குப் பிறகும்கூட முதலமைச்சர் அவர்கள், அவர் பேசியதற்காக ஒரு F.I.R. போட்டால் அதோடு நிறுத்துங்கள், எந்தவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம், விசாரித்து அரசுக்கு அறிக்கை அனுப்புங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மத்திய அமைச்சரையே நடமாட விடமாட்டோம் என்பதும், ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலே இடைத் தேர்தல் வரும் என்பதும் எந்த அளவிற்கு நியாயம் என்பதை உறுப்பினர்தான் சொல்ல வேண்டும். *(கூச்சல்-குழப்பம்)*

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) திரு. வேல்முருகன், time ஆகிவிட்டது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள். நீங்கள் எடுத்திருக்கிற நேரத்தைப் பாருங்கள், ஐந்து நிமிடங்கள் அதிகமாக எடுத்திருக்கிறீர்கள். 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். திரு. டில்லி பாபு. (குறுக்கீடுகள்)

* **திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர் பாபு, உட்காருகிறீர்களா? (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. (குறுக்கீடுகள்)

**திரு. ப. டில்லி பாபு:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுவாக

வரவேற்கிறது. (குறுக்கீடுகள்) தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் 40 ஆண்டு கால கோரிக்கையான 40 இலட்சம் மக்களின் வாழ்வாதாரக் கோரிக்கையான, உயிர் ஜீவநாடிக் கோரிக்கையான, எத்தனையோ தலைமுறை நோயினால், பிணியினால், வாழ்நாளில் பாதியைக்கூட வாழ்ந்திட முடியாமல் இருந்த அப்பகுதி மக்களுக்கு இந்த அரசின் இடைவிடாத முயற்சியினால் 40 ஆண்டு கால கனவு இன்று தமிழக முதல்வர் அவர்களால் நனவாக்கப்பட்டு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,330 கோடி ரூபாயில் நிறைவேற்றிட முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்திற்காக தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்து மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறோம். இதற்காக அரும்பாடுபட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், மாவட்டத்தினுடைய உயர் அதிகாரிகளுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். பல ஆண்டு காலமாக நீடித்து வருகின்ற கர்நாடகா, தமிழகத்தினுடைய சகோதர உறவை சில மதவெறி அமைப்புகள் சீர்குலைத்திடும் எண்ணத்தோடு இந்தத் திட்டத்தினைக் கிடப்பிலே போடுவதற்கும், முடக்கிவிடுவதற்கும் தேவையில்லாமல் ஏற்படுத்திடும் சர்ச்சைகளை முறியடித்திட தமிழகத்திலுள்ள அனைத்து கட்சிகளும், ஜனநாயக அமைப்புகளும் தமிழக முதல்வரின் பின்னால், தமிழக அரசின் பின்னால் நின்று ஒரே உருவமாக அணிவகுத்து நிற்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டு கால கோரிக்கையான, தருமபுரி மாவட்டத்திலே அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்குச் செவி சாய்த்து, இடம் அறிந்து, காலம் அறிந்து ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி மக்கள் வாழக்கூடிய அரூரிலே அரசு கலைக் கல்லூரி வழங்குவதற்காக சிறப்பு ஆணையாக, சிறப்பு உத்தரவாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அளித்து, அரூரிலே ஒரு கலைக் கல்லூரி வழங்குவதற்கான வாய்ப்பினை அளித்தமைக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அரூர், பாப்பிரெட்டிப்பட்டியை மையப்படுத்தி, அரூர் வட்டாட்சியர், அரூரிலே கோட்டாட்சியர் அலுவலகம்



அமைத்ததற்காக தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கல்விக் கட்டணம் இரத்து. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கோரிக்கையை ஏற்று விடுதி மாணவர்களுக்கு 50 ரூபாய் உணவுப் படி உயர்த்தியது, ஆதி திராவிடர் விவசாயிகள் TAHDCO-விலிருந்து பெற்ற விவசாயக் கடன் 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்தது, சிறப்பு உட்கூறு திட்டத்தில் 2,312 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு மேலும் ரூ.768 கோடி உயர்த்தியுள்ளது ஆகியவை நல்ல அம்சங்களாகும்.

பல்வேறு நல வாரியங்களுடன் பனைத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், நரிக்குறவர்கள், அரவாணிகள், பல்வேறுபட்ட நல வாரியங்கள் என்பது அரசின் விசாலமான, பரந்த பார்வைக்குப் பல சான்றுகள். 25,000 சிறுபான்மையினர் பயன்பெறும் வகையில் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் 40 கோடி ரூபாய் கடன் உதவி போன்ற நல்ல அம்சத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான விலைவாசி உயர்வினால், மக்கள் வாழ்க்கைத் தரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை கோவையில் நடைபெறுகின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 19-வது அகில இந்திய மாநாடு மத்திய அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளதை கவனப்படுத்த விரும்புகிறேன். மேலும், அனைத்து மாநிலங்களுக்கும் வழங்கப்பட வேண்டிய அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை, கோதுமை போன்ற உணவுப் பொருட்களை மத்திய அரசு முழுமையாக வழங்கிட வேண்டும் என்று மாநாடு வலியுறுத்தி உள்ளதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொது விநியோகத் துறையில், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவற்றிற்கு மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, வழங்குகின்ற தமிழக அரசு அதை முழுமையாக, அதாவது உதாரணத்திற்கு 67 ஆயிரம் குடும்ப அட்டைகள் உள்ள அரூர் ஒன்றியத்திலே, 167 ரேஷன் கடைகளிலே ஒரு கடைக்கு 50 கார்டுகள் முதல் 100 கார்டுகளுக்கு மட்டுமே பருப்பு வகைகள் விநியோகம் செய்யப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். உணவுப் பொருட்கள் விநியோகத்

திட்டம் கடைக்கோடி கிராமப்புற விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் சிறப்பாகச் சென்றடைய போதிய அளவிற்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்திட வேண்டுகிறோம்.

குடியாத்தம் தொகுதி, குடியாத்தத்தில், குடும்ப அட்டையுடன் வாக்காளர் அடையாள அட்டையும் இருந்தால்தான், பொருள் விநியோகம் செய்யப்படும் என்று நேற்றைக்குமுன்தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்திருப்பதை, இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொடரும் அரிசிக் கடத்தலைத் தொடராமல் பார்த்துக்கொள்ள அரசு, சம்பந்தப்பட்ட துறைமூலம் நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம். நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கியதும், 3 இலட்சத்து 98 ஆயிரம் குடிமனைப் பட்டாக்கள் வழங்கியதும் பாராட்டிற்குரிய அம்சங்கள்.

தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் 5 சதவிகிதம் உள்ள பழங்குடி மக்களுக்கு இந்தத் திட்டம் சென்றடையவில்லையென்ற கருத்து, நிலவுகிறது. திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் வாழும், மலையாளி இருளர், காட்டு நாயக்கர், குரும்பன்ஸ் போன்ற பழங்குடி மக்களுக்கு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்கூட இன்னும் முழுமையாக சென்று சேரவில்லை என்கிற நிலைமையை இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, பழங்குடி மக்களுக்கான சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில் 6 மாத காலம், ஒரு வருடம் காலம், இரண்டு வருட காலம் எனக் காலதாமதம் நீடிக்கிறது. பழங்குடி மக்களின் நலன், வாழ்வாதாரம் குறித்து இவ்வறிக்கையில் புதிய அறிவிப்புகள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், அதற்குரிய கொள்கையை அரசு கடைப்பிடிக்க வேண்டுமென்று, இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நிதிநிலை அறிக்கையில் 70 ஆயிரம் தொகுப்பு வீடுகள் இவ்வாண்டு கட்டப்படும் என்று கூறியிருப்பது மகிழ்ச்சிகரமான விஷயம். கலைஞர் ஆட்சியில் எவ்வளவோ சாதனைகளைப் படைத்துள்ளீர்கள். ஒரு வருடத்தில் ஒன்றரை இலட்சம் தொகுப்பு வீடுகள் கட்டினால், எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் சுமார் 5 இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்கும்போது, சரிபாதி ஏழைக் குடும்பத்தினருக்கு, ஆதி திராவிடர்,



பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை மக்கள், ஆக, 50 சதவிகித மக்களுக்கு வீடு அளிப்பது என்ற கோட்பாட்டை அமலாக்கினால் வீடற்றவர்களுக்கு, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்களுக்கு வீடு வழங்கிய அரசாக, இது பறைச்சாற்றப்படும்.

அதேபோல, ஒரு தலைமுறை வாழ, ஒரு இலட்சம் ரூபாயாவது இவ்வீடுகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் எந்தவிதமான தொழில்களும், தொழிற்சாலைகளும் இல்லை. படித்த இளைஞர்கள் தீவிரவாதக் குழுக்களுக்கு செல்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நேற்றைக்குமுன்தினம், இரயில் தண்டவாளத்தின் அருகே, வெடிகுண்டும், ஜெல்லட்டின் குச்சிகள் வெடித்ததும், இப்பேர்பட்ட சம்பவங்களுக்குப் பின்னால் நக்சலைட் அமைப்புகள் இருக்கலாம் என்று பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

தருமபுரி மாவட்டத்திற்கென்று சிறப்புத் திட்டமாக, சமூகப் பொருளாதாரத் தொழில் வளர்ச்சிக்கான ஒரு திட்டத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபட்சத்தில் கறைபடிந்த பல பக்கங்களைக் கொண்ட, தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர்கள், ஒரு காலத்தில் பெரம்பலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களை, காவல் துறைக்கு ஆள் எடுக்காத ஒரு நிலைமைகூட இருந்தது. அந்தக் கறைபடிந்த நிலையினை மாற்றுவதற்காக, அந்தப் பகுதிகளிலே வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற திட்டம், அரூரிலே விலை உயர்ந்த மாலிப்டினம் கண்டுபிடிக்கப்பட்டு, தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. தங்கமும், வெள்ளியும் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலையையும், அதேபோல தருமபுரியிலே சிப்காட்டை அமலாக்குவதன்மூலமாகவும், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கனிவுடன் பரிசீலித்து வரும் ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 3 இலட்சத்து 98 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா

வழங்குகின்ற நேரத்தில், அந்த நகராட்சியிலே 1947 ஆம் ஆண்டு முதல் தருமபுரி செங்கொடிபுறத்திலே துப்புரவுப் பணியாளர்களாக, உழைத்து வருகின்ற அந்த மக்களுக்கு 'scavenger site' என்று சொல்லப்படுகின்ற 4¾ ஏக்கர் நிலப்பரப்பு உள்ளடக்கிய அந்தப் பகுதியில், 4¼ ஏக்கர் நிலத்திற்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 50 சென்ட் நிலத்தில், துப்புரவுப் பணியாளர்கள் யாரெல்லாம் குடியிருக்கிறார்களோ, அவர்களுக்கு மட்டும் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது.

எங்களுடைய கட்சியினுடைய மாநிலச் செயலாளர் மரியாதைக்குரிய தோழர் என். வரதராஜன் அவர்கள் கேட்டதன்பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கனிவுடன் பரிசீலித்து பட்டா வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள். ஏனோ சில அதிகாரிகளுடைய முட்டுக்கட்டையால் இன்னும் அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய காலத்திலாவது, இந்தச் சந்தர்ப்பத்திலாவது, 5 ஆண்டு காலம் குடியிருந்திருந்தால் செங்கொடிபுறம் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட அருந்ததியின மக்களுக்குப் பட்டா கொடுத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல, மக்கள் நலப் பணியாளர்கள், டாஸ்மாக் ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், கிராமப்புறத்தில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்கள், டாங்க் ஆபரேட்டர்கள், நூலகங்களில் பணிபுரியும் தினக் கூலிகள், ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்களின் அமைப்புக்கு அங்கீகாரம், National Child Labour Project-ல் தேசிய உழைக்கும் சிறார் பள்ளியில் 20 ஆண்டு காலம் பணிபுரிந்து வரும் 3,000 ஆசிரியர்கள் போன்றவர்களுடைய பணிவரன்முறை, பணி நிரந்தரம், சம்பள உயர்வு, 8 மணி நேர வேலை ஆகிய கோரிக்கைகளை எதிர்வரும் மானியக் கோரிக்கைகளிலாவது நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் இருக்கிறது. இவ்வரசு நிறைவேற்றும் என்று தமிழக மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சுமார் 8 இலட்சம் மக்கள் வாழும் பகுதிகளான, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஊத்தங்கரை வட்டங்களை உள்ளடக்கி (மணியடிக்கப்பெற்றது) தருமபுரி மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையை அரூரிலே கொண்டு



வருவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கல்லாறு அணைக்கட்டுத் திட்டமும், செனக்கல் பாசனக்கால் திட்டமும், மதிகெட்டான் கால்வாய் திட்டமும் இந்தக் காலகட்டத்திலேயே அமலாக்க வேண்டுகிறேன்.

கரூர் மாவட்டத்தில் இதுவரை அரசு பொறியியல் கல்லூரி இல்லை. அந்தப் பகுதியிலே அரசு பொறியியல் கல்லூரி ஒன்றை அமைத்திட வேண்டுகிறோம்.

தருமபுரி மாவட்டத்தை அடுத்து உள்ள பெரிய நகரமான அரூரை மையமாக்கி, அதனை நகராட்சியாக அடுத்த ஆண்டாவது அறிவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற திட்டங்கள் குறித்து தனித்தனியாக நன்றி சொல்ல நேரம் இல்லாத காரணத்தால், ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கையையும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்று நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிவகங்கை மாவட்டத் தலைநகரில் இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று ஆணையிட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கும், அறிவிப்பை வெளியிட்ட பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட காலமாக வளர்ச்சியும், மருத்துவ வசதியும் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருந்த சிவகங்கை பகுதி மக்கள், மருத்துவக் கல்லூரி அறிவிப்பினை நம்பிக்கையோடு, வளர்ச்சிக்கான திருப்புமுனையாகப் பார்க்கிறார்கள், உள்ளம் பூரிக்கிறார்கள். மிக விரைவில் மருத்துவக் கல்லூரியைத் தொடங்கிட வேண்டுகிறேன். இதற்காக மீண்டும் மீண்டும் தமிழக முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சிவகங்கை மக்களின் கனவுத் திட்டமாக உள்ள கிராபைட் திட்டத்தை நனவாக்கிட, கிராபைட் தொழில் பூங்காவை உருவாக்கி கிராபைட்மூலம் உருவாக்கப்படும் சிறிய பெரிய

பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை நகருக்கு நவீனமான புதிய பேருந்து நிலையம் கொடுக்கும்படி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தற்போதுள்ள சிவகங்கை நகர்மன்றக் கட்டடம் போதுமான வசதிகள் இல்லாத நிலையில் புதிதாக நகராட்சிக் கட்டடம் கட்டித் தரவும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அதிக வருமானத்தை ஈட்டித் தரும் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு, சம்பள உயர்வு போன்றவற்றை உடன் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் வேளாண் உற்பத்தியை ஊக்கப்படுத்தும்வகையில் விவசாயிகள் கடன் வட்டி 4 சதவிகிதம் அறிவித்துள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேரள மாநிலத்தில் நெல் சாகுபடிக்கு ஊக்குவிப்பாக வட்டியில்லாக் கடன் வழங்குகிறார்கள். தமிழகத்திலும் நெல் சாகுபடிக்கு வட்டியில்லாத கடன் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்ணை சாராக் கடன் திட்டத்தின்கீழ் நிலப் பத்திரங்களை அடமானம் வைத்து விவசாய உற்பத்திக்குக் கடன் பெற்ற விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்படாமல் இருக்கிறது. இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய மக்களுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். வீடில்லாத மக்களுக்கு மூன்றரை இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதேசமயம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவலான 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற அடிப்படையில் அனைத்து குடும்பங்களுக்கும் பாதுகாப்பான வீடுகள் கிடைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



குழும வீடுகளுக்கு 55,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கியதற்கு நன்றி. அதேசமயம் அதற்கு எங்கள் கோரிக்கையாக ஒரு இலட்சமாக நிதி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் அதிகமான முத்தரையர் இன மக்கள் குடிசை வீடுகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சிறப்புத் திட்டம் உருவாக்க வேண்டுமென்று தொடர்ந்து நான் வலியுறுத்துகிறேன். எனவே, பாதுகாப்பான வீடுகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் நான்காம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் நியமிக்கப்பட்ட கோலப்பன் கமிட்டி 41 பரிந்துரைகளை கொடுத்திருந்தார்கள்.

அவற்றில் 2 பரிந்துரைகள் மட்டுமே ஏற்கப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 39 பரிந்துரைகளையும் தமிழக முதல்வர் அவர்கள் அமல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

நரிக்குறவர், துாய்மைப் பணியாளர் போன்றவர்களுக்கு நல வாரியம் வழங்கியிருக்கின்ற அதேநேரத்தில், தமிழகத்தில் மதுரை, விழுப்புரம், தேனி, சிவங்கை, விருதுநகர் மற்றும் தமிழகம் முழுவதும் கல் ஒட்டர்கள், கல் குறவர்கள் மற்றும் மலைக் குறவர்கள் என்ற இன மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட மக்கள். இவர்கள்மீது தொடர்ந்து இன்றும் காவல் துறையால் திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. தவறு செய்யாமல் வாழும் பெரும்பகுதி மக்களையும் காவல் துறையினர் பொய் வழக்குகள் மற்றும் ஒரே மாதிரியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்துகின்றார்கள். அமெரிக்காவில் கருப்பின மக்கள்மீது நடத்தப்பட்ட கொடுமைகளைப்போல, 21 ஆம் நூற்றாண்டில்கூட இம்மக்கள்மீது வெளிச்சத்திற்கு வராத கொடுமைகளைக் காவல் துறையினர் செய்கின்றார்கள். வீண் பழி சுமத்தி சிறையில் அடைக்கின்றார்கள். இதனால் ஆயிரக்கணக்கான இக்குடும்பங்கள் சீரழிக்கப்படுகின்றன. இவர்கள்மீது நடத்தப்படும் மனித நாகரீகமற்ற, மனித உரிமைகள் மீறிய செயல்களைத் தடுத்து நிறுத்த தமிழக முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரிக்க வேண்டும். இம்மக்கள் சமூகநீதியோடு பாதுகாப்பாக வாழ

நிதியுதவி உட்பட அனைத்து உதவிகளையும் செய்திட வேண்டும். மதுரை முனியாண்டிபுரத்தில் இம்மக்கள்மீது காவல் துறையினர் நடத்தும் கொடுமைகளைக் கண்டித்து அம்மக்கள் கூட்டாக தற்கொலை செய்துகொள்ளும் போராட்டத்தை 3-4-2008 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். இதை முதல்வர் அவர்கள் தனிக் கவனத்தோடு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் 13 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்கு எவ்வித சலுகைகளோ, பணிப் பாதுகாப்போ இல்லாத நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதை அமல்படுத்தவும், மத்திய அரசால் அத்தொழிலாளர்களுக்கு, 8.33 சதவிகித போனஸ் வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டும், நிருவாகம் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுக்கிறது. போனஸ் என்பதற்குப் பதில் கருணைத் தொகை என்று அறிவிக்கின்றார்கள். போனஸ் தரும் காலத்தை நிர்ணயிக்க மறுக்கின்றார்கள். இத்தகைய தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்து, ஒப்பந்தத் தொழிலாளர்கள் கடந்த மூன்று நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். வேலை நிறுத்தம் காரணமாக நெய்வேலியில் 2,470 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்படும். ஏற்கெனவே பொதுத் துறை நிறுவனமான என்.எல்.சி.யை, தனியார்மயமாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்தபோது, உறுதியாக இடதுசாரிக் கட்சிகளோடு இணைந்து, தனியார்மயமாவதைத் தடுத்த நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், என்.எல்.சி. ஒப்பந்தத் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அறிக்கையிலே இலங்கை மற்றும் உலகத் தமிழர் பிரச்சினைக்காக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழர்கள் விமானத் தாக்குதலில் மடிவதும், யாழ்ப்பாண குடா நாட்டில் உணவு, உயிர்காக்கும் மருந்துகள் எதுவும் கிடைக்காமல் மக்கள் துயரம் அடைவதும் சகித்துக்கொள்ளக்கூடியதாக இல்லை. இதனைத் தீர்க்க வேண்டும் என்றால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும். ஆனால், அரசியல் தீர்வின் நம்பிக்கைகள் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையால் அண்மைக் காலத்தில் சிதறடிக்கப்பட்டுள்ளன.



மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கையின் அப்போதைய அதிபர் ஜெயவர்த்தனாவும் செய்துகொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்த அடிப்படையில், கடந்த 18 ஆண்டுகளாக ஜெயவர்த்தனே, பிரேமதாசா, சந்திரிகா மற்றும் விக்கிரமசிங்கே ஆகிய நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கு இணைந்த ஒரே மாகாணத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள். ஆனால், இலங்கை அரசால் தற்போது வடக்கு - கிழக்கு மாகாணம் என்று தமிழ் மக்கள் பிரிக்கப்பட்டுள்ளார்கள். இது ஒரு பிரித்தாளும் சூழ்ச்சி. இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்று கருதிவிடக் கூடாது. வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்து வைக்கும் இலங்கை அரசின் செயல் நிரந்தரமானால், இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமாக நமது வங்கக் கடல் வரை, கண்ணி வெடிகளாகப் பரவி நிற்கிறது. நமது மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் சுட்டுத் தள்ளப்படுகின்றார்கள். உலகின் முக்கிய கடற்படை என்று பெருமைப்பட்டுக்கொள்ளும், நம் கடற்படையில் மீனவர்கள்மீது நடத்தப்படும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

கச்சத் தீவை நட்புக்காக விட்டுக்கொடுத்தோம். இதனை இரண்டு நாடுகளுக்கும் பொதுவானது என்று மாற்ற வேண்டும். ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின்படி, கிழக்கு-வடக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரே மாகாணத்தில் வாழ்வதற்கும், இலங்கையில் அரசியல் தீர்வு காணவும், இலங்கை கடற்படையின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழிகாட்டுதலில், தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றி, மத்திய அரசை வலியுறுத்த, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதைப்போல, தமிழக முதல்வர் அறிவித்த நிதிநிலை அறிக்கையில் புதிய சட்டமன்றக் கட்டுமான நடவடிக்கையை வரவேற்கிறேன். தமிழர்களின் கட்டட மரபுதான், திராவிட கட்டட மரபிற்கு மிகவும் அடிப்படையானது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. மகாபலிபுரத்தில் மலைகளைக் குடைந்து அமைத்த சிற்ப மரபும், தஞ்சை பெருவுடையார் ஆலயத்தின் நீடித்த தொன்மையும் இதற்கான முன்னுதாரணங்களாகும். இந்தத் தொன்மைக் (மணியடிக்கப்பெற்றது)

கட்டடம்போல் நமது சட்டமன்றத்தின் புதிய கட்டடமும் அமையவிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால், தமிழர்கள் கட்டடக் கலையை மட்டும் வளர்த்தெடுக்கவில்லை. மிகச் சிறந்த ஜனநாயகப் பண்புகளையும் வளர்த்தெடுத்துள்ளார்கள். பழங்காலத்திலேயே கிராம நிர்வாகம், வாரியங்கள் அமைத்தல், குடவோலைமூலம் தேர்ந்தெடுத்தல் முதலியவை இருந்தது இன்றும் வியக்க வைக்கின்றது.

தனி மனித அதிகாரம் படைத்த மன்னர்களுக்குக்கூட, பல்வேறு ஒழுக்க நெறிகளை வகுத்து, சிறந்த வாழ்வியல் முறைகளைக் கொண்ட சமூகமாகத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அதனால்தான் பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் தமிழர்களின் பண்பாடும், நாகரிகமும், தமிழ்மொழியும் நீடித்துள்ளது.

திராவிடர் மரபில், தமிழர் மரபில் அமையவிருக்கின்ற அந்தச் சட்டமன்றக் கட்டடத்தில், எதிர்கால சட்டமன்றத்தை நடத்தவிருக்கும் நாம், தமிழர்களின் தொன்மையான ஜனநாயக இயக்கப் பண்புகளுடன், சட்டமன்றத்தை நடத்தப் போகிறோமா அல்லது பகைமை, சட்டமன்ற நேரத்தை வீணடித்தல், ஆகியவற்றைச் சொல்லப் போகிறோமா என்ற கேள்வி மனதுக்குள் எழுகிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

கடந்த காலத்தில் சட்டமன்றத்தில் உருவாக்கப்பட்ட வானளாவிய அதிகாரம் என்ற அடிப்படையான ஜனநாயக சீரழிவுகள், சட்டமன்றத்தில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்புகள் போன்றவற்றில் நிலையான தீர்வுகாணும் விதத்தில் மாற்றங்களைச் செய்திடவும், சட்டமாக்கவும் குழுவை அமைத்துத் தீர்வு காண தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, 'நான் என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது, நாம் என்று சொன்னால்தான் உதடுகள்கூட ஒட்டும்' என்று தமிழக மக்களுடைய நலன்களை, பண்பாட்டை, அன்பை, பண்பை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ரா. வரதராஜன்.

**திரு. சு. குணசேகரன்:** உலகிற்கு எடுத்துச்சொன்ன நமது தமிழக முதல்வர் அவர்கள் இருக்கின்ற காலத்தில் தமிழர்களுடைய . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** தமிழர்களுடைய எதிர்கால நலன்களுக்கான, பொதுவான நிலைகளில், நாம் என்ற ஒற்றுமையோடு, செயல்படுவதற்கு



இங்கே இருக்கின்ற, பல்வேறு அரசியல் கட்சிகளும் சிந்திக்க வேண்டும், கலைஞர் அவர்கள் தலைமையிலே அணிவகுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கும், எங்களால் என்னாளும் மதிக்கின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் அண்ணாச்சி வைகோ அவர்களுக்கும் நன்றி கூறி இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகின்றேன். முதலில், என்னுடைய தொகுதியில் உள்ள குறைகளை நான் இங்கே கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆமத்தூர்-இலட்சுமியாபுரம் சாலை, எம். மேட்டுப்பட்டி அருகில் உள்ள அர்ச்சனாபுரம் நதியில் ஒரு பாலம் கட்டுவதோடு, கிருஷ்ணாபுரம் அருகில் பெரிய ஓடையில் ஒரு பாலம் கட்ட வேண்டும், மழைக் காலங்களில் ஆறு கிராம மக்கள், மாணவ மாணவிகள் பள்ளி சென்று வருவதற்கு முடியாத அவல நிலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்கள் நலன் கருதி அந்தப் பாலத்தைக் கட்டி, சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் அரசு மருத்துவமனையில் M.R.I. scan இல்லை. விருதுநகர், மாவட்டத் தலைநகரில் உள்ள மருத்துவமனையில் செவிலியர்கள் இல்லை. அங்கு செவிலியர்கள் தங்கும் விடுதி இல்லை. மருத்துவமனையில் சுத்தம் இல்லாமல் செடியும் புதருமாக காணப்படுகிறது. ஆகவே, அந்த மருத்துவமனையைச் சீரமைத்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விருதுநகர் மாவட்டம், ஆச்சார் வளாகத்தில் உள்ள சுமார் 100 வீடுகள் பழுதடைந்து கிடக்கின்றன. அந்த வீடுகளைச் சீரமைத்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சமையல் எண்ணெய் அதிக விலை விற்கிறது. தயாரிக்கப்பட்ட சமையல் எண்ணெய்யை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். ஆகவே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் உள்நாட்டிலேயே விற்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், ஏழையெளிய மக்கள் வாங்கும் வகையில் இந்த அரசு நடந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் பெரிய வணிக நகரமாகும். அந்த நகரத்தில் வணிக பெருமக்கள் அடிக்கடி வெளியூர்கள் சென்று வருவதற்காக விருதுநகரில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக முன் பதிவு மையம் அமைக்க வேண்டும்.

விருதுநகர் நகருக்குள் வராமல் அனைத்து பேருந்துகளும் மதுரையிலிருந்து புறப்பட்டால் திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி செல்லும் வண்டிகள் விருதுநகர் உள்ளே செல்லாமல் புறவழிச் சாலை வழியாகச் செல்கின்றன. அந்தப் பேருந்துகள் அனைத்தும் பயணிகளை விருதுநகருக்குள் வந்து இறக்கி விட்டுச் செல்வது போல், விருதுநகரில் உள்ள புதிய பஸ் நிலையத்தை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-55

தமிழகத்தில் ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும்வகையில் அனைத்து மாவட்டங்களிலும் ஒரு அரசு பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி தொடங்க இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. விருதுநகர், பாரத ரத்னா விருது பெற்ற பெருந்தலைவர் காமராஜர் பிறந்த பூமியாகும். முதலமைச்சராகவும் இருந்து விருதுநகருக்கு பெருமை சேர்த்தவர் அவர். அந்த நகரில் முதன் முதலில் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும். மாறாக பல்வேறு மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும் தொடங்கியிருக்கிறீர்கள். அதனை முதன்முதலாக விருதுநகரில் தொடங்கினால்தான் காமராஜருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இருக்கும். அதை விட்டு விட்டு இந்த அரசு வேறு வேறு மாவட்டங்களில் தொடங்குகிறது. இந்த நிதியாண்டிலாவது விருதுநகருக்கு ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரிலே இராமமூர்த்தி சாலை என்ற ஒன்று அமைந்திருக்கிறது. அந்தச் சாலை விருதுநகரிலிருந்து கல்குறிச்சி-மல்லாங்கிணறு வழியாக மதுரை செல்லும். அதேசமயம் அருப்புக்கோட்டை வழியாகத் தூத்துக்குடி செல்லும் பிரதான சாலையாகும். விருதுநகருக்கு கிழக்கு மேற்காக நடுவில் ஒரு railway gate உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதராஜன், இங்கே என்னைப் பார்த்து நின்று பேசுங்கள். (குறுக்கீடு) இங்கே பார்த்து நின்று பேசுங்கள்.



**திரு. ரா. வரதராஜன்:** விருதுநகரின் மையத்தில் அமைந்துள்ள railway crossing 334/800 விருதுநகர்-மணியாச்சி பிரிவு stopping தொடர்ந்து மூடப்படுகிறது. அதன் கிழக்கே அரசு மருத்துவமனை அமைந்துள்ளது. அதேபோல, தமிழ்நாடு மாவட்டத் தலைமை மின் நிலையம் அமைந்துள்ளது. மேலும் கலைக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி அந்தப் பகுதியின் கிழக்கே அமைந்துள்ளது. ஒரு நாளைக்கு 6 மணி நேரம் அந்த railway gate அடைக்கப்படுகிறது. அந்த மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காக நோயாளிகளை அழைத்துச் செல்லும்போது அந்த gate அடைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் அவர்கள் உயிருக்கு ஆபத்தாகி மரணமுறுகிறார்கள். அந்த gate உள்ள இடத்தில் மேம்பாலம் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மதுரை கோட்டத்தில் மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் கோட்டத்தில் 2006 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை பணிபுரிந்து ஓய்வுபெற்ற சுமார் 2200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு, திமுக அரசு பதவியேற்ற காலத்திலிருந்து, அதாவது 22 மாதங்களாக பணப் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது. ஓய்வூதியம், முதிர்வுத் தொகை, விடுப்புச் சம்பளம், ஊதிய ஒப்பந்த நிலுவைத் தொகை 1-2-2008 முதல் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. மேற்கண்ட பணப் பயன்கள் உரிய நேரத்தில் வழங்கப்படாததால் ஓய்வுபெற்ற பணியாளர்களின் குடும்பங்கள் அனைத்தும் கடன் சுமையில் அவதிப்படுகின்றன. அதுமட்டுமல்ல, அவர்கள் இந்த ஓய்வூதியத்தை வைத்து பையனுக்கு திருமணம் நடத்த முடியாத அவல நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். இந்த அரசு அவர்களுடைய நலன் கருதி உடனடியாக இந்தத் தொகையைப் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

18-3-2008 முதல் விருதுநகர் வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 150 ஆண்கள் மற்றும் பெண்கள் காலவரையற்ற தொடர் நீதிமன்ற புறக்கணிப்புப் போராட்டம் செய்து வருகிறார்கள். ஏனென்றால் விருதுநகரில் விரைவு நீதிமன்றம் அமைந்து சுமார் 5 வருட காலம் ஆகியும் மேற்படி நீதிமன்றத்திற்கு வரையறுக்கப்பட்ட வழக்குகள் மற்றும் மேல் முறையீட்டு வழக்குகள் இன்னும் ஒதுக்கப்படவில்லை. மாவட்ட குடும்ப நல நீதிமன்றம் அமைக்க இடம் இல்லை என்று கூறி மறுக்கிறார்கள். ஆனால், விருதுநகர் மாவட்ட வழக்கறிஞர்கள் கையகப்படுத்தப்பட்ட அரசு நிலம் பல ஏக்கர் உள்ளன என்று

கூறுகிறார்கள். விருதுநகர் சார்பு நீதிமன்றம் அமைத்து சுமார் 10 வருட காலமாகியும் நிரந்தரம் செய்யப்படவில்லை. ஏனென்றால், மேற்படி சார்பு நீதிமன்றம் அங்கு இல்லாமல் ஆக்குவதற்கு முயற்சி எடுக்கிறார்கள். மாவட்ட நீதிமன்றம் மாவட்டத் தலைநகரில் அமைய வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். விருதுநகரைச் சுற்றிலும், கிராம, நகரப் பகுதிகளில் சுமார் 10 இலட்சம் பேர் உள்ளனர். எனவே, விருதுநகர் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இவற்றையெல்லாம் வலியுறுத்தி வழக்கறிஞர்கள் 11-3-2008-ல் விருதுநகர் நீதிமன்றத்தின்முன் கறுப்புக் கொடி ஏற்றி, கறுப்பு பேட்ஜ் அணிந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விருதுநகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது. விருதுநகருக்குள் மாணவ மாணவிகளும், முதியோர்களும் நடக்க முடியாமல் அந்தப் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பகுதியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி முடிந்துவிட்டால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதராஜன், உரையை முடியுங்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** அந்தப் பகுதி முழுவதும் சாலை அமைத்துத் தராமல் மற்ற அனைத்துப் பக்கங்களிலும் தோண்டித் தோண்டிப் போட்டு, அந்தப் பகுதிகளில் நடக்க முடியாமல் விருதுநகர் மக்கள் அவதிப்படுகின்றார்கள். ஆகவே, இந்த அரசு தலையிட்டு அந்தப் பாதாளச் சாக்கடை திட்டப் பணியை விரைவில் முடித்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

***திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனு நீதிச் சோழனின் மறு பிறப்பாய், சரித்திரப் புகழ் பெற்ற ராஜ ராஜ சோழனின் மறு பதிப்பாய், ராஜ ராஜ சோழனையும் மிஞ்சிய பேச்சாற்றல், எழுத்தாற்றல் என அனைத்து ஆற்றல்களையும் அரசு பரிபாலனத்தில் மிளிரச் செய்து இந்திய அரசியல் வானில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாமல் ஒளிரும் எங்கள் தானைத் தலைவர், தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் கலைஞர்



அவர்களே, *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* சாமானிய மக்களுக்காகவும், பாட்டாளி மக்களுக்காகவும், தொழில் முனைவோர், விவசாயிகள் என்று அனைத்து தரப்பு மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை தலைவர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலுடன் நாட்டுக்கு அர்ப்பணித்துள்ள மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)* கழகத்தின் பொருளாளர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, ராஜ ராஜ சோழனின் வழித்தோன்றல் இராஜேந்திர சோழன்போல் ஈடு இணையற்ற நிர்வாகத் திறன் கொண்ட இளைஞர்களின் எழுச்சி ஞாயிறு, வெள்ளை மாளிகையின் வெண்புறாவாய் சிறகடித்து *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று தமிழகத்தையே வெள்ளை மாளிகையாய் உயர்த்திக் கொண்டிருக்கும் எங்கள் தளபதியே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே, பத்திரிகையாளர்களே அனைவருக்கும் என் வணக்கம்.

ரூ.51,505.62 கோடிக்கான இந்த நிதிநிலை அறிக்கை சுமார் 2½ மணி நேரத்திற்கு மேலாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவையிலே படைக்கப்பட்டதை நான் சில நிமிடங்களில் எப்படி இயம்பிட இயலும்? ஆட்சிக்கு வந்தவுடன் முதல்வர் அவர்கள், முதல் கோப்பிலே கையெழுத்திட்ட அதே வினாடியில், ஏழைகளின் வயிற்றில் பால் வார்த்து, ஒரு கிலோ அரிசி 2 ரூபாய், பள்ளிச் சிறார்களுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டைகள், விவசாயிகள் பட்ட கூட்டுறவுக் கடன் ரூ.7,000 கோடி தள்ளுபடி என்று கையெழுத்திட்டதன் "பொருள்" அது மத்திய அரசுக்கும் தேவை என்பதால், இன்றைக்கு விவசாயிகளின் கடன் தொகை ரூ.60,000 கோடியை மத்திய அரசு தள்ளுபடி செய்திட முன்னோடி நீங்கள்தானே, தலைவர் கலைஞர் அவர்களே, முன்மாதிரியும் தலைவர் கலைஞர் அவர்கள்தானே !

பிற்பகல் 1-05

அன்று வேளாண் கடன் வட்டி 9 சதவிகிதம்; இன்று அது 4 சதவிகிதம்! வேளாண் துறையில் பசுமைப் புரட்சி படைத்ததும் நீங்கள்தானே! அதனால்தான் வெள்ளம் பாதித்துள்ளபோதும், உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்களுக்கு மேலாக இருக்கும் என்று அறியப்படுகிறது. சட்டமன்றத்தை ஒத்திவைத்து விட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறிட, நிவாரண உதவி வழங்கிட அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆணையிட்டீர்கள். ஊரக வளர்ச்சி

மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு ஓடோடிச் சென்று மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறியும், நிவாரணம் வழங்கிக்கொண்டும் இருந்த அந்தக் காட்சி, சோர்ந்த உடலோடு காணப்பட்டாலும், விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்த காட்சி அன்றோ! விவசாயிகளுக்கு நல வாரியம் கண்டு, கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம், ஈமச் சடங்கு உதவி என இந்நிதிநிலை அறிக்கையில், விவசாயிகளின் நல வாரியத்திற்கு 150 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு! ஏழை விவசாயிகளுக்கு தேர்தல் அறிக்கையிலே கூறியதுபோலவே தரிசு நிலங்களைப் பண்படுத்தி 1 இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கியுள்ளீர்கள். வீட்டுமனைப் பட்டா 3 இலட்சம் பேருக்கு வழங்குவோம் என்று சொல்லிவிட்டு, 3 இலட்சத்து 98 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளதே யாருடைய ஆட்சியில்? தண்ணீருக்கோ அண்டை மாநிலங்களோடு போராட்டம்! குறைந்த நீர், குறைந்த உற்பத்திச் செலவு அதிக விளைச்சல் தரும் "செம்மை நெல் சாகுபடி முறை" விவசாயிகள் கூடுதல் வருவாய் ஈட்டிட, மத்திய அரசின் "தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் உற்பத்தியை பெருக்கக்கூடிய "துல்லிய பண்ணை முறை", 22 புதிய முக்கிய உழவர் சந்தைகளில் காய்கறிகளையும், கனிகளையும் பாதுகாத்திட வேளாண் உற்பத்தி வாரியம்மூலம் குளிர்பதன வசதிகள், விவசாயக் கூலி ஆட்கள் குறைந்து வரும் இக்காலகட்டத்தில் நடவு, அறுவடைக்கு இயந்திரங்கள்; அந்த இயந்திரங்களுக்கு 25 சதவிகிதம் மானியம்; பயிர் வகைகள் பயிரிட, விவசாயிகளை ஊக்குவித்திட, மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பயறு வகைகள் கொள்முதல்; அதிக வருவாய் ஈட்டும், தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்திட விவசாயிகளை ஊக்குவிக்கும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம்; சொட்டு நீர் மற்றும் தெளிப்புநீர் வசதி அமைக்க 50 சதவிகிதம் மானியம்.

அருமைத் தலைவர் அவர்களே, விவசாயம்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்ற காரணத்தால் இத்தனைத் திட்டங்களையும் இன்றைக்கு தந்ததோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களை 1989-ல் அன்று தருமபுரியில் தொலைநோக்குடன் தந்தீர்கள். இன்று அவை 3 இலட்சத்து 63 ஆயிரம் சுய உதவிக் குழுக்களாகப் பெருகி, இன்றைக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் சுழல் நிதியாக ரூ. 150 கோடியைப் பெறுகின்ற வளர்ச்சியைக் கண்டிருக்கின்றன. அதனால் 30 இலட்சம் மகளிர் பயனடைவர். மகளிர் சுய உதவிக் குழுக்களைப்போல விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் அமைத்து 1 இலட்சம் விவசாய உறுப்பினர்களுக்கு சுழல் நிதியாக ரூ. 10 கோடி. மேலும் அவர்களுக்கு இலவச மின்சாரம்.



*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.*

ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வண்ணம், பருப்பு, உளுந்துப் பயறு, பாமாயில் போன்ற பொருட்களை அரசே கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள்மூலம் குறைந்த விலையில் விற்பனை; இதற்காக ரூபாய் 1,950 கோடி நிதியொதுக்கீடு. நரிக்குறவர்களுக்கு நல வாரியம்; பனை நல வாரியம்; அரவாணிகளுக்கு நல வாரியம்; சின்னத் திரை கலைஞர்களுக்கு, பத்திரிகையாளர்களுக்கு, ஊனமுற்றோர் என்று அனைவருக்கும், பாராமுகமாய் கிடந்த மக்களுக்கெல்லாம் இன்றைக்கு நல வாரியம் கண்டிருக்கிற ஓர் உன்னதத் தலைவர் கலைஞர் அவர்கள்தானே! இன்றைக்கு மின் தடை, மின் தடை, இருட்டு என்றெல்லாம் "கூறுகிறார்களே, எங்கே தடை? எங்கே இருட்டு? மனதிலா, கருத்திலா? வட சென்னை அனல் மின் நிலையம் 600 மெகா வாட் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு, மேட்டூர் அனல் மின் நிலையம் 600 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கு, தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1,000 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கு; வட சென்னையில் மின்சார வாரியமும், தேசிய அனல் மின் நிறுவனமும் (NTPC) கூட்டாக 1,500 மெகா வாட் மின்சாரம் தயாரித்திட திட்டம். தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் மின்சார வாரியம், பாரத மின் கழகத்தோடு (BHEL) இணைந்து 1,600 மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்திட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். இன்றைக்கு 2008-2009 ஆம் நிதி ஆண்டில் 1,720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்சார கட்டமைப்பை மேம்படுத்துவதோடு 90 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்பது போன்ற திட்டங்களும், அறிவிப்புகளும் தமிழகத்தை ஒளிமயமாக்கிட அல்லவா! இன்றைக்குச் சொல்லுகிறார்கள்; ஏதோ காகிதத்தின் படையெடுப்பாம், வார்த்தைகளின் வர்ண ஜாலங்களாம். 90 பக்கங்கள் அச்சடிக்கப்பட்டு மக்களுக்காக வழங்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள திட்டங்கள் எல்லாம் காகிதத்தின் படையெடுப்பா? வர்ணஜால ஜோடனையா? இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாக வந்த நாம் மக்களுடைய பிரதிநிதிகளாக மக்களுக்குப் பணியாற்ற வேண்டும். ஏதோ ஆளுங்கட்சியைக் குறை கூறிப் பேசிவிட்டுச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் நமக்கு இருந்துவிட்டால் போதாது.

பிற்பகல் 1-10

இந்த ஆண்டு ரூபாய் 750 கோடியில், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள். படம் பார்ப்பதற்கு, பாடல் கேட்பதற்கு மட்டுமல்ல,

ஆங்கிலத்தில் பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு, யோகா பயிற்சி பெறுவதற்கு, மாணவர்கள் ஆலோசனை பெறுவதற்கு, பொது அறிவுப் பயிற்சி போன்றவை திறந்த நிலைப் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் எனும் இவைபோன்ற அறிவிப்புகள் வார்த்தை ஜாலங்களின் அணி வகுப்பா? வெற்றுத் தாள்களின் படையெடுப்பா? ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள்.

இப்போது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்கு வாரம் இரண்டு முறை, மூன்று முறை என்னுடைய தொகுதிக்குச் செல்கிறேன். அங்கே பஞ்சாயத்துத் தலைவர்களாக அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். அங்கே அந்தக் கூட்டத்திற்கு அவர்கள் தலைமை ஏற்பார்கள், நாங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி வருகிறோம். அப்படிப்பட்ட ஒரு நிலையை, ஓர் அற்புதமான நிலையை, இப்படிப்பட்ட ஜனநாயகவாதியாக தலைவர் கலைஞர் அவர்கள், எங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அருமையான உத்தரவை வழங்கி ஒரு முன்மாதிரியாக இந்த நாட்டை எடுத்துச் செல்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு பேருந்திலே குழந்தை கீழே விழுந்துவிட்டது என்று இங்கே சொன்னபோது, முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் பழுதடைந்துகிடந்த பேருந்து அது என்று சொன்னார்கள். ஒரு வாதத்திற்கு அதை உண்மை என்று எடுத்துக்கொண்டால்கூட, அப்படிப் பழுதடைந்து ஓட்டையாகியிருந்த அந்தப் பேருந்தைக் கழித்துவிடாமல், புதிய பேருந்தை வழித்தடத்திலே விடாமல், குழந்தை கீழே பொத்துக்கொண்டு விழக்கூடிய அளவு நிர்வாகத் திறனற்ற ஆட்சிதான் அன்றைக்கு நடைபெற்றது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களே இன்றைக்கு ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

*2006-2007, 2007-2008* ஆம் ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு *6,025* புதிய பேருந்துகள் வாங்கிட ரூபாய் *477* கோடி நிதி ஒதுக்கீடு. இதுவரை *5,451* புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, இயக்கப்படுகின்றன. மேலும், *3,500* புதிய பேருந்துகள் வாங்கிட ரூபாய் *482* கோடி. ஜனவரித் திங்கள் *3* ஆம் நாள் ஆயிரம் பேருந்துகளை பிராட்வேயில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், நம்முடைய தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய முன்னிலையில், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், ஆயிரம் பேருந்துகளை ஒரே நாளில் பல்வேறு



வழித்தடங்களுக்கு விட்டார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) யாருடைய ஆட்சியில்? போக்குவரத்துத் துறை இன்றைக்கு மின்னி மிளிர்ந்துகொண்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினார்கள். எத்தனைவிதமான பேருந்துகள்? ஏ.சி., வால்வோ பேருந்துகள், தொடர் பேருந்துகள், அடுக்குமாடிப் பேருந்துகள் என மக்களின் தேவையை இன்றைக்கு நிறைவு செய்கின்ற, ஏழை எளிய மக்களின் வாகனமாக இந்தப் பேருந்து வசதிகள் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*29-3-2008* அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திருமுக்கூடல் பகுதி, காஞ்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 7½ கோடி ரூபாய் செலவில் *800* மீட்டர் நீளம் கட்டப்பட்ட பாலத்தினைத் திறந்து, இரண்டு புதிய பேருந்துகளையும் விட்டார்கள். அதில் ஒன்று என்னுடைய தொகுதியில் உள்ள சூனாம்பேடு வழியாக பாண்டிச்சேரிக்கு செல்கின்றது. முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோது அந்தப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இடையிலே ஆட்சிப் பொறுப்பிலே வந்த அ.தி.மு.க. அதை அப்படியே பாராமுகமாய் விட்டுவிட்டது. ஆனால், மீண்டும் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் தூசி தட்டியெடுத்து, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டி முடித்தது. அன்று வெள்ள நேரத்தில் பாலாற்றின் குறுக்கே மறு கரைக்கு வந்து சேர முடியாமல் மக்கள் பதறி நின்றார்களே, அவர்களுக்குப் பேருதவியாக *29* ஆம் தேதி நம்முடைய தளபதி அவர்கள் அந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார்கள் என்ற அந்த நிகழ்ச்சியை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, நேற்று மாலை சென்னையில் உஸ்மான் சாலை-மகாலிங்கபுரம் சந்திப்பில் இன்னொரு மிகப் பெரிய பாலத்தை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மத்திய அமைச்சர் மாண்புமிகு டி.ஆர். பாலு ஆகியோர் சென்னை மக்களுக்கு அந்தப் பாலத்தை அர்ப்பணித்தார்கள். நம்முடைய தளபதி அவர்கள் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோதுதான் *9* பாலங்கள் கட்டப்பட்டன. 'பாலங்களின் ராஜா' என்று தளபதி அவர்களை அன்றைக்கு வர்ணிக்காத மக்களே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இருண்டுகிடந்த, சீரழிந்து கிடந்த சென்னையை, சிங்காரச் சென்னையாக ஆக்குவோம் என்று சொல்லி, இப்படிச் சாலைகளையும், பாலங்களையும் நாட்டு மக்களுக்கு, சென்னை மக்களுக்குப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகக் கட்டித் தந்தவர்தான் இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற நம்முடைய தளபதி என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். உஸ்மான் சாலை-மகாலிங்கபுரம் சந்திப்பிலே பாலத்தைத் திறக்கின்றபொழுது தலைவர் கலைஞர் அவர்கள் நேற்று குறிப்பிட்டார்கள்; ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நல்ல தண்ணீர் கிடைக்காமல் ஃபுளோரைடு கலந்த குடிநீரால் அவதிப்படுகின்ற கிருஷ்ணகிரி, தருமபுரி மக்கள், அவர்களுக்காக கொண்டுவரப்பட்ட அந்த ஒகேனக்கல் திட்டம், எத்தனை ஆண்டு காலமாகப் போராடிப் பெற்ற திட்டம், அந்தத் தண்ணீரைக் கொடுக்கக்கூடாது என்று இன்றைக்குக் கர்நாடகத்திலேயிருந்து வந்து போராடுகிறார்களே!

தமிழகத்திலிருந்து அங்கு செல்கின்ற பேருந்துகளை உடைப்போம் என்று சொன்னார்களாம். தலைவர் கலைஞர் சொன்னார். இந்த வயதிலும் சொன்னார். பேருந்துகளையா உடைப்பார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்காக என் விலா எலும்பை உடைத்தாலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று நேற்று சூளுரைத்தாரே! *(மேசையைத் தட்டும் ஒலி)* மத்திய அரசே இந்த இறையாண்மையைக் காப்பாற்றுங்கள். இப்படி ஒரு மாநிலத்திற்கு மாநிலம் ஒற்றுமை இல்லாமல் ஓர் இடர்பாடு ஏற்படுத்துவது சரியா என்று கேட்ட அந்தக் கேள்வி, அந்தக் காட்சி கண்ணீரை வரவழைத்தது.

*பிற்பகல் 1-15*

இந்த பட்ஜெட், யாருக்காக? இந்த நாட்டு மக்களுக்காக, ஏழையெளிய மக்களுக்காக, பெண்களுக்காக, தாலிக்குத் தங்கம், இந்துமதப் பெண்களுக்கு மட்டுமல்ல, 8 கிராம் தங்கம் மட்டுமல்ல, முஸ்லிம் பெண்களுக்கு கருகமணித் தாலியானாலும் அல்லது கிருத்துவப் பெண்களுக்கு சிலுவைத் தாலியானாலும், எத்தனை கிராம் தாலியாக இருந்தாலும் அத்தனைக்கும் வரி விலக்கு என்று பெண் சமுதாயத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்ற, தாயுள்ளத்தோடு இருக்கின்றவர், தலைவர் கலைஞர் அவர்கள். கூலி வேலைக்குச் சென்று பத்து மாதம் கருவைச் சுமந்து அவள் பெற்றெடுத்த பச்சிளம் குழந்தையை வீட்டில் போட்டுவிட்டு *(மணியடிக்கப்பெற்றது)* மீண்டும் கூலி வேலைக்காகச் செல்வாளே என்று, அதைத்



தடுப்பதற்காக மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் 6,000/- ரூபாயை 6 மாதத்திற்கு தாய் வீட்டுச் சீதனம்போல் தந்தவர் நமது தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் முதல் முறை ரூ.5,000/-, இரண்டாவது முறை ஆட்சிக்கு வந்தபோது ரூ.10,000/-, மூன்றாவது முறை ஆட்சிக்கு வந்தபோது ரூ.15,000/-, ஒரே ஆண்டில் சென்ற முறை ரூ.15,000/-, இப்போது இந்த பட்ஜெட்டில் அறிவித்திருப்பது ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.20,000/- *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படிப்பட்ட திட்டத்தை நாட்டு மக்களுக்குத் தந்திருக்கின்ற தலைவர் கலைஞர், தமிழினத் தலைவர், அறிவின் முதிர்ச்சி, ஆற்றலின் பெட்டகம், நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரு நாயகன், பதினான்கு வயது பள்ளி மாணவப் பருவத்தில் இந்த நாட்டையும் மொழியையும் சிந்தித்து திருவாரூர் வீதிகளிலே ஓடிவந்த, 'இந்திப் பெண்ணே நீ தேடி வந்த நாடு, கோழை நாடு இது அல்ல' என்று போர்க்கொடி ஏந்திய தலைவர் கலைஞர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். *(குறுக்கீடு)* திருமதி சங்கரவல்லி சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி வெறும் வயல்களும், வரப்புகளும் நிறைந்தது. நான் ஆரம்பத்திலிருந்து கேட்கிறேன். நான் நடந்து செல்லும்போது வரப்புகளில் நடந்து செல்கிறேன். அருமைத் தலைவர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களே, ஒரு தொழிற்சாலையைத் தாருங்கள். விதிவிலக்குக் கொடுத்து ஒரு கல்லூரியைத் தாருங்கள். அங்கே நான் படித்த பள்ளி, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களின் மேல் படிப்பிற்கு ஒரு கல்லூரிகூட இல்லை. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கையை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தை உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக

மாற்றித் தாருங்கள். இதையெல்லாம் என்னுடைய தொகுதிக்குத் தாருங்கள். இன்னும் எதை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ அதையெல்லாம் தாருங்கள். இனி அச்சரப்பாக்கம் என்ற தொகுதியின் பெயர் அடுத்த முறை இருக்காது தலைவர் அவர்களே! வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக பேசுகிற வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாக ஒரு வாய்ப்பு வருகின்றபோது நான் அடிக்கடி சொல்கின்ற வார்த்தை, அவனருளாலே அவன்தாழ் வணங்கி என்று நான் ஆரம்பிப்பேன். இந்த வாய்ப்பு என்பது இறைவனாக கொடுப்பது என்பதிலே நம்பிக்கையுடையவன் நான் என்பதனை அந்த வார்த்தைகள் மூலமாக என் நண்பரிடமும், பிறரிடமும் கூறுகின்றபோது அவனருளாலே அவன்தாழ் வணங்கி என்றுதான் கூறுவேன். ஒரு அதிசய ஒற்றுமையை நான் நினைத்துப் பார்க்கிறேன். பத்து வருடங்களுக்கு முன்பு இதே மார்ச் மாதம் கடைசி நாள் 1998-லே நான் இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையிலே பேசிய பதிவுகளை மீண்டும் படிக்க விரும்புகிறேன். 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை டாக்டர் கலைஞர் அவர்கள் படைத்தபோது, என்ன சொன்னார்கள் என்று படித்துப் பார்த்தேன். ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்துள்ளதுதான் அரசு. இந்த மன்றத்தில் அகமும் புறமும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த பல நல்ல கருத்துகளையும், மன்றத்தை அணி செய்யும் நல்ல ஆலோசனைகளையும் இவ்வரசு வரவேற்று அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்று அன்றையதினம் 1971-லே 37 ஆண்டுகளுக்கு முன்னாலே கலைஞர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை இதே அவையிலே 1998 ஆம் ஆண்டு நான் படித்து இருக்கிறேன். படிக்கின்றபோது நான் இன்னொன்றையும் சேர்த்துச் சொன்னேன். கலைஞர் அவர்கள், தன்னுடைய சுய வரலாற்றுப் புத்தகமான "நெஞ்சுக்கு நீதி" மூன்றாம் பாகத்தை எழுதி முடித்துவிட்டு இருந்த நேரத்திலே அந்த மூன்றாம் பாகத்தினுடைய முன்னுரையிலே உள்ள சில வரிகளை நான் இந்த அவையிலே படித்துக் காட்டினேன். நாடாளும் பொறுப்பை மக்கள்



நான்காவது முறையாக என்னிடம் வழங்கியுள்ள நிலையில், நான்காவது பாகத்தை, தன் சுய வரலாற்றுப் புத்தகத்தை நானே எழுதுவேனோ அல்லது நான் எழுதாமலேயே நாட்டு மக்கள் இதயத்தில் இந்த வரலாற்றுக் குறிப்புகள் வரிகளாக வடிவம் கொள்ளுமோ அதை நிர்ணயிக்கப் போவது இயற்கைதான் என்ற ஏக்கத்தோடு, ஒரு இதயச் சுத்தியோடு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற இயற்கை, நான் நம்புகின்ற இறைவன், அந்த வாய்ப்பினை அவருக்கு நிறைவாக நல்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன், வணங்குகிறேன் என்று அன்றைக்குச் சொன்னேன். 10 ஆண்டுகள் ஆயிற்று. இன்றைக்கு ஐந்தாவது பாகத்தை அவர்கள் வருகின்ற மே மாதம் நான்காம் தேதி முதன்முதலாக எழுதுகின்ற வேளையிலே, அதைத் திரும்பவும் சொல்கிறேன், ஐந்தாவது பாகத்தை மட்டுமல்ல, ஆறாவது பாகத்தையும் நிறைவாக எழுதுகின்ற வாய்ப்பினை, நான் நம்புகின்ற இறைவன், அவர் நம்புகின்ற இயற்கை, அவருக்கு வழங்கும் என்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வாழ்த்துகிறேன்.

*பிற்பகல் 1-20*

பேராசிரியர் பெருந்தகை அவர்கள், ஆற்றொழுக்க நடையிலே மிக அற்புதமான ஒரு நிதிநிலை அறிக்கையினை இந்த அவைக்குக் கொடுத்திருக்கிறார்கள். பல்வேறு நல்ல அறிவிப்புகளை அவர்கள் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். வேளாண்மைத் துறைக்கு என்று பல்வேறு அறிவிப்புகள், அதேபோல, கல்வித் துறைக்கு என்று, போக்குவரத்துத் துறைக்கு என்று, நல்வாழ்வுத் துறைக்கு என்று அத்தனை துறைகளுக்கும் மிக அற்புதமான அறிவிப்புகளை நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். அத்தனை அறிவிப்புகளையும் மக்களுக்கு நன்மை செய்கின்ற அறிவிப்புகளாகக் கருதி, காங்கிரஸ் பேரியக்கம் தன்னுடைய வரவேற்பினை முழுதாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. ஆற்றொழுக்கு நடை என்று நான் சொன்னேனே, அதிலே சற்றுகூட மிகையில்லை. 86 வயதான நம்முடைய நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் தங்குதடையில்லாமல் அளித்த அந்த ஆற்றொழுக்கு நடை, உண்மையிலேயே பாராட்டத்தக்கது, போற்றத்தக்கது. அத்தகைய பெரும் அறிவு வாய்ந்த அன்னாருடைய நிதிநிலை அறிக்கையினை வரவேற்றுப் பேசுவதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய ஏழை மக்கள் பயன்படுத்துகின்ற தங்கத்தினுடைய விலை மிகவும் ஏறுமுகமாக இருக்கிறது, வரலாறு காணாத அளவுக்கு, ஒரு சவரன்

10,000 ரூபாய் விற்கின்ற அளவுக்கு இன்றைக்குத் தங்கத்தின் விலை உயர்ந்து இருக்கிறது. தங்கம் என்பது சாதாரண ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய சாதாரண மக்களைக் கவர்ந்து இழுக்கக்கூடிய அணிகளைச் சார்ந்த பொருள் என்பதிலே யாருக்கும் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. அதனால்தான் கலைஞர் அவர்கள், பொன் வைக்கிற இடத்திலே பூ வையுங்கள் என்று சொல்வார்கள். அத்தகைய தங்கத்தினுடைய விலை இன்றைக்கு ஏறுமுகமாக இருக்கிறது. காரணம் என்னவென்றால், online trading. பணம் படைத்தவர்கள் இடைத்தரகர்களாக இருந்துகொண்டு மிகப் பெருத்த அளவிலே stock exchange-லே செய்வதைப்போல வாங்கி விற்று, செயற்கையாக விலையை ஏற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்துகொண்டு, online trading என்ற அந்தச் சூதாட்ட வர்த்தகத்தினை, கற்பனையாக விற்பனை செய்கின்ற அந்த வர்த்தகத்தினைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்தச் சபையின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரே மாதத்திலே மூன்று மாதங்களுக்கு முன்பாக இருந்த விலையும், இன்றைக்கு இருக்கின்ற விலையும் வெவ்வேறாக இருக்கின்ற நிலையிலே இதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

அதேபோல, கட்டுமானப் பணியிலே இருக்கிற இரும்பு விலை, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாக இருந்த விலையும், இன்றைக்கு இருக்கின்ற விலையும் ஏறுமுகத்திலே இருக்கிறது. இதற்கெல்லாம் காரணமாக இருப்பவர்கள் இடைத்தரகர்கள். இந்த இடைத்தரகர்களுடைய தலையீட்டினை எப்படி நாம் தடுக்க முடியும் என்ற வழிவகைகளைக் கண்டறிந்து, அதற்குரிய நடவடிக்கைகளை நம்முடைய மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நில விலையைப் பொறுத்தவரையிலே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு மிக அதிகமான விலையிலே நிலங்கள், வீட்டுமனைகள் விற்கின்றன. சாதாரண ஏழையெளிய மக்கள் வாங்கக்கூடிய நிலையிலே இன்றைக்கு நிலங்கள் இல்லை, வீட்டுமனைகள் இல்லை. இதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், சில பேர் காரணம் சொல்கிறார்கள். வட நாட்டுக்காரர்கள், பணம் படைத்தவர்கள் investment purposes-க்காக, பொருளாதாரம் ஈட்டுவதற்காக, இலாப நோக்கத்தோடு வாங்கிப்போட்டு விற்கிறார்கள், அதனால்தான் இந்த நிலத்தினுடைய விலை அதிகமாகிக்



கொண்டிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு அல்லாமல், வர்த்தகம் செய்கின்ற நிறுவனங்களுக்கு, சில கட்டுப்பாடுகளை நாம் கட்டாயம் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால்தான் இங்கு வாழ்கின்ற ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு வீட்டுமனையும் கிடைக்கும், வசிக்க இடமும் கிடைக்கும். ஆகவே, Real Estate என்று சொல்லப்படுகின்ற இந்த வர்த்தகத்தின் மேல் நம்முடைய மாநில அரசு தன்னுடைய பார்வையைச் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

அதேபோல, தென்னகத்தைப் பொறுத்தவரையிலே, தென்னக முதல்வர்களுடைய, அதாவது ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல்வர்களுடைய கூட்டமைப்பை உருவாக்க வேண்டிய காலக் கட்டாயம் வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏனென்று சொன்னால், நேற்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள், அருமையாகக் கட்டி முடித்திருக்கின்ற ஒரு மேம்பாலத் திறப்பு விழாவிலே கலைஞர் அவர்கள் பங்கேற்றுப் பேசுகின்றபோது, உணர்ச்சிவசப்பட்டு சில வார்த்தைகளைக் கூறியிருக்கிறார்கள். அதை நான் படிக்க விரும்புகிறேன். "...தமிழ்நாட்டு பஸ்களையெல்லாம் உடைப்போம், உள்ளே விட மாட்டோம்; ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றினால் தமிழ்நாட்டு பஸ்களையெல்லாம் உடைப்போம் என்று சொல்லி, அங்கே ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். இதற்குப் பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு எனக்கு வந்திருக்கிறது" என்று அவர்கள் சொல்லி, "இரு மாநில ஒற்றுமை, அங்கு வாழ்வோரும் நாம்தான். இங்கு வாழும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் சகோதரர்கள்தான். கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் என்ற இந்த மொழிகளுக்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் சகோதரர்கள் என்று கருதுகிறவன் நான். யாரோ சில சமூக விரோதிகள் இதைப் பெரிதாக ஆக்கி, இதைத் தீப்பற்றச் செய்துவிடுவார்கள். அதற்கு இடம் தரக்கூடாது என்றுதான் பொறுமையாக இருந்து வருகிறேன். என்னுடைய பொறுமைக்கும் எல்லை உண்டு; அந்தப் பொறுமைக்கும் எல்லை உண்டு. இதை மத்திய அரசும் உணரும் என்று நான் நம்புகின்றேன். இந்தியாவின் ஒருமைப்பாட்டின், இந்தியாவின்

இறையாண்மையின் பெயரால் கேட்கின்றேன். இந்த இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள்" என்று இன்று தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே அதிக வயதும், அதிக அனுபவமும், செறிந்த அனுபவமும், செறிந்த அறிவும் வாய்ந்த கலைஞர் அவர்கள் வைத்த இந்த வேண்டுகோளை நம்முடைய பக்கத்திலே இருக்கிற மாநில அரசுகள், மாநில மக்கள் நன்றாக உணர வேண்டுமென்று இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தமுகத்தான், சென்ற காலத்திலே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே அவர்கள் உருவாக்கிய, Southern States CM's Conclave, தென்னாட்டு முதல்வர்களுடைய கூட்டமைப்பை உருவாக்கி, அதற்குத் தலைமை தாங்குகிற பொறுப்பை, நம்முடைய கலைஞர் அவர்கள் ஏற்க வேண்டுமென்று நான் இந்தச் சபையின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், சில கூட்டமைப்புகள் உருவாகிறபோது, தலைமை யார் என்பதிலே பிரச்சினை வந்துவிடும். மூன்றாவது அணி என்று வந்தபோது, தலைமை யார் என்ற வகையிலேயே சிதறுண்டு போனது. அது மாதிரி இல்லாமல் தென்னகத்தினுடைய முதல்வர்கள் என்று வருகின்றபோது, முதலமைச்சருக்கு இருக்கின்ற, இயற்கையாக இருக்கின்ற அந்த முதிர்ச்சியின் காரணமாக, அந்தச் செறிந்த அனுபவத்தின் காரணமாக, அந்தத் தலைமை அவருக்குக் கிட்டும். அவருடைய வழிகாட்டுதலின்பேரிலே நம்முடைய தென்னாட்டு மக்கள், திராவிட நாட்டு மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகை ஏற்படும் என்று நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாகக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, நுழைவுத் தேர்வை இரத்து செய்து, மிகப் பெரிய வெற்றியை நம்முடைய அரசு கண்டிருக்கிறது. இரத்து செய்தது செல்லும் என்று Supreme Court தீர்ப்பளித்து இன்றைக்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இந்த வகையிலே அண்ணா பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற நம்முடைய துணை வேந்தர் அவர்கள் counselling என்று சொல்லப்படுகின்ற அந்த அனுமதியை ஒரே இடத்தில் நடத்துவோம் என்று பேட்டி தருகிறார்கள். தமிழ்நாட்டில் இப்போது 4 இடங்களிலே அண்ணா பல்கலைக்கழகம் இருக்கின்றது. சென்னையில் இருக்கிறது; அதேபோல பிற இடங்களிலும், 4 இடங்களிலே அண்ணா பல்கலைக்கழகம் இருக்கின்றது. தனித்தனியாக துணை வேந்தர்கள் இருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் பொருட்படுத்தாமல் அரசுச் செயலாளரைக் கலந்து ஆலோசிக்காமல், Pro Chancellor என்ற வகையிலே நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சரைக் கலந்து ஆலோசிக்காமல், 



தன்னிச்சையாக அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. விசுவநாதன் அவர்கள் இந்த அறிவிப்பினை வெளியிட்டிருக்கின்றார்கள். இதிலே நம்முடைய நிலை, அரசினுடைய நிலைப்பாடு என்ன என்று நான் கேட்க விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், 2006-லே 4 இடங்களிலே counselling நடைபெற்றது. 2007-லே வழக்கின் காரணமாக ஒரேயொரு இடத்திலே, சென்னையிலே மட்டும் நடைபெற்றது. ஆனால், இன்றைக்கு நிலைமை மாறியிருக்கிறது. இன்றைக்கு நான்கு இடங்களிலேயும் நடத்தலாமா, ஒரே இடத்திலே நடத்தலாமா என்று முடிவு செய்ய வேண்டியது அரசினுடைய கடமை; அரசினுடைய உரிமை. இந்த அரசினுடைய உரிமையிலே தலையிட்டு, தன்னிச்சையாக ஒரு துணை வேந்தர் இப்படி அறிவிப்புச் செய்வது மாணவர்களிடையே குழப்பத்தை விளைவித்திருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன். ஆகவே அதற்குரிய விளக்கத்தையும், அதற்குரிய முடிவினையும் அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே, சில மாநிலங்களிலே சில பயணத் திட்டங்கள் இருக்கின்றன. இரயிலும், பஸ்ஸிலும் மாறி, மாறி பயணம் செய்யக்கூடிய, combined பயணச் சீட்டு கொடுக்கின்ற முறை அங்கே இருக்கின்றன. உதாரணமாக, திருவான்மியூரிலிருந்து திருவொற்றியூர் செல்ல வேண்டுமென்றால், திருவான்மியூரிலிருந்து சிறு தூரம் பஸ்ஸிலே வந்துவிட்டு, பிறகு இரயிலிலே சென்று, பிறகு பஸ்ஸிலே செல்லக்கூடிய அளவிற்கு இரயில்வே துறையும், நம்முடைய சென்னை மாநகரப் போக்குவரத்துத் துறையும் சேர்ந்து, இந்த combined பயணச் சீட்டை, அதாவது ஒருங்கிணைந்த பயணச் சீட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கச்சத் தீவைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இந்த இழி நிலைமைக்கெல்லாம் காரணம், கச்சத் தீவு மீன் வளம் அதிகமாகக் கொண்ட பகுதியாக இருக்கிறது; கச்சத் தீவை நாம் இலங்கை அரசுக்குக் கொடுத்துவிட்டிருந்தாலும்கூட, நீண்ட கால நிரந்தர குத்தகையின் அடிப்படையிலே, கச்சத் தீவை நாம் மீட்க வேண்டிய சூழ்நிலை வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின்அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பொதுவாக Navy என்று சொல்லப்படுகின்ற கடற்படையில் செல்கின்றவர்கள், பெரும்பாலும் இந்தி பேசுகிறவர்கள். அவர்களுக்கு மீனவர்களுடைய நிலைமை தெரியவில்லை. மீனவர்கள் யார் என்று கண்டறிவதற்கான அந்த மொழி அவர்களுக்கு விளங்கவில்லை. ஆகவே, நம்முடைய தமிழ்நாடு காவல் துறையைச் சார்ந்த அனுபவம் பெற்றவர்களை அந்தக் கடற் படையுடன் சேர்த்து joint patrolling என்று சொல்லப்படுகின்ற அந்த ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியினை மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஈழத் தமிழர்கள் பிரச்சினையிலே காங்கிரஸ் பேரியக்கத்தைப் பொறுத்தவரையிலே நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் சம உரிமையோடு, சம அந்தஸ்தோடு, பிறருக்கு இணையாக, சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதிலே நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். மலேசியா போன்ற நாடுகள் குறித்தும் அதே நிலைதான். அப்படிப்பட்ட நிலையிலே ஈழத் தமிழர்களுக்காக நாங்கள் கண்ணீர் சிந்துகிறோம்; அவர்களுக்காகப் போராடுகிறோம் என்ற நிலையிலே, தீவிரவாதிகளோ, விரும்பத்தகாத சக்திகளோ தமிழ்நாட்டிற்குள் ஊடுருவாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை என்று நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இங்கொன்றும் அங்கொன்றுமாக (மணியடிக்கப்பெற்றது) நடந்தாலும்கூட, அத்தகைய நிகழ்வுகள் கவனத்திற்குரியவை என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள் சில நேரங்களிலே சொல்வார்கள். அற்புதமான உதாரணத்தைச் சொல்கிறபோது, நெருப்பு வளையத்தில் இருக்கிற கற்பூரத்தைப்போல என்று அவர்கள் உதாரணம் காட்டுவார்கள். 18 கிலோ மீட்டர் தொலைவிலே இலங்கையிலே இருக்கிற தீவிரவாதம் கரையேறி வருவதற்கு சில நிமிடங்களே போதும். மிக அருகிலே இருக்கிற நாடு, மாநிலம் என்கிற வகையிலே நம்முடைய தமிழ்நாட்டிற்கு இருக்கின்ற ஆபத்து மிக அதிகம் என்பதனை நாம் மனதிலே பதிய வைத்துக்கொண்டு, தமிழ் உணர்வு என்ற பெயராலே எந்த ஒரு விரும்பத்தகாத சக்தியும் இந்த மண்ணிலே கால் ஊன்றுவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அந்த வகையிலே மிகத் தெளிவாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே இந்தப் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது என்று மிக அற்புதமாக பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசைச் சார்ந்த பொறுப்பாக இருந்தாலும்கூட, மாநில அரசும் எச்சரிக்கையாக இருந்து, இந்த நிலைமை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, ஒரு சில வரிகளை நான் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள ஆர்.கே. பேட்டை வட்டாரம், மிகப் பின்தங்கிய வட்டாரம். மலையும், மலை சார்ந்த பகுதியாகும். அதைத் தனித் தாலுகாவாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அம்மையார்குப்பம் என்ற கிராமத்திலே முழு அந்தஸ்து பெற்ற காவல் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற ஆர்.கே. பேட்டை மகளிர் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதேபோல, கொண்டாபுரம் என்ற கிராமத்தில் இருக்கின்ற பள்ளியினையும் உயர்நிலைப் பள்ளியாக உயத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-4-2008) செவ்வாய்க் கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 10-12-2007 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2008 மார்ச் 31

21. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

22. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

23. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

24. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 2006-2007 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

25. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

26. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

27. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2008 மார்ச் 31]

28. 2006-2007 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு) இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

16. புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்கள், 2007 என்கிற சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

208/04

அரசு மைய அச்சகம், சென்னை–600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.